K. K. 293 [55/7

*Issued* 11—11—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY, 6TH AUGUST 1965

228

**VOLUME XXXI—No. 3**

*CONTENTS*



| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. . | 209-225 |
| II Calling attention to sudden reduction of financial assistance by Co-operatives .. .. .. .. .. .. | 225-226 |
| III Announcements— | |
| (1) The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 .. .. .. .. .. .. | 226 |
| (2) The Madurai University Bill, 1965 .. .. .. .. .. | 227 |
| IV Presentation of Report—Report of the Committee on Public Accounts for 1962-63 .. .. .. .. .. .. | 227 |
| V Government Bill—The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L. A. Bill No. 16 of 1965—*cont.* .. | 227-229 |
| VI Draft Outline of the Fourth Five Year Plan—Discussion .. | 229-319 |
| VII Papers laid on the table of the House .. .. .. . | 319-320 |



V211, 31 N65
N65. 31.3
64917

©
GOVERNMENT OF MADRAS
1965

..slative Assembly Department
Fort St. George, Madras-9

PRICE 50 *Paise*]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 6th August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

V211.31 N65
N65.31-3
64917

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Admission to Polytechnic in Thanjavur district*

* 91 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of students admitted to the various polytechnics in Thanjavur district for the year 1964-65;

(*b*) the number of Harijan students and other Backward Community students among them, respectively; and

(*c*) the number of students to whom scholarships have been granted?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 3[illegible]

(*b*) Harijans—2; Backward Classes—178.

(*c*) 117.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சேர்க்கப்பட்ட மாணவர்களில் அரிஜனங்கள் குறைவாக இருப்பதன் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்ளிகேஷன் [illegible]களையெல்லாம் சேர்த்துவிடுகிறோம்.

**மேல்மாவூர் சர்க்கார் தொழிற் பயிற்சிப்பள்ளியில் மாணவர்கள் அனுமதி**

* 92 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், மேல்மாவூரில் உள்ள சர்க்கார் தொழிற்பயிற்சிப் பள்ளியில் 1964-65-ல் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டார்கள் ?

(இ) அவர்களுள், எத்தனை பேர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) 316 மாணவர்கள்.

(இ) 99 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த 316 மாணவர்களில் 99 மாணவர்களுக்குத்தான் உதவி கொடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் மற்றவர்கள் எப்படிப் படிப்பார்கள் என்று புரியவில்லை. தொழிற் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் அத்தனை மாணவர்களுக்கும் உதவியளிக்க சர்க்கார் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது இருக்கக் கூடிய விதிப்படி 1,500 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ள எல்லோருக்கும் உபகாரச்சம்பளம் கொடுக்கப்படுகிறது. எல்லோருக்கும் ஃப்ரீ எஜுகேஷன் கொடுப்பதற்கான திட்டம் இப்போது இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்டிலே சேருகின்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற கமிட்டியை அரசாங்கம் நியமிக்கின்றது. இதில் காங்கிரசிலே உள்ள எம். எல். ஏக்களை உறுப்பினர்களாகப் போடுகின்றார்கள். எதிர்க்கட்சியில் உள்ளவர்களைப் போடுவதில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் காரணம் சொல்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முன்பே ஒருதரம் நான் சொன்னேன். ஒரு சட்டசபை உறுப்பினருக்கு மேல் அந்தக் கமிட்டிக்குத் தேவையிருந்தால் மற்றவர்களைப் போடுவது வழக்கம். ஒரே ஒரு உறுப்பினர் இருந்தால் ஆளும் கட்சியில் உள்ள ஒருவரைத்தான் போடுவார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பாலிடெக்னிக்குக்கும் இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்டுக்கும் விண்ணப்பம் போடுவதற்கு என்ன கல்வி யோக்கியதாம்சம் பெற்று இருக்க வேண்டும்? பி.யூ.சி. பாஸ் செய்திருக்க வேண்டுமா? அல்லது எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்க வேண்டுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பாலிடெக்னிக்குக்கு தரம் வேறு, இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு தரம் வேறு. பாலிடெக்னிக்குக்கு எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்கவேண்டும். இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு குறைந்த பட்சம் 8-ஆவது பாஸ் செய்திருக்க வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : Blacksmithy, Carpentry பயிற்சிகளுக்கு மாணவர்கள் போதுமான அளவு வருவதில்லை. நாட்டிற்கு அவர்கள் முக்கியமாக வேண்டியிருப்பதால் அவர்கள் வரக்கூடிய நிலையை அனுசரித்து ஏதாவது உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது இருக்கக் கூடிய நிதி நிலைமையில் எல்லோருக்கும் ஃப்ரீ எஜுகேஷன் கொடுப்பதற்கில்லை.



Sir, I want to correct the answer. So far as the Polytechnics are concerned, it is all right. So far as the I.T.I. trainees are concerned they are given free education in the I.T.Is.

*Footwear production-cum-training centres*

* 93 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of and the names of places of footwear production-*cum*-training centres in the State, and the number of trainees and persons employed in each of them?

THE HON. SRI R. VENKATARAMAN : Three Footwear production-*cum*-training centres are run by this Government. Particulars of their location and the number of trainees and workers in each are as follows :—

| Name of the Unit. | Number of Trainees. | Number of Worker. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Footwear Production-*cum*-Service Centre, Perambur. | 18 | 118 |
| Model Footwear Unit Perambur. | | |
| Government Footwear Unit, Pallavaram. | 10 | 37 |

A training centre for the manufacture of fancy leather goods sponsored by the Harijan Welfare department is also functioning at Virudhunagar with 15 trainees.

திரு. து. ப. அழகமுத்து : இதில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு உதவித் தொகை ஏதேனும் வழங்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஸ்டைபெண்ட் கொடுக்கப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்தி சாலைகள் லாபகரமாக வேலை செய்கின்றனவா அல்லது நஷ்டமாக வேலை செய்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 1963-64-ல் பெரம்பூர் யூனிட்டில் 6,000 ரூபாய் லாபம், பல்லாவரம் யூனிட்டில் 23,000 லாபம் கிடைத்திருக்கிறது. திருவல்லிக்கேணி யூனிட்டில் ரூ. 8,000 நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது.

திரு. ஆ. தங்கவேலு : இதற்குக் கல்வி யோக்கியதாம்சம் முக்கியமா அல்லது வகுப்பு யோக்கியதாம்சம் முக்கியமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதில் எடுக்கப்பட்ட மாணவர்கள் குறைந்த பட்சம் எட்டாவது படித்தவர்களாக இருக்க வேண்டும். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு நாம் பிரபான்ஸ் அதாவது சலுகை கொடுக்கிறோம்.

[6th August 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டில் திருவல்லிக்கேணி தயாரிப்பு நிலையம் 8,000 ரூபாய் நஷ்டத்தோடு செயல்பட்டதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கான காரணம் என்ன என்று அறிய முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** திருவல்லிக்கேணி யூனிட்டில் போதிய அளவு இந்தத் தொழில் செய்யக் கூடியவர்கள் இல்லை. ஆகையால் இதை திருவல்லிக்கேணியில் இருந்து பெரம்பூர் யூனிட்டுடன் சேர்க்கலாமா அல்லது பல்லாவரம் யூனிட்டுடன் சேர்க்கலாமா என்று யோசித்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : உற்பத்தி நிலையங்கள் சென்னை நகரத்தைச் சுற்றி மட்டுமே இருக்கின்றன. வேறு மாவட்டங்களில் அவைகளை வைத்தால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வேறு மாவட்டங்களிலும் வைத்திருக்கிறோம். அவையாவன :—

Vaniyambadi Shoe-Makers Industrial Co-operative Society, Vaniyambadi, and Industrial Co-operative Societies in Erode, Namakkal, Thanjavur, Tirunelveli, Tiruchirappalli, Dindigul and Coonoor.

MR. SPEAKER : Question Nos. 94 and 95 are postponed.

### உலர்ந்த மீன் ஏற்றுமதி

*96 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி—விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலர்ந்த மீன்கள் ஏற்றுமதியில் உள்ள கஷ்டங்களை போக்கக்கோரி மெரைன் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சில் (Marine Export Promotion Council) வேண்டுகோள் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) எர்ணாகுளத்திலுள்ள கடல்படு பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி மன்றம் (Marine Products Export Promotion Council) அக்டோபர் மாதத்தில் இவ்வகை வாணிபத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகள் சிலவற்றைக் குறிப்பிட்டது. மேலும் அரசாங்க மீனவத் துறையிலிருந்து மீனவத் துறை உதவி நெறியாளர் ஒருவரை மேற்படி மன்றப் பிரதிநிதியாக நியமனம் செய்ய அனுப்பப்பட வேண்டும் என்றும் அல்லாது நியமிக்கப்படுபவர் கொழும்பு நகரத்தை தலையிடமாகக் கொண்டு, இலங்கைக்கு உயர்ந்த மீன்களை ஏற்றுமதி செய்பவர்களின் நலன்களைக் காக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.



6th August 1965]

(இ) இதற்காக மீனவத் துறையில் அனுபவம் மிக்க உதவி நெறியாளர் ஒருவரை அனுப்பி வைக்க அரசாங்கம் இசைந்துள்ளது. ஏற்றுமதி வளர்ச்சி மன்றத்தில் இறுதியான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த உலர்ந்த மீன்கள் நம் மாநிலத்தில் இருந்து எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன, எவ்வளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பெரும்பாலும் சிலோனுக்குத் தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக இப்போது என்னிடம் தகவல் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : உலர்ந்த மீன்கள் ஏற்றுமதி செய்வதில் ஏற்றுமதி கட்டுப்பாடு இலாகாவில் காலதாமதம் ஆகிறது. இதனால் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்று புகார்கள் கூறப்படுகின்றன. இதற்காக அரசாங்கம் ஏதாவது பரிகாரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதையெல்லாம் கவனத்தில் வைத்துத்தான் ஒரு அதிகாரியைப்போட வேண்டும் என்று கேட்டார்கள். நம்முடைய அரசாங்கம் ஒரு சிறந்த உயர்ந்த அதிகாரியை கொடுப்பதற்கு வாக்குக் கொடுத்திருக்கிறது. இதற்கு இன்னும் பதில் வரவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : It is stated that there is a great demand for prawns in foreign countries. May I know the measures taken by the Government to export prawns to those countries?

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, I do not have these details with me just now.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்கம் தனிப்பட்ட முறையிலே கருவாடு வியாபாரம் செய்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அரசாங்கம் கருவாடு வியாபாரம் செய்வது இல்லை. கருவாடு வியாபாரம் செய்கிறவர்களுக்கு உதவியாக இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : உலர்ந்த மீன்கள் தயார் செய்து ஏற்றுமதி செய்வதற்கு கிழக்குக் கடற்கரை ஓரத்திலே எந்தெந்த இடங்களை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** உலர்ந்த மீன்கள் தயாரிப்பது அரசாங்கம் அல்ல. ஆங்காங்கே மீன் பிடிப்பவர்கள் உலர்ந்த மீன்களை தயாரிக்கிறார்கள். அதற்கு என்று கார்பொரேஷன் இருக்கிறது. மார்க்கெட்டிங் சொசைட்டி இருக்கிறது. அவைகளெல்லாம் உலர்ந்த மீன்களை வாங்கி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

## மீன் பிடிப்பதற்கான அனுமதி

*97 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீன் பிடிக்க விரும்புகிறவர்கள் லைசென்ஸ் வாங்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதேனும் உத்திரவிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் லைசென்ஸ் வழங்கப் படுகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) (1929-ம் திருத்தப்பட்டுள்ள) 1897-ம் ஆண்டு இந்திய மீனவச் சட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நீர் நிலைகளில் மீன் பிடிப்பதை முறைப்படுத்தும் பொருட்டு, விதிகள் இயற்ற மாநில அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அதை அனுசரித்து மாநில அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள சில ஆறுகளிலும் ஏரிகளிலும் மீன் பிடிப்பதை முறைப்படுத்துவதற்குரிய சில விதிகளை அரசாங்கம் 1929-ல் இயற்றியது. இந்தப் பட்டியல், மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டிருப்பதை யொட்டி தக்க வகையில் திருத்தப்பட்டு வருகிறது.

இப்போது அமுலில் உள்ள விதிகளின்படி, அப்பகுதிகளில், அரசாங்கம் வழங்கும் குத்தகைப் பத்திரம் அல்லது உரிமத்தின் கீழ்தான் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டு வருகிறது. மீனவர் கூட்டத்தினரிடையே தகராறுகள் ஏற்படக்கூடிய பகுதிகளில் இம் முறை பின்பற்றப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே மீன் பிடிப்பதற்கான லைசென்ஸ் பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : இதற்கான சில சட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல மாதிரியாக நடக்கிறது. அதாவது சில மாவட்டங்களில் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் முதலியவற்றுக்கு தகுந்தவாறு அனுமதி கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் மாதம், சில இடங்களில் வருடம் என்ற அளவில் அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த அனுமதி, குத்தகை முறையில் விடப்படுகிறதா அல்லது லைசென்ஸ் முறையில் வழங்கப்படுகிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : சில இடங்களில் குத்தகை முறையில் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் லைசென்ஸ் முறையில் வழங்கப்படுகிறது.



திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த அனுமதி வழங்குவது நிலப்பரப்பில் கொடுப்பது போல சமுத்திரத்திலும் கொடுப்பதற்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சமுத்திரத்தில் கொடுப்பதற்கு அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

திரு. எம். எஸ். மணி : ஸார், கிராமங்களில், குளங்களில் மீன் பிடிக்கின்றவர்களுக்கு இந்த லைசென்ஸ் முறை ஏதாவது உண்டா? சாதாரணமாக கிராமங்களில், குளங்களில், அந்த கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் ஒன்றுகூடி வருடத்திற்கு ஒரு முறை மீன் பிடிக்கின்றார்கள். அப்படியென்றால், இவர்கள் எல்லோரும் லைசென்ஸ் வாங்கவேண்டுமா அல்லது தேவையில்லையா என்பதை அறிய வேண்டுகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : கிராமங்களில் குத்தகை முறையில் மீன் பிடிக்கின்றார்கள். நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கின்றவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்ற முறை இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : குத்தகை முறையில், யார் அதிகம் தொகைக்கு கேட்கின்றார்களோ அவர்களுக்கு விட்டு விடலாம். லைசென்ஸ் முறை என்று வரும்போது அதற்கென்று ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : குத்தகை முறையில் சில தகராறுகள் வரும்போது தான் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்றது. மீன் பிடிக்கின்ற வலைக்கு ஏற்றவாறும், என்னென்ன காலத்திற்கு என்பதை கணக்கிட்டும் லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சமுத்திரத்தில் மீன் பிடிக்கின்றவர்களுக்கு எந்த விதமான லைசென்ஸ் முறையும் கட்டுப்பாடும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த முறையில் ஒன்றும் இல்லாமல் இருப்பதினால்தான் மரக்காணம் பகுதியில் ஒருவர் மீன் பிடித்துக்கொண்டிருந்த இடத்தில் மற்றவர்கள் வரக்கூடாது என்று தகராறு ஏற்பட்டு இப்போது அது ஹைக்கோர்ட் வரையிலும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் நேரடியாக இதைப்பற்றி பரிசீலனை செய்து, யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் ஒரு முறையை கொண்டு வருவதற்கு வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கடலில் அப்படி ஒரு வரையறை செய்வதற்கில்லை, இதுவரை பிடிக்கலாம், இதுவரை பிடிக்கக் கூடாது என்று சொல்வதற்கில்லை. அவ்விதம் அனுமதி கொடுப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே தான் அப்படி அனுமதி கொடுக்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

[6th August 1965

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இந்த மீன் குத்தகை விடுவதில் மீனவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** மீனவர்களுக்குத்தான் முதல் சலுகை. அதற்குப் பின்னால் தான் மற்றவர்களுக்கு.

### மண்டபத்தில் நார்வே மீன் பிடிப்புத் திட்டம்

*98 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மண்டபம் நார்வே மீன் பிடிப்புத் திட்டத்தில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் விசைப்படகுத் தேர்வுக்கு மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா ?

(இ) ஆம் என்றால் எத்தனை பேர் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஆம். மண்டபம் நார்வே மீன் பிடிப்புத் திட்டத்தில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் விசைப் படகு தேர்வுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 60 மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஸார், இந்த விசைப்படகு பயிற்சிக்கு சரியான முறையில் ஆட்களை தேர்ந்தெடுக்கவில்லை என்று நினைக்கிறேன். கடலே பார்க்காதவர்கள்கூட அவர்கள் மீனவர்கள் என்று கருதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இக்குறையை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கடலே பார்க்காதவர்களை தேர்ந்தெடுக்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்கள் கடலையே பார்த்திருக்கமாட்டார்கள் என்று சொல்வது திரு. சீமைச்சாமி அவர்களுக்கு பொருந்தாது என்று நினைக்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, இந்த பயிற்சிப் பள்ளியில் என்னென்ன பயிற்சி தரப்படுகிறது ? இதற்கு எவ்வளவு செலவு ஆகும் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இப்போது தான் பயிற்சி ஆரம்பித்திருக்கிறார்கள். பயிற்சிக்கு செலவு என்ன ஆயிற்று என்று இப்போது சொல்வதற்கில்லை. இதில் வலை பின்னுவது, கடலில் நெடுந்தூரம் செல்வது, மீன்பிடிக்கின்ற சில முறைகள், போட் ரிப்பேர் செய்கின்ற முறை முதலிய பயிற்சிகள் சொல்லிக் கொடுக்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மீனவர்களுக்கு ஏதாவது இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கிறதா ? இல்லையென்றால் அவர்கள் கடலில் நெடுந்தூரம் செல்வதால் அடிக்கடி பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்காக மீனவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?



6th August 1965]

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஆழ்கடலில் மீன் பிடிக்கின்றவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரவேண்டும் என்று இன்ஷூரன்ஸ் கம்பெனியிடத்தில் கேட்டோம். அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன, மீனவர்களால் இதை சரிவர செய்ய முடியாது என்றும் சொல்லுகின்றார்கள். அரசாங்கம் இதைப்பற்றி மேலும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த விசைப்படகு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஏதாவது ஸ்டைஃபண்ட் கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஸ்டைஃபண்ட் கொடுக்கிறோம்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** விசைப்படகு பயிற்சியில், எல்லா மாவட்டங்களிலுள்ளவர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இது இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சலில் இது போன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளவர்களுக்கு அதில் முதல் இடம் கொடுக்கப்படும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இந்தப் பயிற்சி நிலையத்திற்கு பயிற்சி பெறுவதற்காக இதர மாவட்டங்களிலிருந்து மனு செய்யவில்லையா ? அமைச்சர் அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ளவர்களுக்கு அந்தந்த மாவட்டத்தில் ஏற்படுத்தக் கூடிய பயிற்சி நிலையத்தில் முதலிடம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால் தூத்துக்குடி பயிற்சி நிலையத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளவர்கள் மாத்திரம் தான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்களா ? நானறிந்த மட்டில் இதர ஜில்லாவிலுள்ளவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** என்னிடத்திலிருக்கின்ற தகவல் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற பயிற்சி நிலையத்தைப்பற்றி மட்டும் தான். இதில் 156 விண்ணப்பங்கள் வந்தன, அதில் 125 பேர்கள் இன்டர்வ்யூக்காக அழைக்கப் பட்டார்கள். 60 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்த மண்டபம் கேம்ப் நம்முடைய சர்க்காருக்குச் சொந்தமானது அல்ல, சிலோன் சர்க்காருக்குச் சொந்தமானது என்று சொல்லுகிறார்களே, இப்போது இந்த இடம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறது ?

**கனம் சபாநாயகர் :** இந்தக் கேள்விக்கு இந்த அமைச்சர் எப்படிப் பதில் சொல்ல முடியும் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதற்கான பதிலை தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் தனியாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, விசைப்படகு பயிற்சி எத்தனை காலம் கொடுக்கப்படுகிறது ? இவர்கள் இந்த பயிற்சியை முடித்த பின்னால் தானாகவே இவர்கள் தொழில் செய்து கொள்வதற்கு சர்க்கார் உதவி செய்யுமா ? என்னென்ன உதவிகள் கொடுப்பார்கள் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தேர்ச்சி பெறுகின்றவர்களுக்கு விசைப்படகு வழங்குவதில் முதலிடம் கொடுக்கப்படும்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** ஸார், இதில் பயிற்சி பெற விரும்புகின்றவர்கள், மீனவர்கள் அல்லாத வேறு மக்களாக இருந்தாலும் அவர்களுக்கும் இதில் பயிற்சி அளிக்க சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** மீனவர்களுக்கு இதில் முதலிடம் கொடுக்கப்படும். மற்றவர்கள் விரும்பினால், மீனவர்களுக்கு கொடுத்தது போக மீதி இருந்தால், போதிய இடம் பாக்கியிருந்தால், மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** ஸார், இந்த பயிற்சித் திட்டத்தில் யார் பயிற்சி கொடுக்கிறார்கள் ? நம் நாட்டிலுள்ளவர்கள் தானா அல்லது வெளி நாட்டிலிருந்து யாராவது வரவழைக்கப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** நம் நாட்டிலுள்ளவர்கள் தான், இந்த இலாகாவிலுள்ள உதவி இயக்குநர் பயிற்சி அளிக்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நம் மாநிலத்தில் விசைப்படகுகள் எங்கெங்கு தயார் செய்யப்படுகின்றன ? இதற்காகும் செலவு என்ன ? இதை வாங்குபவர்கள் முழு விலையும் கொடுத்து வாங்குகிறார்களா ? அல்லது சர்க்காரிலிருந்து ஏதாவது சப்ஸிடி கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது இந்தக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்றாலும், நான் விடை அளிக்கிறேன். நாகப்பட்டினத்திலும், சென்னையில் மெரினாவும் ராயபுரத்திலும் விசைப்படகு தயார் செய்யப்படுகிறது. இதில் 25 அடி, 30 அடி, 32 அடி படகு என்று பல மாதிரிகள் இருக்கின்றன. இதற்காகும் விலை போன்ற விபரங்கள் இப்போது என்னிடமில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நார்வே மீன் பிடிப்புத் திட்டம் என்று சொல்லுகிறோம். இதில் நார்வே முறை பின்பற்றப்படுகிறதா அல்லது, நார்வேயிலிருந்து ஏதாவது உதவி பெறுவதால் இவ்விதம் குறிப்பிடுகிறோமா ? அப்படியென்றால் எவ்வளவு உதவி கொடுக்கப்படுகிறது என்பதை அறியலாமா ?





**கனம் திரு. கோ. பூவராகன் :** எவ்வளவு உதவி என்பது பற்றி இப்போது விவரமில்லை. நார்வே அரசாங்கம், மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் இந்த மூன்றும் சேர்ந்து பங்கு போட்டு திட்டம் நடத்தப்படுகிறது. படகு அமைப்பில் நமக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

*Tractors for Panchayat Unions*

*99 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—whether there is any proposal to provide every Panchayat Union in the State, with a tractor with a view to augment food production?

The Hon. Sri S. M. A. MAJID : There are certain practical difficulties in implementing the suggestion. Unless adequate servicing and repair facilities and the availability of spare parts are assured, the supply of a tractor to a Panchayat Union will not serve any purpose.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, யூனியன்களில் டிராக்டர்கள் இருந்தால் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். இப்போது ஜீப்கள் வைத்திருக்கிற யூனியன்கள், அந்த ஜீப்களை ரிப்பேர் ஆனால் பக்கத்தில் உள்ள பி. டபிள்யு. டி. வொர்க்ஷாப்பில் போய் ரிப்பேர் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட முறையிலே டிராக்டர்கள் விஷயத்திலும் ஏற்பாடு செய்து கொடுக்கலாம். கடன் கொடுத்து தவணை முறையில் திரும்பப் பெற்றுக் கொள்ளும் முறையை ஏற்படுத்தி டிராக்டர் வாங்கிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரு சில பஞ்சாயத்து யூனியன்கள் விவசாயிகளுக்காக அம்மாதிரி டிராக்டர் வேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள். அந்த மனுக்களை வைத்துக்கொண்டு எந்த முறையில் அவர்களுக்கு டிராக்டர் கொடுக்கலாம், டிராக்டர் கொடுத்தால் வருஷம் பூராவும் விவசாயிகளுக்கு அதை ஈடுபடுத்த வாய்ப்பு இருக்கிறதா, பஞ்சாயத்து யூனியனுக்கு வாய்ப்பு இருக்கிறதா, அந்த முறையில் கொடுக்கலாமா என்று சர்க்கார் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சரைக் கலந்ததிலும் அவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஹையர் பர்ச்சேஸ் ஸ்கீம்படி எப்படி கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டிகள் தனிப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்களோ அந்த அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கலாமா என்றும், முதலில் 2-3 பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பரீட்சார்த்தமாக வழங்கலாமா என்றும் சர்க்காருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. ம. கமலநாதன் :** ஸார். டிராக்டர்கள் வழங்குவதில் பிராக்டிகல் டிஃபிகல்ட்டீஸ் இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார்கள். அப்படி என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

[6th August, 1965

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ரிப்பேர் ஏற்படலாம். எந்த இடத்தில் ரிப்பேர் செய்வது என்பது ஒன்று. டிஸ்டிரிக்ட் ஹெட் குவார்ட்டர்ஸ் அல்லது டிவிஷனல் ஹெட்க்வார்ட்டர்களில் ரிப்பேர் செய்ய ப்ராப்பர் மென் வேண்டும். இதையெல்லாம் பரிசீலனை செய்து தான் முடிவு செய்ய முடியும்.

**திரு. செ. சதாசிவம்:** பஞ்சாயத்து யூனியன்களுக்கு விவசாய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை பூராவும் செலவழியாது இருந்தால் அந்த இனத்திலிருந்து டிராக்டர் வாங்க விரும்பினால், ஹயர் பர்ச்சேஸ் ஸ்கீம் போன்ற முறையில் அவர்களுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களுக்கு டிராக்டர் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி ஏற்கெனவே டிராக்டர்கள் வேண்டுமென்று கேட்ட பல பஞ்சாயத்து யூனியன்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து முதன் முறையாக பரீட்சார்த்தமாக 3, 4 பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து, பிறகு மேலும் விஸ்தரிக்கும் முயற்சியை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, there was a provision in the schematic budget under the over-all programme of the Community Development Scheme for establishing a Tractor Service Organisation and inasmuch as there is not such a provision now, will the Government at least consider the desirability of establishing a Tractor Service Organisation at the Panchayat Union level for repairing tractors which are purchased by ryots who find it difficult to get them repaired by private companies?

THE HON. SRI S. M. A. MAJID : There is no such proposal at present.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இப்போது டிராக்டர் கொடுப்பதற்கு உரிய வசதிகள் இல்லையென்றாலும், நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலாவது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** முன்பே கேள்விக்கு பதில் அளிக்கும் போது நான் குறிப்பிட்டேன். வெவ்வேறு பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலை வசதி எப்படி இருக்கிறது, பரீட்சார்த்தமாக எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து கூடுமான வரையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுப்பதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். சில பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் பணத்திலிருந்தே வாங்கிக்கொள்கிறோம், ஹயர் பர்ச்சேஸ் அவசியம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அவைகளைப் பரிசீலனை செய்யவேண்டும், வருஷம் பூராவும் விவசாயிகளுக்கு உபயோகப்படுத்துகிற வாய்ப்பு இருக்கிறதா என்று பரிசீலனை செய்யவேண்டும். ஆக இவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டு கூடுமான வரையில் பஞ்சாயத்து யூனியன்களின் விவசாய



6th August 1965]

காரியங்களில் ஈடுபடும் அம்சமாதலால் சர்க்கார் இதைப் பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எந்தெந்த முறைகளிலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் டிராக்டர்கள் வழங்குவது என்று பரிசீலனையில் இருந்தாலும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கட்டாயம் ஒரு டிராக்டர் இருந்துதீரவேண்டுமென்ற கொள்கையைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதற்கான முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நான் முன்பு குறிப்பிட்ட அளவில் உள்ளதைப் பரிசீலனை செய்து மேலும் டெஃபிஸிட்டாக இருக்கிற பஞ்சாயத்து யூனியன்களுக்கு எப்படி வழி செய்து வழங்க முடியும் என்றும் பரிசீலனை செய்தால்தான் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டபடி எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் வழங்கும் கொள்கையைப் பரிசீலனை செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி:** அமைச்சர் அவர்கள் பரிசீலனை பண்ணுகிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன பரிசீலனை? டிராக்டர் வாங்கி பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்தால் மணிக்கு இவ்வளவு வாடகை என்ற முறையில் வைக்கும் போது நல்ல கிராக்கி இருக்கும். பஞ்சாயத்து யூனியன் என்பது 60,000-க்கு மேல் ஜனத்தொகை உள்ள பிரதேசம். அங்கே எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். டிராக்டர் வாங்கிக் கொடுத்தால் உற்பத்திப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கும். ஆகவே, ஒவ்வொரு யூனியனுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் தெளிவாகவும், சுருக்கமாகவும் உப கேள்வி கேட்கவேண்டும்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** விவசாய அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவது பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பு என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த முறையில் டிராக்டர் வழங்குவதன்மூலம் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சர்க்கார் கருதுகிறது. முன்பு குறிப்பிட்டபடி நடுவில் பிரச்னைகள் இருப்பதால் அவைகளை நல்ல முறையில் சிந்திக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தனிப்பட்ட விவசாயிகள் டிராக்டர்கள் வாங்கி பழுது பார்ப்பதிலும் சரி, எப்படிச் செய்ய வேண்டுமென்று தெரிந்து வைத்துக்கொண்டு நடத்துகிறார்கள். இதை சர்க்கார் வாங்கி ஒவ்வொரு பிளாக்குக்கும் கொடுத்து ஜீப்புகளை ரிப்பேர் செய்கிற மாதிரி ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம். விவசாய உற்பத்தியைப் பெருக்க பிளாக் ஒன்றுக்கு ஒரு டிராக்டர் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நான் இது பற்றி ஏற்கெனவே பதில் அளித்துவிட்டேன்.

[6th August 1965

திரு. முனு. ஆதி : பண வசதி படைத்த பல மேஜர் பஞ்சாயத்துக்கள் இப்போதே டிராக்டர் வாங்கி சிறிய வட்டாரத்திலேயே விவசாயத்திலே ஈடுபடுத்தும் அளவில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது யூனியன் அளவில் இருக்கும் விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்த முடியாது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சில டவுன் பஞ்சாயத்துக்கள் இம்மாதிரி டிராக்டர்களை விவசாய காரியங்களுக்காக வாங்கவில்லை. சாமான்களை எடுத்துச் செல்ல, கழிவுப் பொருள்களை எடுத்துச் செல்ல, லோன் மூலம் அல்லது கிராண்ட் பெற்று வாங்கிக்கொள்ளலாம். விவசாய காரியங்களுக்கு உபயோகித்தால் நல்லதுதான். அம்மாதிரி சில பஞ்சாயத்துக்கள் டிராக்டர்களைப் பெற்று உபயோகித்தால் போற்றக் கூடியதுதான் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வருவாய் ஈட்டித் தரத் தக்க செலவினமாகத் தான் இருக்கிறது. வருவாய் ஈட்டித் தராத செலவினமாக இல்லை. வருவாய் ஈட்டித் தருகிற முறையில் டிராக்டர் வாங்கிக் கொடுப்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறதா ? அதை நிறைவேற்ற முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்னையில் இன்னும் முடிவு எடுக்கவில்லை என்றுதான் விவரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் விவசாய காரியங்களுக்காக டிராக்டர் வாங்கி அதன் மூலம் உற்பத்தி பெருகினால் நல்லதுதான். ஆனால் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன ; சில பஞ்சாயத்து யூனியன்கள் டெபிசிட்டில் இருக்கின்றன. பல இடங்களில் வெட் கல்டிவேஷன் ஜாஸ்தியாக இருக்கிறது. டிரை கல்டிவேஷன் இருக்கிற இடத்திலேகூட கல், கரடு, மேடு அதிகமாக இருக்கிறது. விவசாயத்திற்கு லாயக்கு அற்றதாக இருக்கிறது அதிகமான இடம். இதையெல்லாம் நல்ல முறையில் பரிசிலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும்.

திரு. எம். முருகையன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இதைப் போல ஒரு கேள்வி வரும்போது அமைச்சர் அவர்கள் சர்க்கார் பரிசிலனை செய்து கொண்டு வருகிறது என்று சொன்னார்கள். பரிசிலனை எத்தனை ஆண்டுகள் நீடிக்கும் ? இது முக்கியமான உணவுப் பிரச்னையாக இருப்பதால், நிதி வசதி உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் பொது நிதியிலிருந்து வாங்கிக்கொள்ள உத்தரவு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எவ்வளவு தீவிரமாகச் செய்ய முடியுமோ அந்த முறையில் பரிசிலனை செய்து கூடுமான வரையில்



6th August 1965]

சீக்கிரத்தில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் டிராக்டர் வாங்கி விவசாய உற்பத்தியில் ஈடுபட ஊக்கம் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகத்தான் முதலில் குறிப்பிட்டேன்.

திரு. ம. கமலநாதன் : சார், இந்த பஞ்சாயத்து யூனியன்கள் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டன. அப்படி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து டிராக்டர் தேவை என்று விண்ணப்பம் வந்துகொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். மேலும், கனம் உறுப்பினர் கேட்டது போல சென்ற ஆண்டு மட்டுமல்ல, பல ஆண்டுகளாக பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பரிசீலனை எப்போது முடியும் . . .

MR. SPEAKER : The Hon. Member is putting the same question again.

திரு. ம. கமலநாதன் : இதிலே இம்ப்ளிமெண்ட்ஸ் கொடுக்கிறோம். டஸ்டர்ஸ், ஸ்ப்ரேயர்ஸ் எல்லாம் 4,000-5,000 ரூபாய் விலையில் கொடுத்தது உபயோகப்படாமல் இருக்கிறது. அந்தத் தொகையை வேறு வகையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று உத்திரவு போட்டாலும் போதும். ரஷ்யன் டிராக்டரை 7,000 அல்லது 8,000 ரூபாய் செலவில் வாங்கிக்கொள்ளலாம். அந்த மாதிரி உத்தரவு கொடுக்க ஏதேனும் சங்கடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத். ஏற்கெனவே கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைத்தான் திருப்பிக் கேட்கிறார்கள்.

திரு. பீ. கலியாணசுந்தரம் : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எத்தனை பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து இம்மாதிரி கோரிக்கைகள் வந்தன ? அதிலே எத்தனை மனுக்களை பரிசிலனை செய்து முடித்து அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். 9-00 a.m.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எருமப்பட்டி , சேலம் டிஸ்டிரிக்ட் ; நெல்லிக்குப்பம், ஸவுத் ஆர்காட் டிஸ்டிரிக்ட் ; கொள்ளடம், ஆனைக்காரச் சத்திரம், தஞ்சை ஜில்லாவில், முடைக்குறிச்சியில் தான் தாங்கள் பணம் போட்டு வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். மற்ற பஞ்சாயத்து யூனியன்கள் ஹயர் பர்சேஸ் ஸ்கீமில்தான் கேட்கிறார்கள். இப்பொழுது சில இடங்களுக்கு பரீட்சார்த்தமாக சாங்ஷன் செய்து, அது எப்படி வேலை செய்கிறது என்று பார்த்து, பின்புதான் இதுபற்றி உத்தரவு போடவேண்டும். மாநில முழுவதும் எத்தனை பஞ்சாயத்து யூனியன்கள் அப்ளை செய்தன என்ற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

### புதுக்கோட்டை நகராட்சிக்கு நில ஆர்ஜிதம் செய்தல்

* 100 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வள்ளுவர் நகர், காந்தி நகர், உசிலங்குளம், அடப்பன்குளம், காமராஜர் நகர்,

[6th August 1965

ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பு இடங்களை assignment செய்து கொடுப்பது பற்றி நகராட்சியிலிருந்து கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவு யாது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. முருகையன் :** கலெக்டரிடம் சென்று இது சம்பந்தமாக கேட்டபொழுது, தாங்கள் மேலே சர்க்காருக்கு தகவல் அனுப்பியிருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அங்கு இருக்கிற மக்களுக்கு எந்த நேரத்திலும் காலி செய்ய வேண்டும் என்று நகராட்சியிலிருந்து நோட்டீஸ் பிறப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனை மீண்டும் பரிசீலனை செய்தாவது கலெக்டரிடமிருந்தாவது வேண்டிய தகவல் தெரிந்து, அங்கு வாழ்கின்ற மக்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலையிலிருந்து ஏதாவது பரிகாரம் தேடுவதற்கு சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மூலக் கேள்விக்கு பதில் சொல்லும் பொழுது, இந்த விதமான பிரச்னையை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்று குறிப்பிட்டேன். கமிஷனரிடம் விவரம் கேட்டதற்கு, சம்பந்தப்பட்ட டி.ஆர்.ஓ. மூலம் விவரம் எழுதி அனுப்பியிருப்பதாகவும், அது நல்ல முறையில் பரிசீலனையில் இருந்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த நிலத்தை குடியிருப்புக்காக அடமானம் செய்யவேண்டும் என்று முனிசிபாலிடி தீர்மானம் போட்டு, 'லே அவுட்' போட்டு அதை சிபார்சு செய்து, டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் அந்த 'லே அவுட்டை' அங்கீகாரம் செய்து, அலைன்மெண்டு ஆகவேண்டிய தருணத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் எப்படி இல்லை என்று சொன்னார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கனம் அமைச்சர் திரு. ராமையா அவர்களுக்கு ஞாபகம் இருக்கும், முனிசிபல் தேர்தலுக்கு முன்பு 'நான் இருக்கிறேன், அடமானம் பெறுவதற்கு' என்று சொல்லித்தான வோட்டு பெற்றார்கள். ஆகவே, துரிதமாக இந்த நிலத்தை அலைன் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கோரிக்கை சர்க்காருக்கு வந்ததா என்ற கேள்விக்கு வரவில்லை என்று பதில் சொன்னேன். இந்தப் பிரச்னை நெடு நாளைய பிரச்சனையாக இருக்கலாம். இம்மாதிரி கேள்வி வந்தவுடன் கமிஷனரை விவரம் கேட்டதற்கு சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்பியிருப்பதாக தகவல் கிடைத்தது. காமராஜ் நகர் குடியிருப்பு சம்பந்தமாக டைரக்டர் ஆப் டவுன் பிளானிங்குக்கு 'லே அவுட்' அப்ரூவலுக்கு எழுதியிருப்பதாகவும், அவைகளையெல்லாம் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கமிஷனர் பதில் தந்திருக்கிறார்கள்.

**திரு. பி. முருகையன் :** அங்கிருக்கிற நகராட்சித் தலைவர் அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிற மகஜர் ஒன்றை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அது சர்க்காருக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குள்ள காரணங்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.



6th August 1965]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வந்து சேரவில்லை என்றால், வரவில்லை என்று தான் சொல்ல முடியும்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO SUDDEN REDUCTION OF FINANCIAL ASSISTANCE BY CO-OPERATIVES.

SRI M. S. SELVARAJAN : I wish to call the attention of the Hon. Minister for Co-operation to a matter of urgent public importance, namely, sudden reduction of financial assistance by Co-operatives to the agriculturists, weavers and other weaker sections of the community and thereby arresting the growth of production and affecting the economic welfare of the poor at large.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The agriculturists are provided cultivation credit through the agricultural credit societies with reference to the cost of cultivation for the different crops. The volume of credit (loans) thus provided has been steadily on the increase year after year as shown below :—

| | RUPEES IN CRORES. |
|---|---|
| 1961–62 .. .. .. .. | 30·51 |
| 1962–63 .. .. .. .. | 36·92 |
| 1963–64 .. .. .. .. | 42·94 |
| 1964–65 .. .. .. .. | 44·07 |

The land mortgage banks provide long-term credit payable in 10 to 20 years for the purpose of development of lands and discharge of prior debts. While these banks issued Rs. 3.27 crores during the year 1963–64, the amount issued during the year 1964–65 was Rs. 3.51 crores.

Thus, there has been increase in the provision of credit to the agriculturists by the Co-operatives for the previous year.

*Assistance to Weavers Co-operatives.*—There has been no reduction in the financial assistance given by the Weavers Co-operatives to the members for production purposes. In the beginning of the Third Five-Year Plan, (i.e.) 1961–62, the total credit limit enjoyed by the Weavers Co-operatives amounted to Rs. 229 lakhs while it was increased to Rs. 391 lakhs in 1964–65. Even taking Five-Year Plan provision, the quantum of provision of the Second Five-Year Plan was Rs. 712·42 lakhs, while in the Third Plan, provision is Rs. 747 lakhs. For the Fourth Plan a provision of Rs. 11.35 crores has been proposed. Provision for assistance given by Government

[Sri N. Nallasenapathi Sarkarai Manradiar] [6th August 1965

to Weavers Societies has been on the increase from one plan period to another plan period and consequently the assistance given by the Societies also increased.

*Assistance to other weaker sections.*—There are 97 labour contract societies with about 15,000 labourers including Harijans, as members. Towards the share capital, working capital, implements, etc., a sum of Rs. 2.66 lakhs was provided as subsidy and loans by the Government during the year 1964–65 as against Rs. 1.12 lakhs during the previous year.

There are fourteen Salt Manufacturing Co-operative Societies of which 13 have been formed by workers and one by licensees. Out of thirteen societies, 6 societies are exclusively for Harijans numbering 750. Co-operative Central Banks provide finance required by the Salt Workers Co-operative Societies to a certain extent. Under the rules governing the grant of loans to licensing salt manufacturers, the Government of India also assist the societies for developing salt production. The State Government have also been assisting these societies by granting subsidies for construction of platforms, godowns, etc., loan for working capital and share capital and free services of co-operative staff. There is no reduction in the financial assistance by Salt Manufacturing Co-operatives.

There are 385 fishermen co-operative societies in the State as on 31st March 1964. They extend financial assistance to fishermen like sanction of long-term and medium-term loans, loan for construction of godowns, etc. There has been no decrease in the provision of financial assistance to the fishermen co-operatives.

There are various other types of societies formed exclusively for the benefit of Harijans and hill tribes like land colonisation societies, washermen co-operative societies, milk supply societies, marketing societies, barbers' societies, etc. There is no reduction in the grant of financial assistance by these societies to their members.

It is seen from the above that there has been no change in the policy of this Government necessitating sudden reduction of financial assistance by co-operatives to the agriculturists, weavers and other backward classes of the community. The statement of the hon. Member is too general. If the hon. Member cites any specific instance, a suitable reply will be given.

## III.—ANNOUNCEMENTS.

### (1) THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (AMENDMENT) BILL, 1965

MR. SPEAKER : I have to announce to the House that I have received a message from the Hon. Chairman of the Madras Legislative Council that the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 17 of 1965) has been passed by the Legislative Council without any amendment.



### (2) THE MADURAI UNIVERSITY BILL, 1965.

MR. SPEAKER : I have also to announce to the House that I have received the following message from the Hon. Chairman of the Madras Legislative Council.

"That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 Members (12 Members of the Legislative Assembly and 6 Members of the Legislative Council) to consider the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri R. Venkataraman.
2. Dr. A. Lakshmanaswami Mudaliar.
3. Sri K. Balasubramania Ayyar.
4. Sri S. Jayarama Reddiar.
5. Sri K. Anbazhagan.
6. Sri K. Rajaram.

## IV.—PRESENTATION OF REPORT—REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS FOR 1962–63.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, 1962-63-வது ஆண்டின் தமிழக அரசின் வரவு-செலவு கணக்கைப் பற்றிய பொதுக் கணக்குகள் குழுவின் அறிக்கையை இந்த மன்றத்தின் முன் தங்கள் மூலம் வைக்கிறேன்.

## V.—GOVERNMENT BILL.

### THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1965 (L.A. BILL NO. 16 OF 1965)—*cont.*

*Clause* 6.

MR. SPEAKER : The first amendment to this clause, given notice of by the hon. the Leader of the Opposition, that the clause shall be omitted, is not in order as it has merely the effect of a negative vote. The hon. Member Sri S. Madhavan, who has given notice of another amendment to this clause, is not in his seat.

Clause 6 was put and carried.

Clauses 7 to 10 were put and carried.

*Clause* 11.

MR. SPEAKER : The question is—

"That Clause 11 do stand part of the Bill".

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"In clause 11, in new section 94, in the proviso, *omit* the words "selection for"."

Sir, this amendment is intended only to improve the language of the section. The words " selection for " are redundant.

MR. SPEAKER : The question is—

" In clause 11, in new section 94, in the proviso, omit the words " selection for ".

The amendment was put and carried.

Clause 11, as amended, was put and carried.

Clause 12 was put and carried.

*Clause 1.*

MR. SPEAKER : The question is—

" That clause 1 do stand part of the Bill ".

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

*For* sub-clause (2) of clause 1, *substitute* the following :—

" (2) It shall come into force on 1st April 1967 ".

(There was no seconder for the amendment.)

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to point out that nobody has seconded the amendment.

MR. SPEAKER : Yes, the amendment falls through for want of a seconder.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965), as amended, be passed ".

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது மூன்றாவது கட்டமாக விவாதத்திற்கு வந்திருக்கிறது. முதல் இரண்டு கட்டங்களிலும் இந்த மசோதா பற்றிய கருத்துக்களை எதிர்க்கட்சியினர் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். இந்த மசோதா எப்படி அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற ஒன்றாக அமைந்திருக்கிறது என்பதற்கான காரண காரிய விளக்கங்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி, இதைப் பொறுக்குக் குழுவிற்கு விடுவதன் மூலமாக நல்லதொரு சூழ்நிலை, நல்லதொரு நிலைமை ஏற்படுத்த வேண்டும் என்ற காரண காரிய விளக்கங்களை எதிர்க் கட்சியினர் மிகத் தெளிவாக எடுத்து வைத்தும் ஆளுங் கட்சியினர் அலட்சியமாக, மிகப் பிடிவாதமான போக்கிலே இந்த உரிமை பறிக்கின்ற சட்டத்தைக் கொண்டுவந்தே தீருவது என்ற முறையில் வந்திருக்கிறார்கள். முதல் கட்டத்திலே நாங்கள் தெளிவுபட விளக்கிக் கூறினோம். அந்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இரண்டாவது





கட்டத்திலும் மிகத் தெளிவாக நாங்கள் எடுத்துக் கூறினோம். அந்தச் சமயத்திலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகையால், மூன்றாவது கட்டத்திலும் இதை எப்படியேனும் நிறைவேற்றியே தீருவது என்று ஆளும் கட்சியினர் இதைக் கொண்டுவந்திருக்கிற காரணத்தினால், இந்த ஆட்சியினருடைய போக்கிலே நாங்கள் கொண்டிருக்கிற அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையிலும், இந்த மசோதாவை இப்பொழுது நிறைவேற்றுவதற்கு எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையிலும் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று மிகத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

(எதிர்க் கட்சிகளைச் சார்ந்த எல்லா கனம் அங்கத்தினர்களும் வெளிநடப்பு செய்தனர்.)

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I may mention that walk-out is a democratic process recognised in Legislatures.

MR. SPEAKER : The question is—

" That the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965), as amended, be passed ".

The motion was put and carried and the Bill, as amended, was passed.

### VI.—DRAFT OUT LINE OF THE FOURTH FIVE-YEAR PLAN—DISCUSSION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the draft outline of the Fourth Five-Year Plan be taken into consideration ".

Sir, the Hon. the Chief Minister has already made a statement before the House. So, I formally move the motion.

MR. SPEAKER : Motion moved—

" That the draft outline of the Fourth Five-Year Plan be taken into consideration ".

திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் குறிப்பை இந்த மன்றத்தின் முன் தாக்கல் செய்து முதல் அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய உரையின் மீது ஒரு சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க நான் ஆசைப்படுகிறேன். முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்துவிட்டோம், அதனால் நாட்டிற்கு என்ன என்ன பலன் ஏற்பட்டுவிட்டது என்பதையெல்லாம் ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் கூட எடுத்துச் சொல்ல முடியவில்லை. மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றாலும், முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் உண்டான பொருளாதார வளர்ச்சி ஒரு சிலரிடத்திலே குவிந்துவிட்டன என்று எதிர்க் கட்சித் தரப்பிலே சொல்லப்பட்ட வாதத்தை இன்று அகில

இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கிற திரு. காமராஜ் அவர்களே சொல்கிற அளவிற்கு வந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தரப்பிலே சொல்லப்படுகிற வாதத்தை ஆளும் கட்சியிலே உள்ள அதிபெரும் தலைவரே சொல்லும் அளவுக்கு எங்களுடைய அந்த வாதங்கள் அசைக்க முடியாத வாதங்களாகிவிட்டன. என்றாலும் கூட, நான்காவது திட்டம் தீட்டப்படும் நேரத்தில், ஒருசிலரிடத்தில் குவிக்கப்பட்டிருக்கிற பொருள் வளர்ச்சி. திட்டங்களின் நன்மைகள் எல்லாம் பாமர ஏழை மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் நான்காவது திட்டம் இருக்கும் என்று ஏற்கனவே பிரசாரம் செய்யப்பட்டது. இந்தத் திட்டக் குறிப்பை எதிர்க் கட்சியிலே இருக்கும் நாங்கள் துருவித் துருவிப் பார்க்கும் நேரத்தில், நான்காவது திட்டம் நிறைவேற்றப்பட்டு அதற்குப் பின்னாலும் ஏழை எளியவர்களுடைய நிலை எப்படி இருக்கும் என்ற கண்ணோட்டத்தோடு பார்க்கின்ற நோக்கில், அப்பொழுதும் அவர்களுடைய நிலை மாறாத வகையில், ஏழை ஏழையாகவும், பாமரன் பாமரனாகவுமே தான் இருக்க முடியும். அப்படிச் சொல்கிற நோக்கில், முதல் அமைச்சர் அவர்கள், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே இத்தனை கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்றினோம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதை விடப் பல கோடி ரூபாய்களுக்குத் திட்டம் தீட்டி நிறைவேற்றினோம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதைவிடப் பல கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டி அதையும் நிறைவேற்றினோம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று திட்டங்களிலும் சேர்ந்து எவ்வளவு தொகை செலவழித்தோமோ அவ்வளவு தொகை இந்த நான்காவது திட்டத்திலே செலவழிக்கப்படப் போகிறது என்று சொல்வார்கள். அப்படிச் சொல்கிற வாதத்திற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எப்படி மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவழிக்கப்பட்ட பணமெல்லாம் ஒருசிலரிடத்தில் குவிந்துகொண்டதோ, அதன் பலனை ஒரு சிலரே அனுபவிக்கின்ற நிலை ஏற்பட்டதோ, அதே போலத்தான், இந்தத் திட்டத்திற்குத் தொகை கூடுதலாக இருந்தாலும் கூட நிச்சயமாக அந்த ஒருசிலரோடு இன்னும் ஒருசிலர் என்று சேர்க்கலாமே தவிர, லட்சம் சம்பாதித்தவர் ஐந்து லட்சம் சம்பாதிக்கும் வகையில் நான்காவது திட்டம் அமைந்திருக்கிறதே தவிர, இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்தத் திட்டத்திலே என்ன இருக்கிறது என்று துருவிப் பார்த்தபோது ஒன்றுமே இல்லை. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அரிசனங்களுக்குக் காலி மனைகள் கொடுக்கப்பட்டன; அவை நான்காவது திட்டத்திலும் கொடுக்கப்படுகின்றன. சீருடை வழங்கப்பட்டது. நான்காவது திட்டத்திலும் பள்ளி மாணவர்களுக்குச் சீருடை வழங்கப்படுகிறது. எப்படி கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லையோ அதுபோலத்தான் ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாத வகையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் அமைய இருப்பதைக் கண்டு—ஜனநாயகம், சோஷலிசம் என்று சொல்வதெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்களின் செல்வாக்கைக் குறைப்பதற்குத்தான், காரணம்





ஜனநாயக சோஷலிசத்தைப் பற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் மக்கள் முன்னிலையில் நல்லமுறையில் பரப்பி வருகிறார்கள், அதையே ஆளும் கட்சியினரும் ஏற்றுக்கொண்டு சொல்ல ஆரம்பித்துவிட்டால் மக்களிடத்தில் ஆளும் கட்சியினர் ஆதரவு பெற முடியும் என்ற காரணத்தினால் தான் ஜனநாயக சோஷலிசத்தை வாயளவில் சொல்லுகிறார்களே தவிர செயலளவில் ஒன்றையும் காணோம். இதைப் பார்க்கிறபோது பாரதியார் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

சிந்தையிற் கள் விரும்பிச் சிவசிவ என்பது போல் . . . .

மற்ற வார்த்தைகளை நான் சொல்ல விரும்பவில்லை. சிந்தை கள்ளை விரும்புகிறது. வாயோ சிவ சிவ என்கிறது. அதுபோல இன்றைய தினம் ஆளும் கட்சியில் உள்ளவர்களின் வாயோ எடுத்ததற்கெல்லாம் ஜனநாயக சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் நான்காவது திட்டம் அந்த வாதத்தைச் செயல்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

அடுத்தாற்போல நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன என்பதைப் பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் மூன்று முக்கியமான நோக்கங்கள் சொல்லப்படுகின்றன. குறைந்த உற்பத்தியைக் கூடுதலாக்குவது திட்டத்தின் நோக்கம் என்று சொல்லப்படுகிறது. கடந்த மூன்று திட்ட காலத்திலும் கூட ஆளும் கட்சித் தரப்பில் இருந்து உற்பத்தி அளவு எல்லாத் துறையிலும் எப்படிக் கூடுதலாகிக் கொண்டே வந்திருக்கிறது என்பதற்கான புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் நாட்டில் உள்ள உண்மை நிலையை எடுத்துப் பார்த்தால் சர்க்கரை பற்றாக்குறை, அரிசி பற்றாக்குறை, துணி பற்றாக்குறை என்பதாக இப்படி எல்லாவற்றுக்கும் பற்றாக்குறை நிலைமைதான் இருக்கிறது. நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் கூட எல்லாப் பண்டங்களின் உற்பத்தியும் கணிசமான அளவுக்கு, தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்குப் பெருகவில்லை. ஆளும் கட்சியில் உள்ளவர்களும் கூட அதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, மக்களுடைய குறைந்த அளவு நுகர்வு நிலையை கூடுதலாக்க வேண்டுமென்பது திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. இதுவரை போடப்பட்ட நம்முடைய திட்டங்களினால் மக்களுடைய நுகர்வு நிலை அதிகரித்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. பொருளாதாரத் துறையில் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு இருப்பினும் கூட பலன் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. டாக்டர் லோகநாதன் அவர்கள் தயாரித்து நான்கைந்து நாட்களுக்கு முன்னால் வெளியிட்டுள்ள அறிக்கையில், சராசரி இந்தியக் குடிமகன் நாள் ஒன்றுக்கு நாலணாவிற்கு மேல் வருமானம் பெற முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களுடைய நுகர்வு நிலை அவர்களுடைய வருவாயைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வருவாய் அதிகமானால் நுகர்வு நிலை கூடுதலாகும். அதிலும் நாம் தோல்வியே அடைந்திருக்கிறோம்.

அடுத்தாற்போல, மக்களுடைய குறைந்த சேமிப்புத் திறனை கூடுதலாக்குவது திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டில் நூற்றுக்கு எத்தனைபேர் சேமிக்கும் திறன் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பெரும்பாலோருடைய பொருளாதார நிலை அதற்கு ஏற்றதாக வளர்ச்சி அடையவில்லை. கீழ்த்தர, நடுத்தர வர்க்கத்தினர் தங்களுடைய குடும்ப நிர்வாகத்திற்கே மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கம் கடன் பத்திரம் வெளியிட்டவுடன் ஒரு வாரத்தில் அது பூர்த்தியாகிவிடுகிறதே என்றால் நம்முடைய திட்டத்தினால் அதிக அளவு பயன்பெற்று வருகிற ஒருசிலரிடமிருந்தே தான் பணம் வந்து குவிகிறதே தவிர—இந்தப் பணம் நடுத்தர மக்களோ, ஏழை எளிய மக்களோ தரும் பணம் இல்லை. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினாலும் பணத்தைக் குவித்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய பணமாகத்தான் இருக்கிறது.

அடுத்தாற்போல, திட்டத்தின் நோக்கமாக சமுதாயத்தில் சமநிலையை வளர்த்து—நம்முடைய வருமானத்தை ஏழை எளியவர்களுக்கும் பகிர்ந்து அளிப்பது என்று சொல்லப்படுகிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் எத்தனையோ முன்னோடித் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அப்படி உருவாக்கப்படுகின்ற நேரத்தில் மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களும் சமநிலையில் உயர்வு பெற வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் உள்ள மக்கள் பொருளாதாரத் துறையில் சமநிலை உயர்வு பெற வழி செய்ய வேண்டும் என்ற வகையில் உருவாக்கப்படவில்லை. செங்கல்பட்டு, மதுரை, சென்னை, கோவை என்பதாக—அமைச்சரவையில் முக்கியமான அங்கம் வகிக்கின்றவர்களுடைய மாவட்டங்களில் கொண்டுவரப்படுகிற திட்டங்கள் எல்லாம் அமைகின்ற நிலையைத்தான் பார்க்கிறோம். எந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் தீவிரச் சாகுபடித் திட்டமாக இருந்தாலும், தொழில் உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டமாக இருந்தாலும் மூலாதார அமைச்சர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்களோ அந்த அந்த மாவட்டங்களில் நிறைவேற்றப்படுகிற திட்டங்களாகத்தான் அமைந்து வருகின்றன. இந்த மாநிலத்தில் குறிப்பாக சென்னை, கோவை போன்ற மாவட்டங்கள்தான் அதிக அளவு வளர்ச்சி அடைந்திருப்பதைப் பார்க்கிறோம். மற்ற மாவட்டங்கள் சரியான முறையில் வளர்ச்சி அடையவில்லை. சென்ற ஆண்டுக்கு முன்னால் என்று நினைக்கிறேன். கோவையில் 150, சென்னையில் 110 பெரிய தொழிற்சாலைகள் இருந்தன. அதே சந்தர்ப்பத்தில் மற்ற மாவட்டங்களைப் பார்க்கிறபோது சேலம் மாவட்டமாக இருந்தாலும், வடார்க்காடு மாவட்டமாக இருந்தாலும், தென்னார்க்காடு மாவட்டமாக இருந்தாலும் ஐந்து, பத்து பெரிய தொழிற்சாலைகள் தான் இருக்கும். ஆகவே நம்முடைய திட்டத்தில் மாநில டிஸ்பாரிடி இருக்கக் கூடாது என்பது போலவே மாவட்ட டிஸ்பாரிடியும் இருக்கக் கூடாது. அப்போது தான் சமநிலை உயர்வு என்கிற நோக்கம் ஈடேறும். இதுவரை ஒரு சில குறிப்பிட்ட மாவட்டங்





களைத் தவிர—இதர மாவட்டங்களில் பெரிய பெரிய தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பும், சாத்தியக் கூறுகளும் இருந்தாலும் கூட அவை கவனிக்கப்பட்டு, அங்கங்கே தொழில்களை அமைக்க கவனம் செலுத்தப்படவில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்த, எந்த மாவட்டத்தில் என்ன என்ன தொழில்களை ஆரம்பிக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைப் பற்றியும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொன்னால் இந்த விவாதத்திற்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும்; குறைந்தது அதைக் கொண்டு ஆறு, ஏழு தொழிற்சாலைகளை அமைக்க முடியும் என்பது பல நாட்களாகக் குறிப்பிடப்பட்டு வருகிறது. முதல் மூன்று திட்டங்களிலும் அது சேர்க்கப்படவில்லை. நான்காவது திட்டத்திலும் சேர்க்கப்படுமோ என்று தெரியவில்லை. இதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும், மற்ற மாவட்டங்களிலும் சரி என்ன என்ன தொழில்களை ஆரம்பிக்க சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பது விரிவான முறையில் ஆராயப்பட்டு அங்கங்கே அந்தத் தொழில்களை ஆரம்பிக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டும். குறிப்பாக ரீஜனல் டிஸ்பாரிடியை அகற்றுவது போலவே—மாவட்ட டிஸ்பாரிடியை—ஏற்றத்தாழ்வை அகற்றும் வகையில் நம்முடைய திட்டம் அமையவேண்டும். மாநில ஏற்றத்தாழ்வை அகற்ற வேண்டும் என்று சொல்வது மாவட்ட ஏற்றத்தாழ்வை அகற்ற வேண்டும் என்பதற்கும் பொருந்தும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஹொகனக்கல் மின்சாரத்திட்டம் 56 கோடி ரூபாய் செலவில் 800 மெகாவாட் உற்பத்தித் திறன் உடையதாக—ஒரு பெரிய நீர் மின்சாரத் திட்டமாக இருக்கிறது. இருந்தாலும் கூட அந்த ஹொகனக்கல் திட்டத்தைப் பொறுத்த வரையில் பூர்வாங்க ஆராய்ச்சி எல்லாம் நம் பகுதியில் முடிந்தும் கூட மைசூர் சர்க்காருடைய சம்மதமும் பெற வேண்டியிருப்பதனால் நமது முதல் அமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் மைசூர் அரசாங்க முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகரமாக அதைக் கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் அதன் காரணமாக நமக்குக் கிடைக்கக் கூடிய மின்சாரத்தின் அளவு அதிகமாவது என்பது மட்டும் அல்ல, செலவு சிக்கனமானது என்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். நம் பகுதியில் காவேரி ஆறு ஓடி வருகின்றது. அதன் பக்கத்தில் சின்னாறு என்றும் ஒரு ஆறு இருக்கிறது. காவேரி நீரை சின்ன ஆற்றில் விட்டாவது அல்லது சின்னாற்றில் ஓடக்கூடிய தண்ணீரைத் தேக்க ஒரு அணை கட்டியாவது உடனடியாக அங்கே ஒரு மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்த முடியும். அதை அருள் கூர்ந்து கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். இன்று ஹொகனக்கல்

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [6th August 1965

திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்தாலும் கூட ப்ளானிங் கமிஷனிடம் வற்புறுத்தி அதைச் சேர்ப்பதற்கும், அதே சமயத்தில் சின்னாற்றில் குறுக்கே அணை கட்டி அங்கே ஒரு மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்தாற்போல, இந்த மாமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி அணைகள் இனி கட்டுவதற்கு இந்த மாநிலத்திலே ஆறுகளே இல்லையாது. எல்லா ஆறுகளுக்கும் அணைகள் கட்டியாகி விட்டன, இனி அணை கட்ட வேண்டுமென்றால் எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர், கே.ஆர். ஆர். ஆகிய ஆர்களின் வாய்களுக்குத்தான் அணை கட்ட வேண்டுமென்று சொல்லிவிடலாம். ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு அவைகளுக்குப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது சின்னாறு என்று சொல்லப்படுகின்ற ஆற்றின் குறுக்கே அணைகட்டி ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தப்போவதாகவும், இந்தத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருப்பதாகவும், இதற்காக 40 லட்ச ரூபாய் ஒதுக்கப் போவதாகவும், இந்த ஆற்றுத் தண்ணீரினால் ஏற்கனவே பாசன வசதி பெறுகின்ற 3,500 ஏக்கர் நிலத்தைத் தவிர, மேலும் 1,500 ஏக்கர் நிலத்திற்கு இதன் மூலம் பாசன வசதி கிடைக்கும் எனவும், அதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றன என்றும் அருமையான வாசகங்கள் போடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இந்த மாமன்றத்திலே உள்துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் அவர்கள் 1952–53-ம் ஆண்டில் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் இந்தச் சின்னாற்றுப் படுகையை வந்து பார்வையிட்டார்கள். ஆனால்
9–30 a.m. இன்னும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. இப்பொழுது இந்த 40 லட்ச ரூபாய் செலவில் கட்டப்படும் நீர்த் தேக்கத்தால் யாதொரு பயனும் இல்லை. ஆகவே இதை ஒரு பெரிய திட்டமாகப் போட்டால் தான் நன்மை பெறமுடியும். எனவே, 40 லட்ச ரூபாய்க்குப் பதிலாக 75 லட்ச ரூபாய்க்குப் பெரிய திட்டமாக இதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிருஷ்ணகிரியிலே பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு அணைகட்டி கிருஷ்ணகிரி ரிசர்வாயர் ப்ராஜக்ட் என்ற திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே குறைந்தது ஒரு வருடத்திலே 10, 15 நாட்களுக்கு வெள்ளம் வருகின்றது. அப்படி வெள்ளம் வருகின்ற நீரினால் 6 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு அரசாங்கம் பாசன வசதி செய்து தருகிறது. இந்த சின்னாறு பெயர் அளவிலே தான் சின்ன ஆறு ஆக இருக்கிறதே தவிர, வருடத்திலே மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குப் பெரிய வெள்ளம் வருகின்றது. வெள்ளம் வருகின்ற அந்தக் காலத்தில் இக் கரையிலே உள்ளவர்கள் அக்கரைக்குச் செல்ல முடியாது. இக் கரையிலே உள்ள கிராமவாசிகள் அக்கரையிலுள்ள தோட்டம், துரவு, வயல்களுக்குச் செல்ல முடியாதாகையால் அவர்கள் உணவு தானியத்தோடு முன்னாலேயே அங்கேயே போய்த் தங்கி விடுகிறார்கள். அந்த அளவுக்கு பெரிய வெள்ளம் வரக்கூடிய ஒரு நதியாக



6th August 1965] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

நான் ஓடுகிறது சின்னாறு. எப்படியோ இதற்கு சின்னாறு என்று பெயர் வந்துவிட்டது. அந்தப் பகுதிகளிலே உள்ள நிலங்களை வைத்திருப்பவர்கள் எல்லாம் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், பெரிய அளவில் பெரிய திட்டமாகப் போட்டால் அவர்களுடைய நிலங்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கிவிடும் என்ற காரணத்தால், அவர்கள் எல்லாம் புள்ளிவிவரங்களை மறைத்து விட்டார்கள் என்கின்ற ஒரு பெரிய குற்றச்சாட்டு இருக்கிறது. ஏற்கனவே 5,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியைத் தருகின்ற இந்தச் சின்னாற்றில் வருடத்தில் 10 நாட்களுக்கு வருகின்ற தண்ணீரால் அத்தனை ஏரிகளும் நிரம்பி விடுகின்றன. இதைத் தவிர, குறைந்தது 95 நாட்களுக்கு அந்த ஆற்றிலே வருகின்ற தண்ணீர் எல்லாம் காவிரி ஆற்றிலே கலக்கிறது. ஆகவே, 40 லட்ச ரூபாய் அளவிலே போட இருக்கிற இந்தத் திட்டத்தை மாற்றிப் பெரிய அளவிலே 75 லட்ச ரூபாய் அளவிலே ஒதுக்கி இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சாலைகள் என்கின்ற தலைப்பிலே என்னென்ன சாலைகள் போட வேண்டுமென்று குறிப்பிடக்கூடிய நோக்கிலே, பல நூற்றுக் கணக்கான மைல் நீளமுள்ள சாலைகளை என்னால் குறிப்பிடமுடியும் என்றாலும், 50 மைல் அளவுக்கு இருக்கின்ற பாதைகளைப் பொறுத்து மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே இருந்து வரும் பாதைகள் எல்லாம் ஒன்றியங்களினுடைய பராமரிப்பில் இருந்து வருகின்றன. பாலக்கோடிலிருந்து கசாக்குளி வரையில் 10 மைல் நீளமுள்ள ஒரு பாதை செல்கின்றது. இது பஞ்சாயத்து யூனியனின் பராமரிப்பில் இருந்து வருகின்றது. இந்தப் பாதையில் குறுக்கே சின்னாறு செல்கின்றது. அந்த இடத்திலே ஒரு பாலம் கட்டவேண்மென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருந்தாலும்கூட நாளது வரையில் எந்த விதமான பாலமும் கட்டப்படவில்லை. திட்டத்திலே சேர்க்கப்படுகிறது என்று சொல்வது இனிமையாக இருந்தது. ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஒருவேளை எதிர்க் கட்சித் தரப்பில் உள்ளவர்களை அந்தப் பகுதி வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துவிட்டார்கள் என்ற காரணத்தாலே நிறைவேற்றப் படவில்லையா? எல்லாக் கட்சிக்காரர்களுடைய கருத்துக்களையும், சம்மதத்தையும் கோருகின்ற இந்த அரசாங்கம், எல்லோருடைய நன்மைக்காகவும், திட்டங்களை நிறைவேற்றவேண்டும். ஆனால் இந்தத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப் பட்டும்கூட இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இதையும் இப்பொழுதாவது நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

அடுத்தாற்போல் பெண்ணையாற்றிலிருந்து நாகமலை வரையில் 16 மைல் நீளமுள்ள ஒரு பாதை போடவேண்டியிருக்கிறது. இந்தப் பாதையில் இரு மருங்கிலும் 50, 60 கிராமங்கள் இருக்

கின்றன. பெரிய பெரிய கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராம மக்களுடைய நன்மைக்காக இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) பாலக்கோட்டிலிருந்து ஆரண்டள்ளி வரை மல்லாவரம் வழியாகச் செல்லும் 7 மைல் நீளமுள்ள பாதையையும் போட்டுத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER: I would like to know whether any amendment can be moved to the Motion before the House.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, this is a Motion for taking the Fourth Five-Year Plan into consideration and amendments can be moved.

MR. SPEAKER: If it is so. I fix 11 a.m. tomorrow as the time within which hon. Members can give notice of their amendments, if any, to the Office.

திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்புப்பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்களைப்பற்றிச் சொல்லும் பொழுது, 'பொருளாதார நிலையை உயர்த்துவது மட்டுமல்லாமல், சமூக நீதியை வளர்ப்பதுமாகும்' என்று கூறி இருக்கிறார்கள். அதேபோல் ஏழை எளியவர்களாக இருப்பவர்கள் மேலும் எல்லா நன்மைகளையும் அடையவேண்டும் என்ற குறிக்கோளும் அடங்கியிருக்கிறது அவர்களுடைய உரையிலே. ஆகவே, ஏழைகள் ஏழைகளாகவும், பணக்காரர்கள் பணக்காரர்களாக இருப்பதற்குமே இந்தத் திட்டம் பயன்படும் என்று சொல்வது சரியல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உரையிலே இரண்டாவது பக்கத்திலே எல்லாக் கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிலே 'நமது பொருளாதாரத் திட்டங்களின் மூலம் தேசிய வருமானத்தை வெகுவாய் உயர்த்துவதற்கு முற்படும் அதே சமயத்தில், பொருளாதார வளர்ச்சியின் காரணமாய் எழும் நன்மைகள் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கும் மேன்மேலும் கிடைப்பதற்கு நாம் முயன்று வருகிறோம்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே நாம் போட்டிருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம் எந்த முறையிலே செய்யப்பட்டாலும்கூட நன்மைகளை ஏழை எளியவர்கள் பெற முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் ஒவ்வொருவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடவசதி இவைகளைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பல திட்டங்களைப் போட்டு, இப்பொழுது நாம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையிலே நிறைவேற்றியிருக்கிறோம். ஆண்டவனின் அருளால் மூன்றாவது ஐந்தாண்டுத்





திட்டத்தையும், அரசாங்கத்தினுடைய நிதி உதவியினாலும், பொதுமக்களுடைய உதவியினாலும், மக்களுடைய ஒத்துழைப்பினாலும் நாம் நல்ல முறையிலே நிறைவேற்றியிருக்கிறோம். இப்பொழுது நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்ன செய்ய வேண்டுமென்பதற்காக நம்முடைய யோசனைகளை கூறுவதற்காக கூடியிருக்கின்றோம். இந்த நிலையிலே நான் முதன்முதலாக வேளாண்மையைப்பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வேளாண்மை தான் திட்டத்தின் அச்சாணி என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மையே. உற்பத்தி ஒன்றுமே பெருகவில்லையென்று சிலர் சொன்னார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே 65 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கின்ற உணவு தானிய உற்பத்தி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 82 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துவிடும் என்ற வகையில் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக, கிராஷ் புரோகிராம், பேக்கேஜ் புரோகிராம் என்கின்ற முறைகளின் மூலம் சில மாவட்டங்களிலே உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகின்றது. சில மாவட்டங்களிலே உள்ள இந்த முறைகளை எல்லா மாவட்டங்களிலும் கொண்டு வந்தால் உணவு தானிய உற்பத்தி உயரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உரிய காலத்திலே நல்ல உரத்தையும் கொடுத்து, நல்ல விதைகளையும் கொடுத்து, விவசாயத்திற்கான பாசன வசதிகளையும் செய்து கொடுத்தால் கண்டிப்பாக நாம் இந்த இலக்கை எய்திவிடலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

பாசன வசதிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்திலே உள்ள ஆறுகளில் எல்லாம் அணைகள் கட்டி பாசன வசதி பெற்றுக் கொண்டு வருகிறோம். இத்துடன் அண்டை மாநிலங்களையும் கூட நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே கலந்து பேசி, அவர்களிடமிருந்து அதிகமாகத் தண்ணீரைப் பெற்று பாசன வசதிகளைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலையில் மீனளத்தைப்பற்றியும் நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தியைத் தவிர, மீன், பால், முட்டை, இவைகளும் முக்கியமான சத்துப் பொருள்களாக இருக்கின்ற காரணத்தால் இவைகளையும் பெருக்கவேண்டும். மீன் உற்பத்தியை 2.9 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 4.7 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். மீனவர்களுக்கு விசைப்படகுகள் மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் தான் மீனள உற்பத்தி பெருக வழி ஏற்படும்.

சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். கடலூர் துறைமுகத்தை டிரெட்ஜர் வைத்து ஆழப்படுத்தி அபிவிருத்தி செய்யவேண்டும். அதே போன்று தென்னார்க்காட்டில் உள்ள பரங்கிப்பேட்டை துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [6th August 1965

பாசன வசதியைப் பொறுத்தமட்டில் அநேகமாக நதிகளில் அணைகளைக் கட்டி முடித்து விட்டோம். தற்போது பூமிக்கடியில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. குழாய்க் கிணறுகள், மற்றும் பம்ப் செட்கள் வைத்தும் பூமிக்கடியில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்த பண உதவி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலே காடுகள் அதிகமாகப் பெருக வேண்டும். தென்னாற்காடு ஜில்லாவில் விருத்தாசலம் தாலுகாவில் உள்ள காடு நெய்வேலியிலிருந்த மக்களுக்காக வீட்டு வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன் அழிக்கப்பட்டது. ஆனால் அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக அந்த மக்களை அங்கு குடியேற்றவில்லை. அழிக்கப்பட்ட அந்தக் காட்டை மறுபடியும் காடாக்க மத்திய சர்க்காருடன் பேசி முடிவெடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சவுக்கு, முந்திரி போன்றவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். முக்கியமாக தென்னாற்காடு ஜில்லாவில் சவுக்கு, முந்திரி அதிகமாக இருக்கிறது. அங்கு ஒரு முந்திரித் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். தென்னை மர வளர்ப்பையும் அதிகமாகப் பெருக்க வேண்டும்.

பாசன வசதியைப் பொறுத்தவரை சாத்தனூர் இரண்டாவது ஸ்கீம் நடந்து கொண்டிருக்கிறது. தென்கரை ஓரமாக வாய்க்கால் வெட்டி உபரி நீரைக் கள்ளக்குறிச்சி தாலுகாவுக்குக் கொடுத்தால் அங்குள்ள நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். நீர்ப்பாசனத்திற்காக ஏற்கனவே செய்துள்ள திட்டங்களை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் உள்ள பல பெரிய ஏரிகள் தூர்ந்திருக்கின்றன. 'டி-சில்ட்' முறைப்படி இவற்றையெல்லாம் தூர் வாரினால் பாசன வசதி ஏற்படும். விருத்தாசலத்தில் வெல்லிங்டன் நீர்த்தேக்கம் இருக்கிறது. அதனால் 28,000 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். அந்த ஏரியிலே நிறைய நீர் இருப்பது கிடையாது. மழை காலத்திலாவது ஜேடர்பாளையத்திலிருந்து காவிரி நீரைக் கொண்டு வர ஒரு வாய்க்கால் வெட்டலாம். அங்கிருந்து 70 மைல் தான் இருக்கிறது. ஒரு மைலுக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகும் என்றாலும் 70 மைலுக்கு 70 லட்சம் ரூபாய்தான் ஆகும். விருத்தாசலம் தாலுகாவில் பெரிய ஓடை என்ற இடத்தில் அணை கட்டுவதற்கு என்று கல் நாட்டு விழாக்கள் எல்லாம் நடைபெற்றன. ஆனால் நாளது வரை எந்த வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சர்க்கார் அதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

தொழில்களைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறையத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி சேலம் உருக்காலைக் கிட்டத்தையும் சீக்கிரம் கொண்டு வரவேண்டும்.



6th August 1965] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

சேலம் உருக்காலைக்கு நெய்வேலியிலிருந்து பழுப்பு நிலக்கரி போக வேண்டியதாக இருக்கிறது. அவ்வாறு சேலத்திற்கு நிலக்கரியைக் கொண்டு சென்று போட்டு விட்டுத் திரும்புகின்ற வாகன்களிலே சேலம் இரும்புக் கனிப் பொருளை அனுப்பினால் நெய்வேலியிலும் சிறிய ஒரு இரும்புத் தொழிற்சாலையை அமைக்க முடியும். அதற்கு வேண்டிய நிலக்கரி இருக்கிறது. தண்ணீர் இருக்கிறது, நிலப்பரப்பும் அதிகமாக இருக்கிறது. இதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைச் சீக்கிரமாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக் கொள்கின்றேன்.

நெய்வேலியில் இப்போது 400 மெகாவாட் மின்சாரத்தைப் ப்ரொட்யூஸ் செய்கிறார்கள். 600 மெகா வாட் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நெய்வேலியிலே அம்மோனியா ரசாயன உரம் தயாரிக்கிறார்கள். அதன் உற்பத்தியை அதிகரித்தால் நாட்டில் உர நெருக்கடி ஏற்படாது. அரசாங்கம் ஆங்காங்கு சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறது. அதே போன்று காகிதத் தொழிற்சாலைகளையும் நிறைய ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெய்வேலியிலுள்ள வேஸ்டேஜைக் கொண்டு டால்மியாபுரத்தில் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிகிறது. நம்முடைய அரசாங்கமே, அந்த வேஸ்டேஜைக் கொண்டு நெய்வேலியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய நாட்டில் நிறைய சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்தக் கரும்புச் சக்கையைப் பயன்படுத்த தென்னாற்காடு ஜில்லாவிலே காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அங்கு மணிலா அதிகமாக உற்பத்தியாகிறது. அதைக் கொண்டு அங்கே ஒரு 'ஹார்டு போர்டு' தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு முறையில் பல இடங்களிலும் நெசவாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அண்மையில் திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு அருகில் ஆணிகள் போல்ட்ஸ், ஸ்க்ரூஸ் போன்றவற்றைச் செய்யக் கூடிய தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நம்முடைய நாட்டிலே வேளாண்மைத் தொழிலுக்கு மிகவும் முக்கியமாக வேண்டியது மின்சாரம். நாட்டில் இன்று மூன்று வகையிலே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணு மின்சார நிலையத்தை கல்பாக்கத்திலே மத்திய சர்க்கார் உதவியுடன் அமைக்க இருக்கிறார்கள். ஹொகனேகல் திட்டம் இரண்டு அரசாங்கங்கள் சேர்ந்து செய்ய வேண்டிய திட்டமாகும். அதை நிறைவேற்றினால் 800 மெகா வாட்டுக்கு மேல் மின்சாரம் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். அதே போன்று பேசின் பிரிட்ஜ், தூத்துக்குடி மற்ற இடங்களில் எல்லாம் மின்சார உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்தினால் நான்காவது திட்ட இறுதியில் மின்சாரப் பற்றாக் குறையே நம்முடைய நாட்டுக்கு இருக்காது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் 2½ லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மேல்

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [6th August 1965

மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. வருகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாலைந்து லட்சம் பம்ப் செட்டுகளுக்காவது மின்சாரம் கொடுத்தால் கண்டிப்பாக விவசாயமும், விவசாயிகளும் முன்னேற வழி ஏற்படும். பொதுவாக இன்று கிராமங்களில் அதிகமாக மின்சாரம் பரவவில்லை. குறிப்பாக, மின்சாரம் இல்லாத கிராமங்கள் எங்கு அதிகமாக இருக்கின்றன என்று சொன்னால், தென்னாற்காடு ஜில்லாவில் விருத்தாசலம் தாலுகாவிலுள்ள கிராமங்களில்தான் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நல்லூர் தொகுதியிலே நாலைந்து கிராமங்கள் தவிர வேறு எங்கும் மின்சார வசதி இல்லை.

கல்வியைப் பொறுத்து எடுத்துக் கொண்டால், மருத்துவக் கல்லூரியிலும், எஞ்சினியரிங் கல்லூரியிலும் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு மருத்துவக் கல்லூரியையும், எஞ்ஜினியரிங் கல்லூரியையும் ஏற்படுத்த வேண்டும். விருத்தாசலத்தில் ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஏற்படுத்த வேண்டும். அதற்காக நிதி திரட்டிக் கொடுக்க அங்குள்ள எல்லோரும் முன் வந்திருக்கிறார்கள். திண்டிவனத்திலும் ஒரு ஆர்ட்ஸ் காலேஜ் ஏற்படுத்த வேண்டும். தொழிற்கல்வியைப் பொறுத்தவரை இப்போது நிறைய பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. தென்னாற்காடு ஜில்லாவில் ஜூனியர் பாலிடெக்னிக் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை எல்லா மாவட்டங்களிலும் அதிகமாக வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம முன்னேற்றத்தைப் பொறுத்தவரை சாலை வசதி, குடி தண்ணீர் வசதி ஆகியவை மிக முக்கியமானதாகும். மந்திரிகள் இருக்கின்ற ஊர்களில் எல்லா வசதிகளையும் செய்து கொள்ளுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய ஊரிலே தண்ணீரைப் பார்த்தால் குடிக்கின்ற தண்ணீரில் ஒரு டம்ளரில் கால்வாசி செம்மண்ணாக இருக்கும். அந்தத் தண்ணீரைக் குடிப்பதன் காரணமாக நரம்புச் சிலந்தி நோய் வருகிறது. ஆகவே, அங்கு குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கே தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தைத் தயாரிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வீராணம் ஏரி விருத்தாசலத்திலிருந்து 15 மைல், 20 மைல் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, இந்த ஏரியிலிருந்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்து, பக்கத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி கிடைக்கின்ற வகையில் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது திட்ட முடிவில் எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் திட்டம் வந்து விடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முக்கியமாக, சுகாதாரத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக தலைநகர்களில் இருக்கின்ற ஆசுபத்திரிகள் எல்லாம் நன்றாக இருக்கின்றன, ஆனால் தாலுகா தலைநகரங்களில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகளில் எக்ஸ்ரே பிளான்ட்



6th August 1965] [திரு. கி. நாராயண சாமி பிள்ளை]

வசதி இல்லாமல் இருக்கிறது. எங்கள் பகுதியில் திட்டக்குடியில் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கேயுள்ள ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே வசதி கிடையாது, ஆபரேஷன் வசதி கிடையாது, இதற்காக ரூபாய் 20 ஆயிரம் செலவில் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் எல்லா விதமான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகள் பலவற்றில் போதிய அளவு மருந்துகள் இருப்பதில்லை. ஆகவே, அதையெல்லாம் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீ அணைக்கும் படை ஏற்படுத்துகின்ற விஷயத்தில் எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் முனிசிபல் தலைநகரங்களிலும் ஏற்படுத்துகிறார்கள். கிராமங்களில், அல்லது பக்கத்திலுள்ள சேரிகளில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், இங்கிருந்து தீ அணைக்கும் படை வருவதற்குள் வீடுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன. ஆகவே, இதை தவிர்க்கும்படியான அளவில் நான்காவது திட்டத்தில் ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் தீ அணைக்கும் படையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக, அரிஜனங்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுப்பதற்காக மனைக்கட்டு வழங்க வேண்டும், அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற மனைகளுக்கெல்லாம் பட்டா வழங்கப்படவேண்டும். குடும்பக்கட்டுப்பாட்டை நல்ல முறையில் ஊக்குவித்து, அதற்காக இன்னும் செலவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் சமர்ப்பித்திருக்கும் நான்காவது ஐந்தாண்டுத்திட்ட நகல் திட்டத்தை மனமார வரவேற்று ஒருசில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டம். இந்த ஜனநாயக நாட்டில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி மக்கள் அந்தத் திட்டங்களினால் ஏற்படுகின்ற பலன்களை எல்லாம் அடைவதற்கு வழிவகை செய்த காங்கிரஸ் அரசாங்கம், இன்றைக்கு மேலும் மக்களுடைய நன்மைக்காக நான்காவது திட்டத்தை மக்கள் முன்னால் கொண்டு வந்திருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் எந்த விதமான பலன்களை எல்லாம் அடைந்தோமோ அந்த அளவுக்கும் மேலாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்கு மேலும் பலன் ஏற்படக்கூடிய வகையில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திட்டங்களே வேண்டாம் என்று சொல்லக் கூடியவர்களும் நம் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். திட்டங்கள் போடுவதினால் மக்களுக்குத்தான் கஷ்டம் ஏற்படும், ஆகவே திட்டங்களே வேண்டாம் என்று சில பெரியவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வாறு சொல்லக்கூடிய பெரியார்கள் யார் என்று பார்த்தால் அவர்கள் எல்லாம் நல்ல வசதி படைத்தவர்கள்,

அவர்களுக்கு திட்டம் அவசியமில்லை, ஆனால், இந்தத் திட்டங்களினால் எங்கே ஏழை மக்கள் முன்னேறி நம்மைப்போன்று வந்துவிடப்போகிறார்களோ என்று கருதி திட்டம் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஏழை மக்கள் முன்னேறி வந்துவிட்டால் நம்முடைய மதிப்பு குறைந்து போய் விடுமே என்று நினைத்து திட்டத்தை எதிர்க்கக்கூடிய கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். திட்டங்கள் இல்லாமல் எந்த நாடாவது முன்னேறியிருக்கிறதா என்று பார்த்தால், உலகத்தில் எந்த நாட்டிலும் திட்டங்கள் இல்லாமல் முன்னேறவில்லை என்பது நமக்குத் தெரிகிறது. ஒரு நாடு விடுதலை அடைந்த பிறகு, சுதந்திரம் அடைந்த பிறகு திட்டங்களைப் போட்டு, அதன் மூலம் அந்த நாட்டினுடைய மக்கள் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் தான் நம் நாட்டிலும் திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இப்போது போட்டிருக்கின்ற நான்காவது திட்டங்களின் பலன் எல்லாம் நான்காவது திட்டத்தின் முடிவில் தான் தெரியும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டார்களே, இன்னும் ஏன் பற்றாக்குறை இருக்கிறது என்று சிலர் கேட்கின்றார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனை கிராமங்களிலுள்ளவர்கள் தான் நன்றாக அறிவார்கள். கிராமப்புறத்தில் சென்று பார்த்தால், நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு எப்படியிருந்தது, இன்றைக்கு எப்படியிருக்கிறது என்பதை பார்த்தோமேயானால் என்னென்ன வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நம்மால் பார்க்க முடியும். இதை கிராம மக்கள் நன்றாக புரிந்திருக்கிறார்கள். திட்டம் போட்ட பிறகு என்னென்ன வசதிகள், ரோடு வசதி, குடிப்பதற்கு தண்ணீர் வசதி, விவசாய உற்பத்திக்கு வேண்டிய வசதி, உற்பத்தி செய்த பொருட்களை நல்ல விலையில் விற்பதற்கான வசதி இவைகளுக்கெல்லாம் வசதி செய்யப்பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதற்கு வேண்டிய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவு அமைப்புக்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் கிராமப்புறத்தில் சென்று பார்த்தால் நன்றாகத் தெரியும். ஒவ்வொரு துறையிலும் ஏற்படுகின்ற சங்கடங்களை எல்லாம் பார்த்து, அவற்றைப் போக்குவதற்கு திட்டங்களைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறோம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா கிராமங்களுக்கும் இந்த வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னால், அலங்காரமாக விளக்குகள் போட்டுக்கொள்வதற்காக அல்ல. கிராமப் புறங்களில் மின்சாரம் வந்தால், அதன் மூலம் அந்தந்த கிராமங்களில் சிறு சிறு தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அது ஏற்படுவதன் காரணமாக கிராமங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வேலை வாய்ப்பு கிடைப்பதின் மூலமாக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை உபயோகிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதன் மூலமாக அன்னிய பொருட்களை இறக்குமதி செய்வதை நாம் நிறுத்துவதின் மூலமாக





நம்முடைய வருவாய் அதிகரிக்கும், அதற்காக மின்சார வசதி எல்லா கிராமங்களுக்கும் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தான் இது ஒரு புரட்சிகரமான திட்டம் என்று நான் சொன்னேன். நான்காவது திட்டத்தில் நிச்சயமாக எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்துவிடலாம் என்று நான் நம்புவதால் இதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதே நிலையில் தான் குடிநீர் திட்டம், எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது மிக மிக முக்கியமானது. இந்த பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை நாம் எல்லா கிராமங்களுக்கும் கொண்டு வந்துவிட்டோமேயானால் இனிமேல் மருத்துவச் செலவு நமக்கு மிகவும் குறையும். இனி இவ்வாறு செய்துவிட்டால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் போடும் நேரத்தில் மருத்துவ செலவுக்காக செலவு செய்யவேண்டியது குறைந்துவிடும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் எல்லா கிராமங்களிலும் இல்லாததால் தான் திரு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் சொன்னது போன்று கிராமங்களில் நரம்புச் சிலந்தி போன்ற நோய்கள் எல்லாம் வருகின்றன. குடிதண்ணீர்த் திட்டம் சரியாக வந்துவிட்டால் இது போன்ற நோய்கள் வராது. ஆகவே, இதற்காக கூடுதல் செலவு செய்தாவது எல்லா இடத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் முக்கியமாக இருப்பது, இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு இருக்க இட வசதி கொடுக்கவேண்டும் என்பது. இடமில்லாத மக்களுக்கு குடியிருக்க வீடு கொடுப்பதற்காக மனைகள் வழங்குவதற்கு தீவிரமான முயற்சி எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பிரச்னையை தீர்த்து விடுகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாகாணத்தில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் ஜாதி, மதம் என்ற வித்தியாசமில்லாமல் ஏழை மக்கள் அத்தனை பேருக்கும் மனைகள் வழங்குவதற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பார்த்து இந்த அரசாங்கத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அந்த வகையில் ஒவ்வொருவரும் நமக்கு இருக்க வீட்டுவசதியில்லையே என்று நினைக்கிற அளவுக்கு இருக்கின்ற நிலைமையை மாற்றி எல்லோருக்கும் இருக்க வீட்டுவசதி இருக்கும்படியான அளவுக்கு இந்த புரட்சிகரமான திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்தபடியாக, யோசிக்கவேண்டியதொன்று என்னவென்றால், கல்வியைப்பற்றி இதைப்பற்றி குறிப்பில் ஒன்றும் சொல்லப்படவில்லை. நான் சொல்ல விரும்புவது இந்த நாட்டில் இருக்கக்கூடிய கல்வியைப் பொறுத்த மட்டில் மக்கள் அனைவருக்கும் இலவசமாக கல்வி அளிக்கிறோம் என்ற கொள்கையை நாம் ஏற்றுக்

கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் அரசாங்கம் இலவசமாக எல்லோருக்கும் கல்வி வசதி அளிக்கிறோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நிலையில் கல்வியை எல்லோருக்கும் இலவசமாகக் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தில் வழிவகை செய்ய முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். ஐந்தாவது வயது வரையில் குழந்தைகள் அவரவர்கள் வீட்டில் இருக்கட்டும், அதன் பின்னால் அந்தக் குழந்தைகளினுடைய கல்வியின் பொறுப்பை சர்க்காரிடத்தில் ஒப்படைத்து விட வேண்டும். ஐந்தாவது வயது முதல், 16-வது வயது வரையிலும் அதாவது 11-வது ஸ்டாண்டர்ட் எஸ்.எஸ்.எல்.ஸி. தேறுவது வரையிலும் அந்தப் பிள்ளைகளை சர்க்காரே பராமரித்து வரவேண்டும் என்பதுதான். அப்படி கொண்டு வந்துவிட்டால் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளினுடைய படிப்பைப்பற்றி எந்தவிதமான கஷ்டமும் இராது. இதற்கு என்ன செலவானாலும் பரவாயில்லை, இதற்கென்று தனியாக ஒரு திட்டம் வகுத்து, மற்ற வேறு ஏதாவது ஒரு திட்டத்தை நிறுத்தி விட்டாவது நான் சொன்ன இந்தக் கல்வி முறையை கொண்டு வரமுடியுமா என்பதை யோசிக்க வேண்டும். ஐந்து வயதிலிருந்து பதினாறு வயது வரையிலும் குழந்தைகளுடைய படிப்பை சர்க்காரே மேற்கொள்ளவேண்டும், அவர்களுக்கு ஆஸ்டல் வசதி, உடை வசதி, உணவு வசதி, புத்தக வசதி இவைகளை எல்லாம் சர்க்காரே செய்து கொடுக்கவேண்டும். 16-வது வயதிற்கு மேல் படிப்பை முடித்த பின்னால் அதாவது 10-வது பாஸ் செய்த பிறகு நிச்சயமாக தங்கள் பெற்றோர்களுக்கு சம்பாதித்துப் போடுவான் என்கின்ற தைரியம் பெற்றோர்களுக்கு வரவேண்டும். அதற்கான முறையில் சர்க்கார் ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும். இதே திட்டத்தை நம் மதிப்புக்குரிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜர் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி, உடை எல்லாம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சர்க்கார் பொறுப்பில் எல்லாக் குழந்தைகளும் இருக்க வேண்டுமென்று சொல்லி அதற்கு வேண்டுமானால் காமராஜர் ப்ளான் என்று கூட வைத்து விடலாம். அந்த முறையிலே வைத்து, சர்க்கார் பொறுப்பிலேயே அத்தனை குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆதிவாசிகளைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆதி வாசிகள் மிகக் குறைவு தான். இந்த நான்காவது
10-00 உ.ம. திட்டத்தில் அவர்களுடைய நலனை கூறு நல்ல கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். அவர்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க தீவிரமாக முயற்சி செய்யவேண்டும். என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற ஆதிவாசிகளுக்கு ரோடு வசதிக்காக பல திட்டங்களை நான் சொல்லிக் கொண்டுவந்திருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடம் கூட சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். முக்கியமாக லிங்க் ரோட்டில் இல்லாமல் விவசாயப் பொருட்களை எப்படிக் கொண்டு வருவது என்று புரியாமல் அவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள்.





அவர்களுக்கு முக்கியமாக ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டும். சோலூர் மட்டத்திலிருந்து தெங்கு மாரஹாடா வரையில் ரோடு ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். அதற்கு கிட்டத்தட்ட 7 லட்சம் ரூபாய் செலவு ஆகலாம். அதைப் பற்றி மத்திய அரசாங்கம் மூலமாகச் செய்யவேண்டுமென்று கூட அவர்களோடு கடிதப் போக்கு வரத்து செய்துகொண்டிருக்கிறேன். நம் மாநில சர்க்காரின் சார்பில் அங்குள்ள ஆதிவாசிகளுக்காக இதை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பெண்கள் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அவர்கள் பயிற்சிக்குச் செல்லும் போது இடம் கிடைப்பதில் சிரமமாக இருக்கும் நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளை வருஷம்தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், ஆரம்பப் பள்ளிகளில் படிப்பு சொல்லிக் கொடுக்க பெண்கள் தான் லாயக்கு, ஆண்கள் அதற்குப் பொருத்தம் அல்ல என்று ஒப்புக்கொண்டிருக்கும் நிலையில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அதிகரிக்க இந்தத் திட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது தொழில் அமைச்சர் அவர்கள் இங்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பாலிடெக்னிக் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டேன், அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிற்பகுதியில் கூனூரில் பாலிடெக்னிக் ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். இப்போது அந்தத் திட்டமே முடிந்து விட்டது. நான்காவது திட்டத்திலாவது அங்கே பாலிடெக்னிக் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெண்கள் கல்லூரிகள் மற்ற மாவட்டங்களில் இருக்கின்றன. நீலகிரியைப் பொறுத்த வரையில் மாவட்டத்திலுள்ள பெண்கள் வேறு மாவட்டங்களுக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. அங்குள்ளவர்கள் மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். வேறு மாவட்டங்களுக்கு வந்து படிக்க சிரமமாக இருப்பதால் தயவு செய்து அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று தொழில் பேட்டையும். தொழில் பேட்டையைப் பொறுத்த வரையில் தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அன்று கொண்டு வந்தேன். பல மூலப் பொருள்கள் அங்கே இருக்கின்றன, அவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கு தொழில் பேட்டை ஆரம்பிக்கவேண்டும் என்று அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நேற்று தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பானில் அம்மாதிரிப் பொருள் இல்லாமல் கூட தொழில்பேட்டை வைத்துக்கொண்டு தொழில் நடத்துகிறார்கள் என்று பேசியதைப் பார்த்தேன். நீலகிரியில்

மூலப் பொருள்கள் இருந்து கூட பயன் படுத்தப்படாமல் இருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்த வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலைப் பதன்படுத்திச் சென்னைக்குக் கொண்டுவரவேண்டுமென்று திட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்ட திட்டம் என்ன என்றால் அங்கு இருக்கிற பாலைக் கொண்டு பேபி ஃபுட் ஃபாக்டரி ஏற்படுத்தவேண்டும் என்பதுதான். அதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள் பால் போதாது என்று சொன்னார்கள். அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு சென்னைக்குப் பாலை கொண்டு வந்து விடலாம் என்று இதிலே காணப்படுகிறது. அந்த இடத்தில் குழந்தைகள் பாலுணவுத் தொழிற்சாலை அமைக்க அங்கே வாய்ப்புக்கள் இருக்கின்றன. மாடுகளை மேய்க்க வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்பு இருக்கும்போது மாடுகளை வைத்துக் கொண்டு சர்க்கார் மூலமாக பண்ணை வைத்துக்கொண்டு மாடுகளை வளர்த்தால் பால் உற்பத்தி அதிகரிக்க வழிவகை இருப்பதால் பேபி ஃபுட் ஃபாக்டரி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டூரிஸத்தைப் பொறுத்த வரையில் உதகையில் டூரிஸ்ட் ஹோம் கட்டிக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உதகையில் உள்ள டூரிஸ்ட் ஹோமைப் பார்த்தால் அங்கே வசதி உள்ளவர்கள் தான் தங்க முடியும். நடுத்தர மக்கள் தங்க வசதி இல்லாமல் இருக்கின்றது. டூரிஸ்ட் ஹோமில் இடமே கிடைக்கவில்லை. அடுத்த வருஷம் கோடை விடுமுறைக்கு வந்து தங்க இப்போதே ரிஸர்வ் செய்து லெட்டர் அனுப்பி விடுகிறார்கள். நடுத்தர மக்களுக்கு டூரிஸ்ட் ஹோம் கட்ட 10 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல கூனூரில் டூரிஸ்ட் ஹோம் கட்ட 10 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இவைகளை நான்காவது திட்ட ஆரம்பத்திலேயே கட்டி முடித்து விடவேண்டும். அப்படிச் செய்தால் தான் மக்கள் அங்கு வந்து தங்க வாய்ப்பு இருக்கும். கோத்தகிரியைப் பொறுத்த வரையில் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். விளம்பர இலாகா அமைச்சர் அங்கு வந்தபோது கூட அவரிடம் சொல்லியிருக்கிறேன். டாக்டர் அவர்களும் கூட பார்த்திருக்கிறார்கள். உலகத்திலேயே இரண்டாவது என்று சொல்லக்கூடிய அளவில் உள்ள சுகவாசஸ்தலம் அது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த வட்டாரத்தில் குடி தண்ணீர் வசதி, டூரிஸ்டுகள் வந்து தங்க வசதி, இவை இல்லாத காரணத்தினால் அதை அபிவிருத்தி செய்ய முடியாது இருக்கிறது. டூரிஸ்டுகள் வரத் தயங்குகிறார்கள். அடுத்த திட்டத்தில் அங்கேயும் டூரிஸ்ட் ஹோம் ஏற்படுத்தி விட்டால் நலமாக இருக்கும். பஞ்சாயத்து யூனியன் மூலமாக குடி தண்ணீர் திட்டத்தை நடத்த 2.7 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் திட்டம் நாளது வரையில் நடக்காமல் இருக்கிறது. அதை துரிதப்படுத்த வேண்டும். டூரிஸ்ட் ஹோமைக் கட்டிவிட்டால் அந்த வட்டாரத்தில் வசதி ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





நீலகிரியைப் பொறுத்த வரையில் அது ஒரு சிறிய ஜில்லா. கேள்வி நேரத்தில் பார்த்தாலும் நானும் எனது சக அங்கத்தினரும் எழுந்து பேசும்போதெல்லாம் நீலகிரி, நீலகிரி என்று பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்களே கூட நாங்கள் எழுந்தாலேயே நீலகிரி என்று பேசுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு சிறு ஜில்லா. கோயம்புத்தூர் ஜில்லாவில் உள்ள ஒரு தாலூகா அளவில் இருக்கிற சிறிய ஜில்லா. ஒரு குடும்பத்தில் உள்ள கடைசி மகன் மீது எந்தப் பெற்றோரும் அன்பு செலுத்தாமல் இருப்பதில்லை. முதலில் இருக்கும் பிள்ளைகள் எல்லாம் வளர்ந்து விட்டன. சென்னை, பெரிய பிள்ளை வளர்ந்து விட்டது. கோயம்புத்தூர், அடுத்த பிள்ளை, அதுவும் வளர்ந்து விட்டது . . . (கனம் சபாநாயகர்: சின்னப் பிள்ளை இஸ் டாக்கட்டிவ்) அன்பு இல்லாத காரணத்தினால் தான் அலறிக் கொண்டிருக்கிறோம். அடிக்கடி அழுது கொண்டிருக்கிறோம். அழுகிற பிள்ளை தானே பால் குடிக்கும். ஆகையால் தான் அழுது கொண்டே இருக்கிறோம். நீலகிரியை செல்லப் பிள்ளையாக வைத்துக்கொள்ளுங்களேன். தயவு செய்து அந்த மாவட்டத்தை நல்ல முறையில் எப்படியாவது முன்னுக்குக் கொண்டு வந்து விட வேண்டும். அது கல்வியில் பின் தங்கி இருக்கிறது. மற்ற பல துறைகளிலும் பின் தங்கியிருக்கிறது. அவர்களை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் சர்க்கார் மனதில் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த ஜில்லாவிலே ரோட்டைப் பற்றி எட்டு வருஷங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மெட்டல் ரோடு போட்டால் சர்க்காருக்கு நஷ்டம். அந்த மாவட்டத்தில் ரோடு போடுவதாக இருந்தால், பராமரிப்புச் செலவு ஆரம்பத்தில் போடுவதற்கு என்ன செலவு செய்தோமோ அதைவிட 10 மடங்கு அதிகமாக ஆகிக்கொண்டே இருக்கிறது. மெட்டல் போட்டு, 10,000 அல்லது 15,000 ரூபாய் செலவு செய்து போட்டால் மூன்று மாதத்தில் மழை வந்து விட்டால் நான்காவது மாதத்தில் ரோடா இல்லையா என்று நினைக்கக்கூடிய அளவில் அத்தனையும் வாஷ்-அவுட் ஆகி விடுகிறது. தயவு செய்து அந்த மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து ரோடு போடும் வேலையில் ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் மூலமாக—எல்லா ரோடுகளுக்கும் தார் போடுகிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை—துரிதமாகப் போட்டு விட்டால் சர்க்காருக்குப் பணம் மிச்சமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, நான்காவது திட்டம் மிகவும் பாராட்டுக்குரிய திட்டம் என்று சொல்லி, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நம் சர்க்காருக்கு நன்றி சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கரு. சீமைச்சாமி**: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்பைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தேவையில்லை, நாட்டிற்கு திட்டங்களினால் எந்த

விதமான பயனும் இல்லை. ஆகவே, இந்த நான்காவது திட்டத்தை இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குத் தள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. மாதா கவுடர் அவர்கள் திட்டம் இல்லாமல் எந்த நாடும் முன்னேற முடியாது என்று சொன்னார்கள். இங்கிலாந்தில் எந்த திட்டம் இருக்கிறது? அமெரிக்காவில் இம்மாதிரி ஐந்தாண்டுத் திட்டங்கள் இருக்கின்றனவா? அந்த நாடுகள் முன்னேற வில்லையா. உலகம் பூராவும் பிரமிக்கக்கூடிய அளவுக்கு அமெரிக்கா முன்னேறவில்லையா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். திரு. மாதா கவுடர் அவர்கள் ஐந்து ஆண்டு திட்டங்களினால் கிராமங்களில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னார். எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அவர்களுடைய பேச்சே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். வரவுக்கு மிஞ்சிய செலவாக இருக்கிறது. ஏற்கனவே தொடங்கி இருக்கிற வேலைகளைப் பார்த்து, அவைகளில் என்ன பலன் வருகிறது என்பதை ஆராய்ந்து அதற்கு மேல் தான் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இந்திய நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களேகூட சமீபத்தில் இந்தக் கருத்தைத் தெரிவித் திருக்கிறார்கள். நமது மாநில தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அன்னிய செலாவணி நிலை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பணவீக்கம் இருக்கிறது, விலைவாசி உயர்ந்திருக்கிறது, ஆகவே இந்தத் திட்டத்தை தள்ளி வைக்கவேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. எஸ். கே. பட்டீல் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்; இதே கருத்தை எங்கள் கட்சித் தலைவர் மாபெரும் தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே சொல்லி விட்டார்கள். திட்டத்தினால் பலன் இல்லை. திட்டத்தினால் கடன் அதிகமாக இருக்கிறது, விலைவாசி உயர்ந்திருக்கிறது. உற்பத்தி பெருகவில்லை, பலன் இல்லாத திட்டத்தை நாட்டு மக்கள் மீது சுமத்தி வரி பளுவை அதிகரிப்பதில் பயன் இல்லை. ஆகவே, இந்தத் திட்டம் தேவையில்லை என்று எங்கள் மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நிதானமான முறையில் செல்லவேண்டும் என்று இந்திய பிரதம மந்திரி சாஸ்திரி அவர்கள் கூட சமீபத்தில் சொல்லியிருக்கிறார். ஆகவே, இதையெல்லாம் பார்க்கிறபொழுது இந்தத் திட்டம் தேவையில்லை. இந்தத் திட்டத்தை தள்ளி வைக்க வேண்டும் என்ற கருத்து நாட்டு மக்களிடையே ஏகோபித்த ஒரு அபிப்பிராயமாக உண்டாகியிருக்கிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையிலே முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்பொழுது முன்னுக்கு



பின் முரணாக இருக்கிறது. இந்தக் குறிப்பில் நான்காவது பாராவில்—

"திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் நமது மாநிலம் எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. திட்டமிட்ட வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இப்பதினைந்தாண்டுகளில், இம்மாநிலத்தின் வேளாண்மைத் துறையும் தொழிற் துறையும் வெகுவாக உரம் பெற்றுள்ளன".

இதே குறிப்பில் 7-வது பாராவில்—

"மூன்றாம் திட்டக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட இடையூறுகளுக்கு, முக்கியமாக விலைவாசிகளின் நிலையால் ஏற்பட்ட இடையூறுகளுக்கு, வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சியில் ஏற்பட்ட மந்தமே முதன்மையான காரணமாகுமென்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம்".

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்**: ஒன்று நம்முடைய ஸ்டேட்டைப் பொறுத்தது. இன்னொன்று அகில இந்தியாவைப் பொறுத்தது.

**திரு. கரு. சீமைச்சாமி**: எதைப் பொறுத்திருந்தாலும், முதல் அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: முரண் இல்லை என்று தான் எடுத்துக்காட்டினேன். முதலில் நான்காவது பாராவில் கூறப்பட்டிருப்பது நம்முடைய ராஜ்யத்தில் விவசாயமும், தொழிலும் நன்றாக விருத்தி அடைந்திருக்கிறது என்பது தான். ஆனால் 7-வது பாராவில் அகில இந்தியாவிலும் வேளாண்மையில் நாம் திட்ட இலக்குகளை அடைய முடியாத காரணத்தினால் மந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி**: உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவிலும், திட்டமிட்டபடி இலக்கை அடைந்திருக்கிறார்களா? 70 லட்சம் டன் உற்பத்தி செய்வதாக திட்டமிடப்பட்டது. 65 லட்சம் டன் தான் உற்பத்தி செய்ய முடிந்தது. பாக்கி 5 லட்சம் டன்னுக்கு எங்கே போவது? அதைத் தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் மக்கள் திட்டமாக இல்லை. போடுகின்ற திட்டங்கள் மக்களை மையமாக வைத்து போடுகின்ற திட்டமாக இல்லை. நாட்டிற்கு எது தேவைப்படுகிறது, நாட்டிலுள்ள மூலங்கள் என்ன, என்னென்ன காரியங்களைச் செய்ய முடியும் என்று பார்த்து திட்டம் போட்டால் அது ஜனநாயக திட்டமாக இருக்கும். நான்காவது திட்டம் இந்த அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை. ஆகவே இத்திட்டத்திற்கு ஓய்வு கொடுக்கவேண்டும்.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டிவிடுவது போலத் தான் இருக்கிறது. காரணம், திட்டத்தைப்பற்றி யெல்லாம் சொல்லியிருக்கிறார்களே தவிர, நான்காவது ஐந்தாண்டு திட்ட

காலத்தில் வரி ஏதேனும் உண்டா, வரி போடப்படுமா என்ற பேச்சே சொல்லப்படவில்லை. காரணம் அடுத்த தேர்தல் வர இருக்கிறது. திரு. மாதா கவுடர் அவர்கள் இதைக் காமராஜர் திட்டம் என்று சொல்லலாம் என்று கூறினார்கள். ஐந்து வருஷத்திற்கு ஒரு திட்டம் அதுவும் தேர்தலுக்கு முன்பே வருகிறது. ஆகவே, இதற்கு தேர்தல் திட்டம் என்று பெயர் வைக்கலாம் என்று கருதுகிறேன். காமராஜர் திட்டம் என்று பெயர் வைக்க வேண்டியதில்லை. பொருளாதார திட்டம் இல்லை இது. மக்கள் திட்டம் இல்லை இது. வாடிக்கிடக்கும் மக்களுக்கு மயக்கம் கொடுக்கும் மந்திரமாக இருப்பதுதான் இந்தத் திட்டம் திட்டக் கமிஷன் இருக்கிறது. நான்காவது திட்ட முதற் குறிப்பு புத்தகத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதுபோல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. திட்டக் கமிஷனிடமிருந்து எவ்வளவு பணம் வந்திருக்கிறது? மாகாணத்திற்கு என்ன தேவை என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? மாவட்டத்திற்கு என்ன தேவை, பஞ்சாயத்திற்கு என்ன தேவை, மாநிலத்திற்கு என்ன தேவை என்ற முறையில் பரிசீலனை செய்யப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. சட்டைக்கு துணி கொடுத்தாகிவிட்டது. அந்தத் துணியிலே சட்டை தைக்க வேண்டும், சட்டை சேருகிறதா, இல்லையா என்று தெரியாது, அவர்கள் கொடுத்த அளவுக்குத்தான் செய்யவேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், திட்டத்தை விட அதிகம் என்று சொல்லுகிறார்கள். எப்படிச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. திட்டக் கமிஷன் மாநிலத்திற்கு பணம் ஒதுக்கிவிட்டதா? பினான்ஸ் கமிஷன் ஒதுக்கி விட்டதா, எந்த முறையில் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. சட்டப்படி அவர்கள் சொல்ல முடியாது. ஏதோ அவர்கள் ஒதுக்குவார்கள், அதிகப்படி என்று எந்த அளவிலே சொல்ல முடியும் கேட்க விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்பிலே பக்கம் 10-ல், பாரா 25-ல்—

"மாநிலத் திட்டத்தின் விரிவான நிதிப் பொறுப்புகளை நிர்ணயித்த பிறகு தான் இத்தகைய திட்டங்களை தயாரிக்கும் வேலையைப் பயனுள்ள வகையில் மேற்கொள்ள முடியும் என்பதை இரண்டாவது திட்டத்தின் அனுபவம் நமக்குக் காட்டியுள்ளது"

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, பினான்ஸ் கமிஷன் இவ்வளவு என்று ஒதுக்கிவிட்டதா? எப்படி இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது? நிதிப் பொறுப்புகள் நிர்ணயித்த பிறகு தான் தயார் செய்யப்பட்டதா? இந்தத் திட்டத்தை தயார் செய்தது யார்? ஆகவே, இந்தத் திட்டத்தைப் பார்க்கும்பொழுது, நிதி திட்டத்துறை—தமிழ் நாடு அரசாங்கம்—இந்தத் திட்டத்தை தயாரித்திருக்கிறது. ஏதோ ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டக் குறிப்பில் பக்கம் 4-ல், 7-வது பாராவில் பார்க்கும்பொழுது—

"ஒரு உறுதியான தொழில் நுட்ப நிர்வாக அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தின் உயர்ந்த





இலக்குகளை அடைய இவ்வமைப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்"

"A strong techno-administrative machinery has been built up and it should be the main objective of the Fourth Plan to utilise fully this machinery for the attainment of higher targets."

ஒரு உறுதியான தொழில் நுட்ப நிர்வாக அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. எங்கே இருக்கிறது இந்த டெக்னோ அட்மினிஸ்டிரேடிவ் மெஷினிரி? பொருளாதார நிபுணர்கள் யார்? இந்த அமைப்பு என்ன செய்தது என்று சொல்ல முடியுமா? ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தயார் செய்ததுதானே இந்தத் திட்டம்? ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பொருளாதார நிபுணர்களா? பொருளாதாரத்திற்கும் ஆராய்ச்சிக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஆகவே, இப்படிப்பட்ட திட்டம் தேவையில்லை.

பிளானிங் கமிஷன் சொல்லியிருக்கிறது, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஸ்டேட் லெவல் பிளானிங் மெஷினரி வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இங்கே அந்த மெஷினரி இதுவரை கிடையாது. இந்தத் திட்டத்தை எப்படி தயார் செய்தீர்கள்? நிதி திட்டத் துறை தயார் செய்த திட்டம் தானே இது? ஆகவே, நமது மாகாணத்திற்கு ஸ்டேட் பிளானிங் மெஷினரி ஒன்று வேண்டும். வருஷம் பூராவும் அது வேலை செய்யவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்பொழுது திட்டம் வேண்டும் என்று சொல்கிறீர்களா?

**திரு. கரு. சீமைச்சாமி:** நாங்கள் வேண்டாம் என்று சொன்னாலும் நீங்கள் அதை எடுத்துக்கொள்ளப் போவதில்லை. இரண்டு வருஷங்களுக்கு திட்டத்துக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். மறு பரிசீலனை செய்யவேண்டும். ஒரு பர்மனென்ட் ஆபீஸர் வேண்டும். வருஷம் பூராவும் அவர் வேலை செய்யவேண்டும். வருஷம் பூராவும் ஸ்டேட்டில் சர்வே பண்ணி, என்னென்ன திட்டம் இருக்கிறது, எந்த அளவுக்கு திட்டம் பயன் தருகிறது, எந்த அளவுக்கு திட்டம் பயன் தரவில்லை என்றெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, எடுத்துக்காட்டாக ஸ்டேட் லெவல் மெஷினரி ஒன்று வேண்டும்.

சாதாரணமாக ஐந்தாண்டு திட்டங்கள் தயாரிக்கப்படும் பொழுது, பல தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தி, காட்டு வளம், பால் பண்ணை, கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி, மின்சாரம், தொழில் வளர்ச்சி, சாலைகள், கல்வி, சுகாதாரம் என்ற பல தலைப்புகளின் கீழ் திட்டம் போடப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன பலன், இரண்டாவது திட்டத்தில் என்ன பலன் என்றெல்லாம் பார்த்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டுவிட்டதா? ரூபாய் 750 கோடி திட்டக்கமிஷன் கொடுக்கும் என எதிர்பார்த்து, அதற்கு தகுந்த மாதிரி திட்டம் போடப்பட்டிருக்கிறது. நிச்சயம் எதிர்பார்த்த பலம் வருமா? நாம் இந்தத் திட்டம் வேண்டும் என்றால் அந்தத்

திட்டத்தை நிச்சயம் நிறைவேற்ற முடியுமா? பிளானிங் கமிஷன் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறது? அந்தப் பணத்தை வைத்து, அதற்குப் பிற்பாடு திட்டம் தயார் செய்தால் நல்லது. ஏதோ திட்டம் போட வேண்டும் என்ற முறையில்தான் திட்டம் போடப்பட்டிருக்கிறது. மக்களுக்கு வீடு, மக்களுக்கு இலவசக் கல்வி என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில் நடக்குமா? பார்த்து மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திட்டங்களுக்கு செலவழிக்கின்ற பணம் ஏதோ மண்ணிலே விடுகிற தண்ணீர் மாதிரிதான் இருக்கிறது. திட்டங்கள் போட்டு என்ன பலன்? பதினெட்டு வருஷங்களாகப் பார்க்கிறோம். விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. மூன்று திட்டங்கள் போட்டும் விலைவாசி இறங்கியிருக்கிறதா? விலைவாசி உயர்ந்து கொண்டேதான் போகிறது. திட்டத்தினால் எந்தவிதமான பலனும் இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். திட்டத்திற்குப் பல கோடி ரூபாய் செலவழிக்கின்றோம். உற்பத்தி பெருகினால் தான் விலைவாசி இறங்கும். ஆனால் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, திட்டம்போட்டு மக்கள் மீது வரிச் சுமையை சுமத்துவதில் என்ன பிரயோசனம்? 'பினான்சியல் டார்ஜெட்' தான் நிறைவேறியிருக்கிறதே ஒழிய 'பிஸிகல் டார்ஜெட்' 'அசீவ்' ஆகவில்லை. ஆகவேதான் திட்டத்தில் கோளாறு இருக்கிறது, திட்டம் நல்ல நிபுணர்களால் பரிசீலனை செய்யப்படவில்லை, திட்டத்தை தள்ளிப்போட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நான்காவது ஐந்தாண்டு திட்ட முதற்குறிப்பு புத்தகத்தின் 6-ம் பக்கத்தில் பார்க்கிறபோது, என்ன சொல்லப் பட்டிருக்கிறது?

" நீர் ஆதாரங்களை நம் மாநிலம் ஏறக்குறைய முற்றிலும் பயன் படுத்தியாகி விட்டது. எனவே, பாசன வசதிகளை மேலும் விரிவு படுத்துவது கடினம். மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளின் போக்கை மாற்றி, இம்மாநிலத்தின் வறண்டபகுதிகளுக்குப் பாசன வசதி யளிக்கும் பொருட்டு, அண்டையிலுள்ள, மாநிலங்களுடன் ஓர் உடன்பாடு ஏற்பட்டாலொழிய, இம்மாநிலத்தில் பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து பல போகப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கான வாய்ப்புக்கள் மற்றைய மாநிலங்களை விடக் குறைவாகவே இருக்கும். சிறு பாசனத் துறையின் கீழும், ஓரளவுக்குத்தான் வளர்ச்சி காண இயலும். சாகுபடிக் கேற்ற தரிசு நிலங்களை பயன்படுத்தி சாகுபடியை மேலும் விஸ்தரிப் பதற்கும் வாய்ப்புகள் பெரும் அளவில் இல்லை. எனவே, தரமான விதைகள், உரங்கள், பசுந்தாள் எருக்கள் போன்றவற்றைப் பயன் படுத்தியும் பொதுவாக வேளாண்மைத் துறையில் நவீன சாகுபடி முறைகளைப் பெரும் அளவில் மேற்கொண்டும் உற்பத்தியை அதிகரிப்பது ஒன்றே நமக்குள்ள வழி" என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இது தானா? வேறு தரிசு நிலங்கள் இல்லையா? நீர்பாசன



வசதிகளுக்கு வழி இல்லையா? காங்கிரஸ் ஆட்சியில் பாலைவனங்கள் சோலைவனங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனவா? வீடுகள் கட்டு வதற்காக எவ்வளவு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன? சென்னையை அடுத்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீடுகள் கட்டுவதற்காக, தொழிற்சாலைகளுக்காக நஞ்சை நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன. அதே போலத் தான் திருச்சியைச் சுற்றிலும், மதுரையைச் சுற்றிலும் நஞ்சை நிலங்கள் வீடுகள் கட்டுவதற்கென்று ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக் கின்றன. புழல் ஏரி அழிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி வண்டியூர், குளப்பக்கம், பால் பண்ணைக்காக ஒரு கண்மாய் அழிக்க பட்டிருக்கிறது, எவ்வளவோ கண்மாய்கள் அழிக்கப்பட்டிருக் கின்றன. இப்படி நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்து தொழிற் சாலைகள் ஏற்படுத்தினால் உற்பத்தி பெருகிவிடுமா? பெருகாது. இந்த 18 வருஷ ஆட்சியிலே விவசாயம் புறக்கணிக்கப்பட்டு விட்டது. நான் சொல்லவில்லை, இதை ப்ளானிங் கமிஷன் தலைவர் அசோக் மேதா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நான்காவது திட்டம் ஒரு விவசாயத் திட்டமாக இல்லை. இது ஒரு தொழில் திட்டம் என்ற வகையில்தான் இருக்கிறது. அதோடு கூட, இங்கே உற்பத்தியாகிற பொருள்கள், மக்களுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக ஜீனியை எடுத்துக்கொண்டால், வெளிநாடுகளுக்கு அனுப்பி குறைந்த விலையில் விற்று விடுகிறார்கள். கேட்டால், அந்நியச் செலாவணி சம்பாதிக்கவேண்டும் என்கிறார்கள். இங்கே ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. ஏன் இந்த நிலை? அதே போலத்தான் பிண்ணாக்கும். உற்பத்தி பெருக வேண்டு மானால், பிண்ணாக்கு உரம் அவசியமானது. ஆனால், அதை யெல்லாம் வெளி நாடுகளுக்கு அனுப்பி, அந்நியச் செலாவணி என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படி கிடைக்கும் அந்நியச் செலா வணியால் என்ன பிரயோசனம்? கிராமத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள், " மாட்டை விற்று சாட்டைக் கம்பு வாங்கியது" என்று. அது போல, விதையைப் போட்டு, நாற்றங்காலைச் சுற்றி வரும் விவசாயிக்கு அல்லவா தெரியும் பிண்ணாக்கின் அவசியம். அதை விற்றுவிட்டு, வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்நியச் செலாவணி பெற்று, எப்படி விவசாயத்தைக் காப்பாற்றப் போகி றார்கள்? இப்பேர்ப்பட்ட நிலைமை பரிசீலிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு ரசாயன உரங்கள் கொடுக்க வேண்டும், நவீன இயந்திரங்கள் உபயோகப்படுத்தச் செய்ய வேண்டும் என்று சொன்னால் மட்டும் போதுமா? குதிரையைத் தண்ணிக்குத்தான் கொண்டுபோகலாம்; தண்ணியைக் குடிக்கச் செய்யமுடியுமா? இது மாதிரிதான் இருக்கிறது இந்த திட்டம். விவசாயிகளுடைய மனம் மாறிக் கிடக்கிறது. இந்தப் பதினெட்டு வருஷ ஆட்சியில், பல விதமான நிலச் சட்டங்கள், பலவிதமான வரிகள், பலவிதமான இடையூறுகள், இவற்றினால் எல்லா விவசாயிகளும் மனம் சோர்ந்து வெம்பி கிடக்கிறார்கள். அவர்களைத் தட்டிக்கொடுத்து

உற்சாகப்படுத்த வேண்டும். ஆகவே, அந்த அளவுக்கு அரசாங்கம் ஒரு தனித் திட்டம் போடவேண்டும், அது விவசாயத் திட்டமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணியடிக் கப்பட்டது) Two minutes please நில உச்சவரம்பு சட்டம் வந்தது. விவசாயிகளுக்கு கேடு விளைவிக்கும் சட்டம். இப்பொழுது கட்டாய கொள்முதல் காரணமாக விவசாயிகள் மிக்க அல்லல் படுத்தப் படுகிறார்கள். விவசாயிகள் தங்கள் நெல்லை மச்சில் வைக்க முடியவில்லை. அடுத்தாற்போல, துணி உற்பத்தி செய் பவர்கள், உற்பத்தியை தேக்கி வைத்துக் கொள்ள முடியும்; மற்றபடி சைகிள் உற்பத்தியை தேக்கி வைத்துக் கொள்ள முடியும். மோட்டார் சைகிள் உற்பத்தியை வைத்துக் கொள்ளலாம். ஆனால் உணவு தேவைப்படுகிறது, அதிகமாக உற்பத்தி செய்தால், இந்த விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று என் அரசாங்கம் நிர்ப் பந்தம் செய்யவேண்டும். ஆகவே, கட்டாய கொள்முதல் விவசாயிகள் மீது சுமத்தப்படும் "மறைமுகவரி" யாக இருக்கிறது, என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். சர்க்கார் ரூ. 25-க்கு விற்க வேண்டும் என்று சொல்லும்போது, விவசாயிகள் வெளியில் மூட்டை ரூ. 40-க்கு விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அவர் களுக்குக் கிடைக்கும் இந்த லாபமாகிய ரூ. 15 ஒவ்வொரு மூட்டை க்கும் நஷ்டமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அரசாங்கம் விவசாயிகளை நசுக்கி மறைமுகமாக ஒடுக்குகிறது. முதல் திட்டத்திலே விவசாயத்திற்கு செய்த செலவு 10 சத வீதம், இரண்டாவது திட்டத்திலே 11 சத வீதம், மூன்றாவது திட்டத்தில் 16 சத வீதம்தான். அதே நேரத்திலே, தொழில் துறையை எடுத்துக் கொண்டால், முதல் திட்டத்திலே 4 சத வீதம், இரண் டாவது திட்டத்திலே 20 சத வீதம், மூன்றாவது திட்டத்திலே 25 சத வீதமும் செலவாகியிருக்கிறது. இதைப் பார்க்கிறபோது என்ன தெரிகிறது? ஏழைகள் ஏழைகளாகவே இருப்பதற்கும், பணக்காரர்கள் தொழில் மன்னர்களாக ஆவதற்கும் இந்த திட்டம் வழி வகுக்குகிறது. தொழில் அமைச்சர் சொல்லுகிறார்கள், ராம நாதபுரத்தில் 22 மில்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று. அது யார் வைத்திருக்கிறார்கள்? 10 மில்கள் தியாகராஜ செட்டியாரும், 10 மில்கள் ராமநாதன் செட்டியாரும் வைத்திருக்கிறார்கள். இரண்டு மில்கள்தான் அந்த ஜில்லாவில் இருக்கிறவர்களுக்கு சொந்தமாக இருக்கின்றன. இது எதைக் காட்டுகிறது? ஏழைகள் ஏழைக ளாகவே இருக்கவும், பணக்காரர்கள் தொழில் மன்னர்களாகவும் வாய்ப்பு அளிக்கிறது. இந்தக் குற்றச் சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

கிழக்கு ராமநாதபுரத்திற்கு என்று ரூ. 77 லட்சம் ஒதுக்கப் பட்டு ரூ. 40 லட்சம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மிச்சம் அப்படியே இருக்கிறது. அதே போலத்தான் மதுரை ஜில்லா விலும். இப்படிக் கிடைக்கும் தொகைகளை செலவு செய்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



கிராப் இன்ஷூரன்ஸ் முறையை அமுலுக்கு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஒரு பாது காப்பு இருந்தால்தான் விவசாயிகள் விவசாயத்தில் இறங்க தைரியம் ஏற்படும்.

இந்தத் திட்டத்தைப் பார்க்கும்போது, மாதவரம் பால் பண்ணைக்கு என்று ரூ. 40 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு ஒதுக்கினாலும் அந்தப் பண்ணை வருஷாவருஷம் நஷ்டத் தில்தான் வேலை செய்கிறது. அதிலே சொல்லப்பட்டிருக்கிறது, அவர்கள் 75 லட்சம் லிட்டர் பாலை கையாளுகிறார்கள் என்று. இருக்கிறதா? 25,000 லிட்டர் கூட உற்பத்தி ஆகவில்லையே? இதற்கு ஏன் மறுபடியும் தொகை? இப்பேர்ப்பட்ட திட்டங்கள் தேவைதானா என்று மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

சென்னையில் ஜனநெருக்கடியைக் குறைக்க, செங்கல்பட்டு கலெக்டர் ஆபீசையும், இன்னும் மற்ற மாவட்ட ஆபீஸ்களையும் இங்கிருந்து மாற்றி வேறு இடத்திற்கு அனுப்பினால் கொஞ்சம் கணிசமான அளவுக்கு போய்வருகிற ஜனத்தொகையும் குறையும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும், அதற்காக அதை ஒத்திப் போடவேண்டும் என்று சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சர்க்கார் சார்பில் கனம் முதல் அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நான்காவது திட்ட நகல் சம்பந்தப்பட்ட இந்த விவாதத்தில் நானும் கலந்துக்கொண்டு என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். திட்டங்கள் வேண்டாம் என்று சொல்லக்கூடிய, வாதாடும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல நாங்கள். திட்டமிட்டு சமுதாயத்தின் முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்கிற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற கட்சி எங்களுடையது. திராவிட முன்னேற்றக் கழகம், சர்க்கார் திட்டங்களைப் போட ஆரம்பித்த காலம் முதலாக, இன்னும் திட்டங்கள் நிறைய வேண்டும் என்றுதான் சொல்லிவந்திருக்கிறது. திட்டமே தேவையில்லை என்று வாதாடிய காலமே இல்லை. ஆனால் போடப்படுகிற திட்டங்களின் நன்மைகள் மக்களுக்குப் போய் சேரச் செய்யவேண்டும் என்று செயல்படவேண்டியது சர்க்காரின் கடமை. அதை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது எங்கள் கடமை. போட்டு முடிக்கப்பட்ட திட்டங்கள் மூன்றுக்கும் செல வழிக்கப்பட்ட தொகை, 600 கோடி. அப்படி 600 கோடிக்கும் மேலாக செலவு செய்து, மூன்று திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, இன்றைக்கு நான்காவது திட்டத்தை 750 கோடி ரூபாய் செலவில் வகுத்துக் கொண்டிருக்கிறது நம்முடைய அரசாங்கம். அதை நினைத்துப் பார்க்கிறபோது, போட்டு முடித்திருக்கிற மூன்று திட்டங்களால் நாட்டு மக்களுக்கு பலன் ஏற்பட்டிருக்கிறதா, அதைப்பற்றி சர்க்கார் கணக்குப் போட்டுப் பார்த்திருக்கிறார்களா என்று பார்த்தால், அதைச் சர்க்கார் செய்யவில்லை என்கிற குற்றச்

[திரு. ப. உ. சண்முகம்] [6th August 1965

சாட்டைச் சாட்டாமல் இருக்க முடியவில்லை. அப்படிக் கணக்குப் பார்த்திருந்தால், சர்க்கார் சற்று அச்சப்பட்டிருக்கும். போட்ட மூன்று திட்டங்களால் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்திருப்பார்கள். நான்காவது திட்ட நகலை சபைக்கு அறிமுகப்படுத்தி வைத்த கனம் முதல் அமைச்சர், 'வெற்றி, வெற்றி' என்கிற பாணியில் பேசி முடித்தார்கள். பணத்தைச் செலவு செய்தாகிவிட்டது. அதனால் திட்டம் வெற்றி என்று சொல்லிவிட முடியுமா? அணைகளைக் கட்டியாகிவிட்டது, வேறு கட்டடங்களைக் கட்டியாகி விட்டது என்றால் போதுமா? இதை யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த திட்டங்களால் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா? திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்ன? மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படவேண்டும் என்பது அல்லவா? இன்றைக்கு உயர்ந் திருக்கிறதா? இல்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்களே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். தேசீய வருமானம் சற்று உயர்ந்திருக்கலாம். ஆனால் அதன்காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா? உயரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதைக் கனம் முதல் அமைச்சர் அவர்களே தெளிவாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். தேசீய வருமானம் வளர்ந்திருக்கிறது, ஆனால் மக்களின் வாழ்க் கைத்தரம் உயரவில்லை என்றால், அதன் பொருள் என்ன? வருமானம் உயர்ந்திருக்கிறது, வந்திருக்கிறது. ஆனால் அது மக்களுக்குப் போய்ச்சேரவில்லை. ஏன்? அதற்கு அரசாங்கம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த வருமானம் எல்லாம் யாருடைய இரும்புப் பெட்டியில் போய் புகுந்து கொண்டிருக்கிறது? வேறு விதத்தில் சொல்ல வேண்டும் என்றால், அரசாங்கமே ஒத்துக்கொண்டிருப்பது போல, அவ்வளவும் கறுப்பு பணமாக மாறியிருக்கிறது. இதுதான் மறைமுகமாகச் சொல்லப் பட்டிருப்பது. இதுதான் அரசாங்கத்தின் மீது நாங்கள் சுமத்தும் குற்றச்சாட்டு. போட்ட திட்டங்களின் பலன்கள் பொது மக்களுக்குப் போய்ச் சேரவில்லை.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இவ்வளவு செலவு செய்தும் மக்களின் வாழ்க்கைத்தரம் ஒரு படி கூட உயரவில்லை, முன்னேறவில்லை என்றால், மேலும் மேலும் செலவு செய்து என்ன பலன்? அதைக் கணக்குப் பார்க்கத் தவறி விட்டது அரசாங்கம் என்கிற குற்றச்சாட்டிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. 600 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, போட்டிருக்கிற வரிப் பணத்தை எண்ணிப் பார்க்கும்போது, வாங்கியிருக்கும் கடன் தொகைகளை எண்ணிப் பார்க்கும்போது, கடன் சுமையை எண்ணிப் பார்க்கும்போது, நாடு செழித்திருக்கிறதா என்று கேட்கத் தோன்றுகிறது. இருக்கும் நிலைமை என்ன? உணவுப் பற்றாக்குறை, எல்லாமே பற்றாக்குறை, அவ்வளவும் தீர்க்கப் படவில்லை. உணவுப் பிரச்னையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு



6th August 1965] [திரு. ப. உ. சண்முகம்]

வாதத்திலும் குறிப்பிட்டார்கள். "நாட்டின் ஜனத்தொகை ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டு போகிறது, உணவுப் 10-30 a.m.
பிரச்சினையைப் பொறுத்த மட்டில் அதற்கேற்றவாறு நாங்கள் திட்டம் வகுக்கிறோம்" என்று சொன்னார்கள். கடந்த பதினைந்து வருட காலத்தில் உணவு உற்பத்திக்காக மட்டும் இந்தச் சர்க்கார் ஏறக்குறைய 113 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். மின்சாரக் கணக்கை நான் சேர்க்காமல், வேளாண்மை, பாசனம் போன்ற துறைகளைக் கூட்டிச் சொல்கிறேன். ஏறக்குறைய 113 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். வேளாண்மை, உணவு உற்பத்திக்காக 113 கோடி ரூபாய் செலவு செய்தும், எண்ணிய இலக்கை அடைந்தார்களா என்றால், இல்லை. முதல் திட்டத்தின் துவக்கத்தில் தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி 38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது என்று சர்க்காருடைய புள்ளி விவரத்தில் இருக்கிறது. 113 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறதே இந்தச் சர்க்கார், என்ன உற்பத்தி ஆகியிருக் கிறது என்று பார்த்தால் 65 லட்சம் டன் உற்பத்தியாகியிருக்கிறது. ஆக, 27 லட்சம் டன் தான் அதிக உற்பத்தி செய்ய முடிந்தது. இவர்கள் என்ன சொன்னார்கள்? 70 லட்சம் டன் உற்பத்தி செய் வதாகச் சொன்னார்கள். 70 லட்சம் டன் உற்பத்தி செய்தாலும் கூட இந்த மாநிலம் 'ஸர்ப்ளஸ்' ஆகாது; மிகையாக இருக்காது, சரிக்கட்டிப் போகும் என்றார்கள். ஆனால், 65 லட்சம் டன் தான் உற்பத்தி செய்ய முடிந்தது. என்ன காரணம்? முதல் அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். 'விவசாய உற்பத்தியில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மந்தம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? கட்டிய அணைகளில் எல்லாம் தண்ணீர் தேங்காமல் அவை வற்றிப் போய் விட்டனவா? உடைந்து விட்டனவா? வெட்டிய கால்வாய்களில் நீர் வழியாமல் போய்விட்டனவா? கொடுத்த உரத்தில் தான் குறைவா? விவசாயிகளுக்குக் கொடுத்த சலுகையில் தான் ஏதாவது குறைந்துவிட்டதா? இவ்வளவு இருந்தும், விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லையே, என்ன காரணம்? இந்தக் காரணத்தைக் கடந்த இரண்டாண்டு காலமாக ஒரு அரசாங்கம் மட்டுமல்ல, மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் சேர்ந்து ஆலோசனை நடத்துகிறார்களாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை. இரண்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி முடியவில்லை; அதற்குள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போவது என்று சொன்னால், உலகம் சிரிக்கும் நம்மைப் பார்த்து. உணவு உற்பத்தியை 70 லட்சம் டன்னாக ஆக்க முடியவில்லை. பணம் அதிகமாக செலவு ஆக்கியிருக்கிறார்கள். நாட்டு மக்களுக்குப் போதிய உணவு இந்தச் சர்க்கார் கொடுக்க வில்லை என்றால், உணவு உற்பத்தியில் தோல்வி என்று ஒத்துக் கொள்ளட்டும். உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்கம் படுதோல்வி அடைந்திருக்கிறது. நாட்டு மக்களுக்குப் போதிய உணவு கொடுப்போம் என்று சொன்னவர்கள், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும், ரேஷன் கார்டு கொண்டுவரப்போகிறோம் என்று சொல்வது வேடிக்கையாகக்கூட

[திரு. ப. உ. சண்முகம்] [6th August 1965

இல்லை, உள்ளபடியே தலைகுனிய வேண்டியிருக்கிறது. இவ்வளவு பேர்கள், இவ்வளவு ஆராய்ச்சி நிபுணர்களை வைத்துக்கொண்டு, பெரிய திட்டக் கமிஷனை வைத்துக்கொண்டு, சீரும் சிறப்பும் மேன்மையும் தங்கிய மந்திரிமார்களை வைத்துக்கொண்டு இருந்தும் திட்டம் தோல்வியடைந்திருப்பானேன்? நாட்டு மக்களுக்குப் பயன் இல்லாமல் போயிருப்பானேன்? நீர்வளத்தைப் பொறுத்த வரையில் முழுவதும் பயன்படுத்தி விட்டோம், எதுவும் மிச்சம் இல்லை என்று சொல்கிறார்கள். ஏரிகளையெல்லாம் ஆழப்படுத்தி யாய்விட்டது, மண் வளப் பாதுகாப்புக்கு ஏராளமாகச் செலவு செய்திருக்கிறோம், விதைகளை ஏராளமாகத் தயார் செய்திருக்கிறோம். என்றெல்லாம் சொல்கிறார்கள். இருந்தாலும், உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை என்று சொன்னால் எப்பொழுது செய்யப்போகிறார்கள்? எந்த வாதத்தைக் கூறி அதற்கு என்ன பதில் வரப்போகிறது? அண்டை மாநிலத்துத் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்க்க இந்த மாநிலத்தின் சார்பாகத் திட்டம் இருக்கிறதா என்றால், இந்த மாநிலத்தின் வேண்டுகோள் இருக்கிறதே தவிர, திட்டம் தயாரிக்கப்பட்டு இன்னும் கொடுக்கப் படவில்லை. இந்தச் சர்க்கார் மீது நான் குற்றம் சாட்டுகிறேன், உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் படுதோல்வி அடைந்து விட்டது. ஆனால், கட்டப்பட்டிருக்கும் அணைகள் ஏராளம். வாய்க்கால்களும் நிறைய வெட்டியிருக்கிறார்கள். அணைகளைக் கட்டி, வாய்க்கால்களை வெட்டியானதற்குப் பிறகு உணவு உற்பத்தி ஏற்பட்டிருக்க வேண்டுமே? உணவு உற்பத்தி அதிகரித்திருந்தால் விலைவாசியும் குறைந்திருக்க வேண்டுமே? ஏன் குறையவில்லை? இந்தக் கேள்விக்கு என்ன பதில்? இந்த நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் வரிக் கொடுமைகள் கொஞ்சமா? 600 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்று முதலமைச்சர் பெருமைப் படுகிறார். மத்திய சர்க்காருடைய எந்த உதவியும் இல்லாமல் மாநில சர்க்காரே திட்டம் நிறைவேற்றியிருக்கிறோம் என்று இவ்வளவு பெருமைப்பட்டிருக்கிறார் என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய இரத்தத்தைப் பிழிந்து வரி வசூலித்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகுமா? இவ்வளவு செலவு செய்தும் நாட்டு மக்களுடைய கஷ்டம் போகவில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பைப் பார்க்கும்போது பசுத் தோல் போர்த்திய புலி போல் இந்தச் சர்க்கார் இதைக் காட்டியிருக்கிறது. மூவாயிரம் கோடி ரூபாய் புது வரி வரப்போகிறது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று சொல்கிறார்கள். இந்தச் சர்க்காருடைய பதில் என்ன? "மூவாயிரம் கோடி புது வரியை நாற்பது கோடி மக்கள் மீது போடுவது நியாயமா?" என்ற கேள்வியைச் சாதாரண சண்முகம் கேட்கவில்லை, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. காமராஜர் கேட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். "இந்தச் சர்க்கார் போடுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்." என்று அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கூட உதறித் தள்ளிவிட்டு "முடியாது, போட்டுத்தான் ஆகவேண்டும்" என்று அசோக் மேத்தா சொல்லி



6th August 1965] [திரு. ப. உ. சண்முகம்]

விட்டார், மூவாயிரம் கோடி புது வரியை நாற்பது கோடி மக்கள் மீது போடுவது என்றால், ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு குடிமகன் தலையிலும் 750 ரூபாய் புது வரி விழுகிறது. ஆண்டொன்றுக்கு 150 ரூபாய் நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் கட்ட வேண்டும். கட்ட முடியுமா? ஏன் வரி போடப் போகிறார்கள் என்று அருள் கூர்ந்து சொல்லியிருக்கவேண்டும். மாநில சர்க்கார் எவ்வளவு வரி போடப் போகிறது? எவ்வளவு கடன் வாங்கப் போகிறது? இவ்வளவு வரிச்சுமையை நாட்டு மக்கள் மீது சுமத்தி விட்டு நாட்டு மக்களை வாழவைக்கப் போகிறார்களா? இந்தச் சர்க்கார் மீது குற்றஞ்சாட்டுவது இதுதான். நாட்டு மக்களிட மிருந்து வரியை வாங்கி, வெளிநாட்டில் கடன் வாங்கி, பணக் காரர்கள் இரும்புப் பெட்டியில் கறுப்புப் பணம் போவதற்கு இந்தச் சர்க்கார் உடந்தையாகிவிட்டது என்ற இந்தக் குற்றச் சாட்டைப் பலமாக நான் சாட்டுகிறேன். இந்தக் குற்றச்சாட்டி லிருந்து இந்தச் சர்க்கார் தப்பித்துக்கொள்ள முடியாது.

உள்ளபடியே நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் பேசுவதற்கு ஆதாரமாக இருப்பதெல்லாம் சர்க்கார் கொடுக்கும் புத்தகங்கள்தான். எங்களிடத்தில் கொடுக்கப்பட் டிருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தில் கொடுக் கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களில் தான் எத்தனை எத்தனை தவறுகள்? ஒன்றா? இரண்டா? ஏராளமான தவறுகள். இத்தனை தவறுள்ள புத்தகத்தை நான் பார்த்ததில்லை. தவறுகள் நிறைந்த இந்தப் புத்தகத்தை வைத்துக்கொண்டு உறுப்பினர்களாகிய நாங்கள் இந்த மன்றத்தில் பேசவேண்டியிருப்பதைக் குறித்து நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன். இந்த மன்றத்தில் எங்களுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு புத்தகங்களிலுமே தவறுகள் இருக்கின்றன. தவறு செய்யாத இலாகா என்று கருதப்படுகிற தொழில் பிரிவிலே கூட தவறு நடந்திருக்கிறது என்றால் குற்றஞ்சாட்டாமல் எப்படி இருக்க முடியும்? உள்ளபடியே இந்தச் சர்க்கார் கொடுத்த இந்தப் புத்தகத்தை வாபஸ் பெற்று, திருத்திக் கொடுக்க வேண்டும். தொழில்களைப் பொறுத்தவரையில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை லைசன்ஸ்கள் கொடுத்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை லைசன்ஸ்கள் கொடுத்தார்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை லைசன்ஸ்கள் கொடுத்தார்கள் என்று இந்தப் புத்தகத்தில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை லைசன்ஸ்கள் கொடுக்கப் பட்டன, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எத்தனை லைசன்ஸ்கள் கொடுக்கப்பட்டன என்ற விவரங்கள் முன்பு எங்களுக்குக் கொடுத்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல் வேன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி சென்ற முறை எங்களுக்குக் கொடுத்த புத்தகத்தில், இரும்பு, எஃகு உலோகங்கள்

தயாரிப்புக்காகக் கொடுக்கப்பட்ட லைசன்ஸ்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 என்றும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 55 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தப் புத்தகத்தில் இதுபற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது. புள்ளி விவரத்தில் தவறு இருக்கிறது. முன்பு கொடுத்த புத்தகத்தில் 8 என்றும், 55 என்றும் இருந்தது, இந்தப் புத்தகத்தில் 9 என்றும் 59 என்றும் இருக்கிறது. பத்து வருஷங்களுக்கு முன்பு கொடுத்த லைசன்ஸ்கள் எண்ணிக்கையிலே மாறுதலா? அப்பொழுது 8 என்று போட்டுவிட்டு, இப்பொழுது 9 என்று போட்டிருக்கிறார்கள் என்றால், சர்க்கார் என்ன நடத்துகிறார்கள்? இப்படிப்பட்ட தவறுகள் ஒன்று இரண்டு அல்ல. அடுத்து, "பொறியியல் (இயந்திரங்கள் சம்பந்தமானது)" என்ற இனத்தில் மூன்றாவது திட்டப் புத்தகத்தில் 16 லைசன்ஸ்கள் முதல் திட்டத்தில் என்றும், 133 லைசன்ஸ்கள் இரண்டாவது திட்டத்தில் என்றும் போட்டிருக்க இந்தப் புத்தகத்தில் முதல் திட்டத்தில் 16 என்றும், இரண்டாவது திட்டத்தில் 130 என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மூன்றைக் காணோம். அடுத்து, "பொறியியல் (மின்சாரம்)" சம்பந்தப்பட்ட லைசென்ஸ்கள் முதல் திட்டத்தில் கொடுக்கப்பட்டதாக முதல் புத்தகத்தில் 5 என்று போட்டிருக்க, இந்தப் புத்தகத்தில் 4 என்று போட்டிருக்கிறார்கள். இதே இனத்தில் இரண்டாவது திட்டத்தில் கொடுக்கப்பட்ட லைசன்ஸ்கள் 46 என்று முதல் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்க, இந்தப் புத்தகத்தில் 45 என்று போடப்பட்டிருக்கிறது. இப்படிப் புள்ளிவிவரங்களில் தவறுகளோடு இந்தப் புத்தகத்தை எங்களுக்குக் கொடுத்திருப்பதைக் குறித்து உள்ளபடியே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சர்க்கார் இந்த மன்றத்தை மிக மிகக் கேவலமாக நடத்துகிறது, அல்லது எதிர்க்கட்சியினரைத் துச்சமாகவோ, அலட்சியமாகவோ கருதுகிறது என்று தான் சொல்லவேண்டும். இல்லாவிட்டால், இப்படித் தவறான புள்ளிவிவரங்கள் நிறைந்த புத்தகத்தைக் கொடுத்திருக்க மாட்டார்கள். தப்பான புள்ளிவிவரங்களைக் கொடுத்து சம்பந்தப்பட்ட இலாகா இந்த மன்றத்தை அவமதிக்கிறது. சம்பந்தப்பட்ட இலாகா இதிலுள்ள புள்ளி விவரங்களைத் திருத்தியிருக்கவேண்டும். அந்த இலாகாவினர் மீது நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இந்த இலாகாவைப்பற்றிப் பேசும்போது, மற்றப் புள்ளிவிவரங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றன என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. எல்லா இலாகாக்கள் பற்றிய புள்ளி விவரமும் தகராறாகத்தான் இருக்கிறது. இந்தச் சட்ட மன்றத்தை விட வேறு எந்த மன்றம் வேண்டும்? இங்கேயே தவறு நடந்தால் வேறு எங்கே புள்ளிவிவரத்தைச் சரியாகக் காட்டப் போகிறார்கள்? விளைச்சலை எடுத்துக்கொண்டாலும் அதே கதி தான். புத்தகத்திற்குப் புத்தகம் மாறுகிறது. நெல் விளைச்சலைப்பற்றிய புள்ளி விவரத்திலும் இப்படி மாற்றம் இருக்கிறதே, இப்படித் தவறான புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு இந்தச் சர்க்கார் அறிக்கையைக் கொடுக்கலாமா? இப்படிக் கொடுப்பது எந்த வகையில் நியாயம்



என்று கேட்கிறேன். இந்த நாட்டில் தொழில் வளம் வளர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள், நாட்டிலே தொழில் வளங்கள் பெருகியிருக்கின்றன, ஆலைகள் அமைத்துவிட்டோம் என்று பெருமைப்பட்டிருக்கிறார்கள். நான் இந்தச் சர்க்காரைக் கேட்கிறேன். கட்டப்பட்ட ஆலைகளின் மூலம் இந்த நாட்டிலே உற்பத்தியாகக்கூடிய பொருள்கள், மக்களுக்குத் தேவையான பொருள்கள் நாட்டு மக்களுக்கு எளிதாகக் கிடைக்கின்றனவா, மலிவாகக் கிடைக்கின்றனவா என்றால், இல்லை. சிமெண்ட் ஆலைகளும் சர்க்கரை ஆலைகளும் ஏராளமாக இருக்கின்றன. இருந்தும், நாட்டிலே சிமெண்ட் பற்றாக்குறை இருக்கிறது என்றால், ஏராளமான பேர் கட்டடம் கட்டுகிறார்கள், அதனால் சிமெண்ட் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். கிராமத்திலே இருக்கிறவர்கள், கூழ் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது காப்பி சாப்பிடுகிறார்கள், அதனால் சர்க்கரைப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் சமாதானம் எத்தனை நாளைக்குச் சொல்லிக் கொண்டிருப்பது?

நான்காவது திட்டத்தைப் பார்த்தேன். புதிதாக ஆலைகள் இருக்கின்றனவா என்று பார்த்தால், இருக்கும் ஆலைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். இந்த நாட்டின் பொருளாதார நிபுணரான டாக்டர் இராமசாமி முதலியார் அவர்கள், தமிழ்நாட்டு வியாபாரக் குழுவில் பேசும்போது குறிப்பிட்டார்கள். "இந்த நாட்டில் உள்ள தொழில்கள் மூலம் பொருள்கள் உற்பத்தியாவதற்கு வழி இருந்தாலும் கூட, உற்பத்தி செய்வதற்கு வசதி வாய்ப்பு இருந்தாலும்கூட, குறைவாக உற்பத்தி செய்கிறார்கள். காரணம், நாட்டிலே பற்றாக்குறை (ஸ்கேர்சிடி)யை ஏற்படுத்தி, இந்த நாட்டிலே விலைவாசியை உயர்த்துவதற்கு முயற்சிக்கிறார்கள்" என்று குற்றம் சாட்டினார். அதன் மீது இந்த அரசாங்கம் என்ன செய்தது? ஏராளமாக உற்பத்தி செய்ய முடியும். என்றாலும், குறைவாக உற்பத்தி செய்கிறார்கள், விலைவாசியை அதிகமாக ஏற்றுவதற்காக என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன பதில்? தொழில் துறையிலே அதிகமாக உற்பத்தி செய்யவில்லையென்றால், அதற்கு இந்தச் சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை?

அது மட்டுமல்ல, இன்னொரு குற்றச்சாட்டுக்கும் தொழில் அமைச்சர் அவர்கள் பதிலளித்தாக வேண்டும். கடந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்ட வேலைகள் ஏன் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டுவரப்படவில்லை? அவை பூர்த்தியாகிவிட்டன என்பதனால் கொண்டுவரப்படவில்லையா? அல்லது அவை கைவிடப்பட்டுவிட்டன என்பதனால் கொண்டுவரப்படவில்லையா? ஏன் கொண்டுவரப்படவில்லை என்பதற்குக் காரணம் கூறியாக வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே டீ-ரோலிங் மில்லுக்காக 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பேச்சு இல்லை. அது இன்னமும் நிறைவேற்றப்பட

வில்லையே. "அப்படி இல்லை, சண்முகம் அது இந்த இடத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது" என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். அப்படி இல்லாதபோது அது ஏன் கைவிடப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன்.

அதுபோல இன்னும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டனவே. அவற்றை ஏன் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவில்லை. அவை கைவிடப்பட்டுவிட்டனவா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். நீலகிரியில் பொன் கிடைக்கும் பகுதியைப் பற்றிய ஆராய்ச்சி, தென் மாவட்டத்தில் கிராபைட் சம்பந்தமான விரிவான ஆராய்ச்சி, இன்னும் ஜிப்சம், தாமிரப் படிவங்கள் கிடைக்கும் இடம் பற்றிய ஆராய்ச்சி, எல்லாம் துவங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்களே, அந்தத் திட்டங்கள் எல்லாம் என்ன ஆயிற்று? கைவிடப்பட்டு விட்டனவா? இன்று நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன், தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் குறைவாக இருக்கின்றன என்று அமைச்சர் சொல்வதற்கு வெட்கமடையவில்லையா? இங்குள்ள இயற்கை வளங்களை, கனி வளங்களை நாம் முழுவதும் பயன்படுத்திக் கொண்டோமா? என்ன என்ன கனிவளங்கள் நம் மாநிலத்தில் கிடைக்கின்றன என்பதையாவது விரிவான முறையில் கண்டு அறிந்து விட்டோமோ? இங்குள்ள கனிவளங்கள் பயன்படுத்தப்படவில்லை. பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டமில்லை. மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை. ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை. வருமானம் உயரவில்லை. இந்த நிலையில் நான்காவது திட்டம் வருகிறது. வருகிறபோதே மூவாயிரம் கோடி ரூபாய் புது வரியோடு வரப்போகிறது. இந்த பயங்கரமான நிலையை எண்ணிப் பார்க்கின்றபோது உள்ளபடியே எல்லோரும் அச்சப்பட வேண்டியதாக இருக்கிறது. உள்ளபடியே அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் பார்த்துப் பதில் சொல்ல வேண்டும். இந்த நான்காவது திட்டத்திற்கு மக்களுடைய ஆதரவு எப்படி இருக்கும்? முதல் மூன்று திட்டங்களினால் நாட்டு மக்களுக்குப் பலன் ஏற்படவில்லை. நான்காவது திட்டத்திற்கு நாட்டு மக்கள் எப்படி உங்களுக்கு ஆதரவு கொடுப்பார்கள்? முதல் மூன்று திட்டங்களினால் நாட்டு மக்களின் வாழ்வு ஒரு படி கூட உயரவில்லை. நான்காவது திட்டத்தைக் கொண்டு நாட்டு மக்களின் வாழ்வை எப்படி உயர்த்தப் போகிறீர்கள்? எனக்கும் புள்ளி விவரம் தேவை. அமைச்சர் அவர்கள் உள்ளபடியே யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களில் ஏராளமான தவறுகள். இதற்குச் சமாதானம் வேண்டும். மூன்றாவது திட்டத்திலே குறிப்பிடப்பட்ட ரீரோலிங் மில்லைப் பற்றி நான்காவது திட்டத்திலே குறிப்பிடவில்லை. இதற்குச் சமாதானம் வேண்டும். மூன்றாவது திட்டத்திலே குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிக் கூடங்களைப்பற்றி நான்காவது திட்டத்திலே குறிப்பிடப்படவில்லை. இதற்குச் சமாதானம் வேண்டும்.



கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேலம் இரும்பு ஆலை. நெய்வேலித் திட்டத்தோடு அதை மூன்றாவது திட்டத்தில் சேர்த்துப் போட்டிருந்தார்கள். இந்தப் புத்தகத்தில் பார்த்தால நெய்வேலித் திட்டம் இருக்கிறது. சேலத்து இரும்பு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. தமிழ் மக்களின் இதயக் குமுறலாக இருந்து வருகிற சேலத்து இரும்பு என்ன ஆகப்போகிறது என்றே தெரியவில்லை. சேலத்து இரும்பு தூங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டுமா? அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அன்றைக்கு அதைப் பற்றி கேள்வி கேட்டபோது "கட்டாயம் வரும், எதிர்க்கட்சிக்காரர்கள் பேசவேண்டாம்" என்று தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சேலத்து இரும்பைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேலத்து இரும்பைப் பற்றி இன்றைக்கு ஆளும் கட்சியினர் பேசுவதற்குக் காரணமே எதிர்க்கட்சிக்காரர்கள் அதைப்பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதனால் தான். இல்லாவிட்டால் அதைப் பற்றி அவர்களிடத்தில் பேச்சே இருக்காது. சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமும் என்ன ஆகுமோ என்று அச்சமாகத்தான் இருக்கிறது. கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தைப் பற்றிய பேச்சே இல்லை. ஆழ்கடலில் செல்லும் கப்பல்களுக்கு வேண்டிய டீசல் என்ஜின்கள் தயாரிப்பது பற்றி பத்திரிகையில் வந்து கொண்டிருந்தது, இங்கே அதைப்பற்றியும் ஒன்றும் காணோம். இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். திட்டம் என்ற அடிப்படையில் பயங்கரமான வரி விதிப்பே வேண்டாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் திரு. சண்முகம் அவர்கள் பேசும்போது 3,000 கோடி ரூபாய்க்கான புது வரி 40 கோடி மக்கள் தலையில் விழுகிறது. அப்படியானால் ஒவ்வொரு குடிமகன் தலையிலும் 750 கோடி ரூபாய் விழும் என்றார்கள். இந்தப் புள்ளிவிவரம் தவறு. இது எப்படி வரும்? இப்படித்தான் தவறாகக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள்.

**திரு. ப. உ. சண்முகம் :** நான் 750 கோடி என்று சொல்லவில்லை. 750 ரூபாய் என்று சொன்னேன். சர்க்கார் கொடுத்திருக்கக் கூடிய புத்தகத்தில் உள்ள தவறுகளை எடுத்துக் காட்டியதற்குத் தக்க சமாதானம் தரவேண்டுமே தவிர, நான் சொன்னதை நையாண்டி செய்து தட்டிக் கழிக்க அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யக் கூடாது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வேகமாகப் பேசும்போது தவறுதலாகச் சொல்லிவிட்டீர்கள். அவ்வளவு தான்.

**திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற்குறிப்பைப் பார்க்கிறபோது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள் என்ன, மேற்கொண்டு நாம் என்ன என்ன வகையில் செயல்பட வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் விளக்கமாகச் சொல்லப்

[திரு. வை. சங்கரன்] [6th August 1965

பட்டிருக்கிறது. மேல் இடத்தில் இருந்து மத்திய சர்க்காரோ, ப்ளானிங் கமிஷனோ நம்மை வற்புறுத்தவில்லை, இது நாமே நமக்காக வகுத்துக்கொண்ட திட்டம் என்பதை இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தாலேயே சொல்ல முடியும். இங்குள்ள சாத்தியக் கூறுகளை எல்லாம் ஆராய்ந்து, அதற்குத் தகுந்த வகையில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பது இதைப் படித்தால் தெரியும். இதில் பல்வேறு செக்டார்களாகப் பிரித்திருக்கிறார்கள். அக்ரிகல்சர் என்று எடுத்துக் கொண்டால் ஒரு லட்சத்து எண்பத்தேழாயிரம் ஏக்கரா முன்பு சாகுபடி செய்யப்பட்டது என்றால், இரண்டு லட்சத்து எண்பத்தோராயிரமாக அதை உயர்த்துவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சாகுபடிக்கான புதிய நிலப்பரப்புகள் இந்த மாநிலத்தில் அதிகம் இல்லையாதலால், இருக்கக் கூடிய நிலப்பரப்புகளிலேயே இன்டென்சிவ் கல்டிவேஷன் செய்ய, இருக்கக் கூடிய நிலங்களில் அதிக வேளாண்மை செய்ய அவற்றை விருப்படுத்தும் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஐயாயிரம் சொச்சம் ட்யூப் வெல்ஸ்கள் அமைப்பதற்கும் வழிவகை இருக்கிறது. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு செல்கள் இருக்கவேண்டும். மேலும் இதில் வாட்டர் டிவைனர்களையும் போடவேண்டும். இந்த செல்லில் வாட்டர் டிவைனர்களையும் சேர்த்தால் தான் எந்த இடத்தில், எங்கு நீர் ஊற்று இருக்கிறது என்பதைக் கண்டு குழாய்க் கிணறுகளை அமைக்க வசதி ஏற்படும். மாவட்ட ரீதியாக பூமிக்கடியில் இருக்கும் நீர் வளத்தைக் கண்டு பிடிக்க வாட்டர் டிவைனர் இருக்கவேண்டும். மேலும் எந்த எந்த மாவட்டத்தில், எந்த எந்தத் தாலுக்காவில் கிணறுகள் கூட இல்லாமல் திண்டாடுகிறார்கள் என்பதையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதை ஆராய்ந்து ஒரு பேஸ்டு ப்ரோக்கிராமாக எல்லா இடங்களிலும் கிணறுகளை ஏற்படுத்தத் திட்டம் வகுக்க வேண்டும். கம்பல் சரியாகக் கிணறுகள் எடுக்க வேண்டும் என்பதாகச் செய்ய வேண்டும். கிணறுகளுக்கு, தனிப்பட்டவர்களுக்கு லோன் கொடுப்பதைப் போல சில சில தாலுக்காக்களில் யாரும் கடன் வாங்கி கிணறு வெட்ட முன் வராவிட்டால் சர்க்காரே வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னும் பவர் ட்ரில்ல் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் நிறைய பற்றாக்குறை இருப்பதனால் நம் வேலை தடைபடுகிறது. இப்போது ஹைதராபாத்தில் உற்பத்தி செய்கிறார்கள். அதைப் போல நம் ராஜ்யத்திலும் உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். எப்படியாவது ஆயிரக்கணக்காக [illegible] வரவழைத்து சப்சிடி மூலம் நம் ராஜ்ய விவசாயிகளுக்கு நல்ல முறையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரஸ்ட் சம்பந்தமாகவும் மரங்களை விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கால்வாய்க் கரையோரங்களில் சீரான முறையில் மரங்கள் வளர்க்கப்படும் [illegible] வேண்டும். பெரிய பெரிய இரிகேஷன் ஸ்கீமில் [illegible]



6th August 1965] [திரு. வை. சங்கரன்]

வைத்தால் வாடர் எவாப்ரேஷனைக் கூட அவை தடுக்கும். இன்னும் அவின்யூ ட்ரீஸை எடுத்துக்கொண்டால்—தென்னை மரம் வளர்ப்பது என்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது—எனினும் பெரிய நகரங்களில்—ரோடு விஸ்தரிப்புக் காரணமாக பெரிய பெரிய மரங்கள் எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. அங்கே புதிதாக நல்ல மரங்களை வளர்க்கவும் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னும் கடன் வசதிகளைப் பெருக்க 20 கோடிக்கு மேல் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக இன்றையதினம் மார்வாரிகளிடம், சிந்திஸ்களிடம் கடன்பட்டுள்ளவர்களின் கடனைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டாவது அவர்களுடைய கஷ்டத்தைக் குறைக்க முன்வரவேண்டும். இதுபற்றி நன்கு ஆராய்ந்து மிக அதிக வட்டிக்குக் கடன் வாங்கி அவதிப்படுகிறவர்களுக்குக் குறைந்த வட்டிக்குப் கடன் கொடுக்க வகை செய்யவேண்டும். இன்றைக்குப் பல தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு உதவியாக கோவாப்ரேடிவ் சொசைடிகள் இருக்கின்றன. சலவைத் தொழிலாளர்களுக்கு உதவியாகவும் கோவாப்ரேடிவ் சொசைடிகள் இருக்கின்றன. ஆனால், அரசாங்கம் இதை ஆரம்பித்துவிட்டு, தொடர்ந்து இதில் கவனம் செலுத்தாமல் நின்று விட்டது. இதில் எனக்குச் சொந்த அனுபவம் உண்டு. ஏனென்றால் நான் இரண்டு ஆண்டுகள் இந்தச் சலவைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்திருக்கிறேன். கோவாப்ரேடிவ் சொஸைடிகளை ஆரம்பித்துவிட்ட அரசாங்கம் தொடர்ந்து உதவி செய்யாமல் நின்றுவிட்டது. இதனால் சலவைத் தொழிலாளர்களுக்கு வாஷிங் மெட்டிரியல்ஸ், காஸ்டிக் சோடா போன்றவைகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவைகளை அவர்கள் வெளி மார்க்கட்டுகளில் வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால், கோட்டா மூலம்தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த வாஷிங் மெட்டிரியல்ஸ் கிடைப்பதில் உள்ள கஷ்டங்களைப் பற்றிப் பல அதிகாரிகளிடம் பல தட்டவைகள் அணுகியாகிவிட்டது. இன்னும் அவர்களுடைய கஷ்டங்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் அவர்களுக்குத் தொடர்ந்து இந்த கோவாப்ரேடிவ் சொசைடிகள் மூலம் உதவி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரிகேஷன் சம்பந்தமாக பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு தேக்கடியிலே ஒரு டாம் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஒரு பெரிய அச்சம் இருந்து வருகிறது. ஏற்கனவே தேக்கடியிலே கட்டப்பட்டிருக்கின்ற அணையின் மேல் பகுதியில் ஏதாவது ஒரு டாம் கட்டி அதன்மூலம்—தண்ணீர் அதிகமாகக் கிடைக்கவேண்டுமென்ற ஆவலினால், 'ஓவர் எக்சுபரன்ஸ்' காரணமாக— அங்கே வருகின்ற தண்ணீரை எடுத்துக்கொண்டு விடுவார்களோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஏற்கனவே ஓனர்ஸ் ஆக உள்ளவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இதனால்

[திரு. வை. சங்கரன்] [6th August 1965

ஏற்படக்கூடாது. ஆகவே, எந்த வகையிலும் அங்கே வருகின்ற தண்ணீரைத திருப்பிவிடக்கூடிய நிலைமை ஏற்படக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பவர் ஃபார் இண்டஸ்ட்ரீஸ் 2,000 மெகோ வாட்டாக அதிகப்படுத்தப்போவதாகத் தெரிகிறது. அந்த வகையிலே கல்பாக்கத்தில் ஆரம்பமாக இருக்கிற திட்டத்தில், அந்தத் திட்டத்தில் கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பிரித்துக்கொள்ள வேண்டுமென்று வெளி ராஜ்யங்களின் மந்திரிகள் கூறுகின்றார்கள். அப்படிப் பிரித்துக்கொடுக்காமல் நமக்கே அங்கே கிடைக்கின்ற பவரையெல்லாம் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டேம்களிலிருந்து எடுக்கப்படுவது சீசனல் பவர்ஸ் தான். சீசனல் பவர் கனெக்‌ஷன் தான் கொடுக்கவேண்டும். ஏனென்றால் அப்பொழுதுதான் அதை விவசாயத்திற்கும் பயன்படுத்தமுடியும். ஆகவே, புதிதாகக் கனெக்‌ஷன் கொடுக்கும்பொழுது சீசனல் பவர் கனெக்‌ஷன்தான் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆர்ட் சில்கை எடுத்துக்கொண்டால், இந்தத் திட்டத்திலே அதற்காக ஒன்றையும் காணோம். மதுரை போன்ற இடங்களிலே செயற்கைப்பட்டுத் தொழிலானது மிகவும் விருத்தியடைந்து இருக்கிறது. ஆனால் அதற்கு எந்த உதவியும் கொடுக்கப்படாத அளவிலே இருப்பதால் இன்றைக்கு அந்தத தொழில் நசித்துப்போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழில் இன்னும் நல்ல அபிவிருத்தியை அடைய அரசாங்கம் உதவி செய்வதோடு, அரசாங்கமே மேலும் சில பாக்டரிகளை ஓப்பன் பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிழக்கடற்கரையோரமாக ஒரு பெரிய ரோடு போடுவதாகத் திட்டம் இருக்கிறது. ஆனால், பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தால் இது மத்திய சர்க்காரால் கைவிடப்பட்டு விடுமோ என்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதைக் கைவிடாத வகையிலே கிழக்கடற்கரையோரமாக ஒரு பெரிய ரோடு போடுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த ரோட்டில் அந்தந்த மாவட்டங்களிலிருந்து வருகின்ற பல ரோடுகள் சந்திக்கின்றன. ஆகவே, இது மிகவும் முக்கியமான ரோடு ஆக இருக்குமாதலால் இதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரயில்வே சம்பந்தமாக, எடுத்துக்கொண்டால், தூத்துக்குடியிலிருந்து திருச்சிவரை மதுரை வழியாக ஒரு பிராட்கேஜ் ரயில் பாதை போடுவதோடு, சேலம்-மதுரை பிராட்-கேஜ் ரயில் பாதையையும் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லெவல் கிராசிங் போடுவது என்பது மிகவும் முக்கியமானது ஆகும். குறிப்பாக, மதுரையிலே லெவல் கிராசிங் போதுமான அளவு இல்லாத காரணத்தினால், முக்கியமான வேலை



6th August 1965] [திரு. வை. சங்கரன்]

களுக்குச் செல்பவர்கள் எல்லாம் ½ மணி நேரம், ¼ மணி நேரம் தாமதமாகச் செல்லவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் முக்கியமான காரியங்களுக்குச் செல்லமுடியாமல் பல வேலைகள் கெட்டுவிடுகின்றன. இது பொது மக்களுக்கு மட்டுமல்லாமல், மந்திரிகளுக்கும் பெரிய கஷ்டமாக—மதுரையைப் பொறுத்த அளவிலே—இருக்கின்ற காரணத்தால் இதைக் கவனித்து உடனடியாகப் போதுமான அளவுக்கு லெவல் கிராசிங்ஸ் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடு கட்டிக் கொடுப்பது சம்பந்தமாக ஏற்கெனவே என்.ஜி.ஓ.க்களுக்கெல்லாம் ரென்டல் ஹவுசிங் ஸ்கீம் கொடுத்து இருக்கிறோம். ஆனால் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த மாதிரி ரென்டல் ஹவுசிங் ஸ்கீம் இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கும் இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது டவுன்களில் எல்லாம் பார்த்தால் முக்கியமான இடங்களை கோடவுன்கள் வைப்பதற்கும், போர்டிங் அன்ட் லாட்ஜிங் கட்டுவதற்கும் எடுத்துக்கொள்வதால் சாதாரணக் குடியிருப்பு இடங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, இந்த பள்ளி ஆசிரியர்களுக்கும், கீழ்த்தாக் குமாஸ்தாக்களாக இருப்பவர்களுக்கும் இந்த ரென்டல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாகக் குடியிருப்பு வசதிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கட்டிடங்கள் சம்பந்தமாகச் சொல்லும்பொழுது, இன்றைக்கு அரசாங்க ஆபீஸ்கள், அதாவது காமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸஸ், கிரிமினல் கோர்ட்ஸ், சிவில் கோர்ட்ஸ் இவைகள் எல்லாம் கட்டிட வசதியில்லாத காரணத்தினால் மாதம் 1,000 ரூபாய் என்ற அளவிலே வாடகை கொடுத்துக்கொண்டு இருக்க வேண்டியிருக்கிறது. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைப்பற்றி ஏதாவது இருக்குமென்று நினைத்தேன். ஒன்றையும் காணோம். ஆகவே, டவுன்களிலே இருக்கக்கூடிய அரசாங்க ஆபீஸ்களுக்குக் கட்டிட வசதி செய்துகொடுக்க வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹெவி இண்டஸ்ட்ரீஸைப் பொறுத்த வரையில் மதுரையை எடுத்துக் கொண்டால் அங்கே ஹெவி இண்டஸ்ட்ரீஸ் எதுவும் கிடையாது. இந்த ஸ்பின்னிங் மில்கள் தான் இருக்கின்றன. ஆகவே, மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில்—பப்ளிக் செக்டார் பின்தங்கிய நிலைமையில் இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால்—அரசாங்கமே ஹெவி இண்டஸ்ட்ரீஸ் என்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெய்வேலி ஒயிட் கிளே தேவைக்கு வேண்டும்பொழுது கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. இவைகளை பாரி அண்ட் கோ. போன்ற கம்பெனிகள் விலைகொடுத்து மொத்தமாக வாங்கிக்கொண்டு போய்விடுவதால் வெளியிலே

[திரு. வை. சங்கரன்] [6th August 1965

கிடைப்பதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதை 30 ரூபாய், அல்லது 40 ரூபாய் என்ற அளவிலே அரசாங்கமே விலைக்கு எடுத்துக்கொண்டு தேவைக்குத் தக்கபடி விநியோகம் செய்யலாம். ஆகவே, இந்த விஷயத்தையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நூல் விநியோகம் சரியாக இல்லாத காரணத்தால் நூல் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது, கால தாமதம் ஆகிறது. ஆகவே கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலம் இந்த நூல் விநியோகத்தைச் செய்தால் இந்த நிலைமை ஏற்படாது என்று நினைக்கிறேன். கோவாப்ரேடிவ் சொஸைடிகள் இப்படிப்பட்ட பொருள்களை விநியோகம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டால் நூல் விநியோகம் நல்ல முறையில் இருக்கும். (மணியடிக்கப்பட்டது.) இன்னும் 'டு மினிட்ஸ்' எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வாட்டர் சப்ளை சம்பந்தமாகத் தஞ்சாவூரை எடுத்துக்கொண்டால் அங்கே ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. இருந்தாலும் அங்கேகூட தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. சமீபத்தில் நான் தஞ்சாவூருக்குப் போயிருந்தபொழுது பார்த்தேன். அங்கே பஸ் ஸ்டாண்டில் கை கால் கழுவுவதற்குத் தண்ணீர் கிடைக்காத நிலைமை இருந்துவருகிறது. ஆகவே, வாட்டர் சப்ளை நல்ல முறையில் எல்லா இடங்களிலும் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன இலாகாவைப்பற்றிச் சொல்லும் பொழுது மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்காததால் அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு 10 சதவீதம் அல்லது 20 சதவீதம் என்று சீட்களை ஒதுக்கிவிடவேண்டும். ஏனென்றால், சர். சி. வி. இராமனைப்போன்று, ராமானுஜத்தைப் போன்று வரக்கூடியவர்கள் அவர்களிலே இருக்கலாம். ஆகவே, அவர்களுக்கு வாய்ப்புத்தரக்கூடிய அளவிலே சீட்களை ஒதுக்கவேண்டும். மேலும் இந்த இன்கம் சர்டிபிகேட் பொறுத்தவரையில் 1,500 ரூபாய் வருமானத்திற்கு மேல் உள்ளவர்களுக்கு உதவி கிடையாது என்று இருப்பதை இப்பொழுது நாம் 2,000 ரூபாய் அல்லது 2,500 ரூபாய் என்று உயர்த்தலாம். ஏனென்றால் இப்பொழுது ஒரு தொழிற்சாலையில்கூட சாதாரணத் தொழிலாளிக்கு மாதம் 125 ரூபாய், 150 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஆகவே இந்த இன்கம் லிமிட்டை உயர்த்தவேண்டும். அத்துடன் ரயில்வேயில் இத்தனை சீட் ரிசர்வ்டு டிக்கனை சீட் காலி என்று போர்டு போடுவதைப்போல இவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சீட்களை ஒதுக்கி அவர்களுக்கு அட்மிஷன் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பப்ளிசிடி சம்பந்தமாக ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ரூரல் பகுதிகளில்தான் அதிகமாக இந்த நாடகங்களைக் காட்டவேண்டுமென்பதாக முடிவு செய்யப்



6th August 1965] [திரு. வை. சங்கரன்]

பட்டிருக்கிறது. அது போதாது. முக்கியமாக நகரப் பகுதிகளிலும் இந்த நாடகங்களை நடத்திக் காட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். இதில் லாபத்தையோ அல்லது நஷ்டத்தையோ அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடாது. அதே போன்று சுற்றுலா மாளிகைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எ. சுவாமிதாஸ்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பை ஆதாரமாக வைத்து ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். முதல் மூன்று திட்டங்களைவிட நான்காவது திட்டத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கி இருப்பதை வரவேற்கிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே எங்களுடைய மாவட்டத்திலே செய்ய வேண்டிய சில வேலைத் திட்டங்கள், தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை இந்த மன்றத்திலே கூற முற்படுகிறேன். மிக முக்கியமான ஒன்று, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாக எங்களுடைய மாவட்டத்திற்கு ரயில் பாதையைக் கொண்டுவர வேண்டும். இது மாநில அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டியதல்ல என்றாலும் கூட, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இந்த முக்கியமான வேலையை மத்திய அரசு செய்து முடிக்கும் என்று நம்புகிறேன். மாநில அரசு தெரிவிக்கிற கருத்தைப் பொறுத்துத்தான் இந்தத் திட்டம் நிறைவேறுவது இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை பூர்வாங்க சர்வே வேலைகளைச் செய்து முடித்து விட்டதாக அறிகிறேன். ஆகவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அந்த வேலையை மேற்கொள்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று மன்றாடிக கேட்டுக் கொள்கிறேன். 11-00 a.m.

எங்கள் மாவட்டத்தில் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே போகிறது. சென்னை நகரத்திற்கு அடுத்தபடியாக நம்முடைய தமிழ் மாநிலத்தில் அதிகமாகப் படித்தவர்கள் எண்ணிக்கை கூடிக் கொண்டிருக்கும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டந்தான். ஆகையால் அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே போகிறது. அதைக் குறைக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பல தொழிற்சாலைகளை அங்கு ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியில் மணல் எடுக்கும் கம்பெனி இருக்கிறது. அந்த ஆலையில் மணலைச் சுத்தம் செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அந்த மணலைப் பயன்படுத்தி இங்கேயே ஒரு தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் முன் வரவேண்டும். மணவாளக்குறிச்சி மணற் கம்பெனியிலுள்ள இல்மனைட், மோனசைட், சிர்கன் போன்றவற்றைக் கொண்டு என்ன தொழில்களை இந்த நாட்டில் நிறுவ முடியும் என்று ஆராய்ச்சி செய்து கன்னியாகுமரியில் ஒரு தொழிற்சாலை

யை ஏற்படுத்த முன் வரவேண்டும். கன்னியாகுமரியில் இப்போது ரப்பர் பயிர் மிகுதியாகப் பயிரிடப்பட்டு வருகிறது. அதை பயன்படுத்தி அங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினால் அங்குள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. அங்குள்ள ரப்பரை சென்னை நகருக்குக் கொண்டு வந்து டயர் செய்வதற்குப் பதிலாக் கன்னியாகுமரியிலேயே ஒரு தொழிற்சாலையை அமைத்து ரப்பர் கொண்டு பல பொருட்களைச் செய்யலாம்.

கன்னியாகுமரியில் சிறு சிறு சிமெண்ட் தொழிற்சாலைகளை நிறுவவும் வாய்ப்பு இருக்கிறது. தோவாளை தாலுக்காவில் லாயம் என்ற பகுதியிலும், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் கொட்டாரம் பகுதியிலும் சுண்ணும்புக் கற்கள் கிடைக்கின்றன. கடலோரப் பகுதிகளில் சிப்பி, சங்கு போன்ற மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. ஆகவே, அவற்றைக் கொண்டு அங்கு சிறு சிறு சிமெண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத்திலேயே இரண்டாவதாக மீன் அதிகமாகக் கிடைக்கிற கடலோரப் பகுதி கன்னியாகுமரி கடலோரப் பகுதிதான். ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு வசதி செய்து கொடுத்தால் மிகுதியாக மீன்கள் கிடைக்கும். அதனால் உணவுப் பற்றாக்குறையையும் போக்க முடியும். பெரிய லாஞ்சஸ் செய்து அதன் மூலம் கன்னியாகுமரியில் மீன் பிடிப்புக்கு வழி செய்ய வேண்டும். அந்த மீன்களைப் பதனிட்டு டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் வாய்ப்பு இருக்கிறது. இதைப் பற்றி அரசு ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் கேரளப் பகுதியோடு இணைந்திருந்த காலத்தில் கேரளப் பகுதிக்கு மிகுதியான நெல்லை அனுப்பிக் கொண்டிருந்தோம். அவ்வளவு வசதி வாய்ந்த, நெல் பயிருக்கு ஏற்ற மாவட்டமான அந்தக் கன்யனிரகுமரி மாவட்டத்தைத் தீவிர சாகுபடிக்கு ஏற்ற பகுதியாக மாற்ற வேண்டும். அப்படி மாற்ற அடிப்படையாக ஒரு விவசாயக் கல்லூரியைக் கூட அங்கு ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அந்த மாவட்டத்தின் நடுப் பகுதியாக விளங்குகின்ற தக்கலைக்கு அருகில் புலியூர் குறிச்சியில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு விவசாயக் கல்லூரியை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற்படுத்த முற்பட வேண்டும்.

நான்காவது திட்டம் பற்றிய குறிப்புப் புத்தகத்தில் பல இடங்களில் பெண்களுக்கான தொழில் கல்லூரியை அமைக்க இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரியில் பெண்களுக்கென்று ஒரு தொழிற் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். அங்கிருக்கிற பாலிடெக்னிக்கை எஞ்சினியரிங் கல்லூரியாக இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





சிற்றாறு, பட்டணங்கால, கோதையாறு மின்சக்தி நிலையங்களை மூன்றாவது திட்ட காலத்தில் ஆரம்பித்தார்கள். நான்காவது திட்ட காலத்தில் அந்த வேலை முடியும் என்று காணப்படுகின்றது. அதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குளச்சலைச் சிறு முறைமுகமாக ஆக்கத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்ட வேலையும் மூன்றாவது திட்ட காலத்திலேயே தொடங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதையும் முடித்துக் கொடுத்தால் அந்த வட்டார மக்களுக்குப் பயன் கிடைப்பதோடு, குறிப்பாகத் தென் தமிழகத்திற்கும் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரியில் சுற்றுலா மாளிகையை அமைக்க நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். கோதையாறு மின்சக்தி நிலையத்தின் அருகில் முத்துக்குளி வயல் என்ற சுகவாசஸ்தலம் இருக்கிறது. அங்கு இந்த சுற்றுலா மாளிகையை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மழை காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆறுகளின் நீர் பழாகிக் கொண்டிருக்கிறது. பழைய ஆற்றில் பொய்கையாறு திட்டத்தை எடுத்து சிறு அணை கட்டினால் கொச்சி அரசாங்க ரிப்போர்ட்டில் காணப்படுகிறது. என்னுடைய தொகுதியில் வள்ளியாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றிலும் மழை காலத்தில் ஏராளமான நீர் வீணாகக் கடலில் போய் விழுகிறது. மழை இல்லாத காலத்தில் கூட அதில் பாயும் ஊற்று நீர் கடலில் போய் விழும் நிலைமை இருக்கிறது. அதிலே இரணியல் ஊருக்கருகில் ஒரு சிறு அணை கட்டி லிப்ட் இரிகேஷன் செய்ய வாய்ப்பு இருக்கிறது. அந்த ஒரு திட்டத்தினால் 7,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்க முடியும் என்று பலர் கூறுகிறார்கள். அந்தத் திட்டத்தையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. பொன்னுசாமி : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்று இந்தச் சபை முன்னிலையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நான்காவது திட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். இந்த நான்காவது திட்ட காலத்திலே 815 கோடி ரூபாய் செலவிடுவதாகக் காணப்படுகிறது. ஏற்கனவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 299 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு சர்க்கார் அதை 340 கோடி அளவுக்கு உயர்த்தி செலவு செய்யப்பட்டு குறிப்பான பலன் அடையும் நிலையில் பல திட்டங்கள் இருக்கின்றன என்பதை காணும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே போடப்பட்ட திட்டங்களின் பயனாக 1,140 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. நான்காவது திட்ட காலத்தில் அதைவிட அதிகமாக 1,450 மெகா வாட் மின்சார உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்போது

இந்த நாட்டிலே தொழில் வளர்ச்சியும், விவசாய வளர்ச்சியும் எதிர்பார்க்கிறபடி நல்ல முறையில் நடக்கும் என்பதிலே ஐயமில்லை. நான்காவது திட்டம் முடிந்த பிறகும் கூட தேவையைப் பொறுத்து 500 மெகா வாட் மின்சார உற்பத்தி குறைவாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதை ஒருவாறு சரிக்கட்டும் வகையில் அனல் மின்சார நிலையங்களை ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கான வழி வகைகளை முயற்சிக்கும்போது அதுவும் சரிப்பட்டு விடும் என்று நம்புகிறேன். இரண்டாயிரம் மக்கள் தொகை உள்ள எல்லாக் கிராமங்களும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார வசதி பெறும் என்பதை அறியும்போது தமிழக மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதிலே கொஞ்சமும் ஐயமில்லை.

விவசாயத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன். இப்போது உள்ள முறையில் நாம் விவசாயிகளுக்கு நல்ல உரம் கொடுக்கிறோம். தண்ணீர் வசதி செய்து கொடுக்கிறோம்; விவசாயப் பயிர்களுக்கு வியாதிகள் வரும்போது தெளிக்க மருந்து கொடுக்கிறோம். இவையெல்லாம் செய்து கொடுத்துக் கொண்டிருந்தாலும் கூட இன்னும் விசேஷமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இவையெல்லாம் காலத்தில் கொடுக்கப்படாததன் காரணமாக விவசாயப் பெருங்குடிமக்கள் எதிர்பார்த்தபடி நல்ல முறையில் விவசாய அபிவிருத்தியைச் செய்ய முடியவில்லை என்ற குற்றச் சாட்டு இந்தச் சபையிலே பல முறை எழுப்பப்பட்டிருப்பதை நாம் நன்றாக அறிவோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் எதனால் இந்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்து, விவசாய அதிகாரிகள் இவற்றை காலாகாலத்தில் கொடுப்பதற்கான வழிகளைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல வகைகளில் பாசன வசதிகளைப் பெருக்கிக்கொள்வதின் மூலம் விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வரலாம். இன்னும் நமக்குத் தண்ணீர் தேவை என்று தான் இப்போதும் தோன்றுகிறது. ஊற்று நீர் மூலம் எதிர்காலத்தில் தண்ணீரை மேலே கொண்டுவரலாம் என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் கூட, எந்த இடத்தை நமது நாட்டில் எடுத்துக் கொண்டாலும், எல்லா இடத்திலும் ஒரு முறையாவது மழைபெய்தேதான் தீரும். இவ்விதமான இடங்களில் புஞ்சை நிலங்களில் வேளாண்மை செய்வதற்கு, மழை பெய்யும் போது, வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே தான் தமிழக சர்க்கார் இப்போது புதிதாக 7½ லட்சத்திற்கு சாகுபடி செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப் புதிதாக விவசாயம் செய்யும்போது, புஞ்சை நிலங்களில் கண்டிப்பாக புல்டோஸர்களை வைத்துத் தரையை நன்றாகப் பக்குவப்படுத்த வேண்டும். எவ்வளவு தண்ணீர் வசதி செய்து கொடுத்தாலும் சரி, எவ்வளவு உரம் போட்டாலும் சரி, தரை சரியாக இருக்கவேண்டும். தரை சரியாக இருக்க வேண்டுமென்றால், பூமியை நன்றாகக் கிளரி பண்படுத்துவதற்கு புல்டோஸர்களை உபயோகிக்கவேண்டும். இப்போது நாம்





20 புல்டோஸர்களைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நல்ல முறையில் உபயோகப்படுத்துவதற்குரிய முறையில், எங்கெங்கு புஞ்சை நிலங்கள் இருக்கிறதோ, எங்கெல்லாம் இதற்கான வசதியிருக்கிறதோ அங்கெல்லாம் சர்க்காரே தரையைப் பண்படுத்திக்கொடுத்தால், ஏழை விவசாயிகளுக்கு அதில் புஞ்சை விவசாயம் செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும், அதே போன்று பண வசதியுள்ளவர்களுக்குக் கொடுத்தால், அவர்களுக்கும் எந்த முறையில் விவசாயம் செய்யவேண்டுமோ அந்த முறையில் விவசாயம் செய்து கொள்வதற்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது கண்டிஷன் போட்டுக்கொடுத்தால், அவர்களும் அதுபோன்று விவசாயம் செய்து, பொதுவாக நாட்டில் விவசாயம் முன்னேறும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், விவசாயிகள் மனச்சோர்வு அடையாமல் இருக்கின்ற வகையில் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தூத்துக்குடி பகுதியை பொறுத்தமட்டில், பல இடங்களில் பார்க்கும்போது, விவசாயிகளுக்குச் சில கிராமங்கள் இருக்கின்றன. அதாவது ஒரு காலத்தில் புஞ்சை நிலமாக இருந்தது, இப்போது பல ஆண்டுகளாக நஞ்சை நிலமாக உபயோகித்து வந்தும் கூட, இன்னும் அதை நஞ்சை நிலம் என்று ரிக்கார்ட்-கள் மாற்றப்படாமல் இருந்து வருவதோடு மட்டுமல்ல, இப்போதும் அந்த நிலத்திற்குத் தண்டத் தீர்வை போடுகின்றார்கள். இதன் காரணமாக விவசாயிகள் மிகவும் மனச்சோர்வு பெற்று இருக்கிறார்கள். அதோடு அவர்களுக்கு சேர்ந்து இருக்கின்ற பட்டாக்களைப் பிரித்து தனியாக பட்டா வழங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டும் அதற்கு இன்னும் காலதாமதம் ஆகிறது. இந்தச் சிரமங்களை எல்லாம் நீக்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டால், விவசாயிகளுக்கு நல்ல உற்சாகம் ஏற்படும். ஆகவே இது போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசன வசதியைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், மழை காலத்தில் கிராமங்களில் தண்ணீர் வீணாகப் (வேஸ்டேஜ்) போய்க் கொண்டிருக்கிறது. நான் இதைப் பல கிராமங்களில் சென்றிருக்கும்போது கிராம மக்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களிலும் இவ்வாறு வீணாகத் தண்ணீர் போகிறது. இவைகளை எல்லாம் சிறிய அளவில் தேக்கிக் கொடுத்தால், புஞ்சை நிலங்களில் நல்லமுறையில் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும். இது போன்ற காரியங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையாவது மாவட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒரு சில கிராமங்களுக்காவது சென்று நாம் கொடுத்திருக்கும் கருவிகளைச் சரியாக உபயோகிக்கிறார்களா என்பதையும் அதனால் எப்படிப் பயன் கிடைக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். அதோடு முன்னால் எப்படி பலன் இருந்தது, இப்போது எந்த ரேஷியோ அளவுக்கு உயர்ந்திருக்கிறது, உயரவில்லையானால் அதற்கு என்ன செய்யவேண்டும்,

[திரு. சி. பொன்னுசாமி] [6th August 1965

அதற்கு என்னென்ன திருத்த முறைகளைக் கையாளவேண்டும் என்பதை ஆலோசித்து, அதற்கான சில முறைகளைச் சொல்ல வேண்டும். முக்கியமாக ஏதாவது வேல்டேஜ் இருந்தால் இதை தடுப்பது என்பதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மீன் வளத்தைப்பற்றிப் பேசும்போது, நம்முடைய தமிழகம் 620 மைல் நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட நாடாக இருக்கிறது. இந்தத் துறையில் நான்காவது திட்ட காலத்தில் 10 கோடி 21 லட்சம் செலவழிக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நான் இதை வரவேற்றாலும் கூட, இன்றைய தினம் நாட்டில் 75 சதவிகிதத்திற்கும் மேல் அசைவ உணவு சாப்பிடுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஏனைய தேசங்களை எடுத்துக் கொண்டால், ஜப்பான் போன்ற சிறிய நாடு சிறிய நாடாக இருந்தாலும் கூட, இன்றைக்கு மீன்பிடி தொழில் துறையில் அது முதலில் இருக்கின்றது. அதற்குக் காரணம் கடலில் தூர இடங்களுக்குச் சென்று பல இயந்திரங்களின் உதவியினால் மீன் பிடிக்கிறார்கள். நாமும் அது போன்ற நவீன இயந்திரங்களை உபயோகித்து முன்னுக்கு வரவேண்டும். இப்போது நாம் பல இயந்திரப் படகுகளைக் கொடுக்கிறோம். நைலான் வலைகள் கொடுக்கிறோம். பெடரேஷன் மூலமாகப் பல வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தனி மனிதன் வருடம் ஒன்றுக்கு 28 பவுண்ட்தான் மீன் உணவாக உபயோகிக்க கிடைக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது வாரம் ஒன்றுக்கு 1½ பவுண்ட்தான் ஆகிறது. இதை அதிகம் என்று சொல்லிவிட முடியாது. மற்ற உணவுப் பொருட்களைப்போன்று இதையும் ஒரு முக்கியமான உணவாகக் கருதி, இதையும் அதிகப் படுத்துவதற்கு மேற்கொண்டு ஏதாவது பரிசிலனை செய்து மேலும் ஐந்து கோடி ரூபாயை இதற்காக ஒதுக்குவது வரவேற்கத்தக்க தாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆழ்கடலில் போய் மீன் பிடிப்பது, மீன்களைப் பதப்படுத்தி வைப்பது போன்ற திட்டங்களை எல்லாம் நாம் போட்டிருக்கிறோம். இதில் நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது, மீன் பிடிக்கப்போகின்ற தொழிலாளர்களுக்குச் சில சிரமங்கள் இருக்கின்றன. அதாவது மீனைப்போன்று இருக்கக்கூடிய 'ஓங்கோல்' என்ற மீன் இன்னும் நம் கடற்கரையோரமாகவும் காணப்படுகிறது. இது சில சமயங்களில் மீன் பிடிக்கும் போது, வலையையும் வெட்டி, அதிலுள்ள மீன்களையும் தின்று விட்டுப் போய்விடுகிறது. இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகிறது என்று அடிக்கடி அவர்கள் சொல்லிவருகிறார்கள். மாநில சர்க்காருக்கும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். இது மிக மிக முக்கியமானது, இதைப்பற்றி ஆலோசனை செய்து நாம் தயார் செய்து கொடுக்கின்ற விசைப் படகில் இதை அழிப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டும். இதற்காக முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



6th August 1965] [திரு. சி. பொன்னுசாமி]

கடைசியாக, நான் சொல்ல விரும்புவது, கிராம மக்களுடைய சராசரி வருமானத்தை எடுத்துக்கொண்டால், இந்தியாவில், கிராம மக்களுடைய சராசரி வருமானம் நாள் ஒன்றுக்கு 68 ந.பை. என்றும் ஒரு சிலருக்கு 27 ந.பை. என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு விலைவாசிகள் எல்லாம் அதிகமாக இருக்கின்ற இந்த நாட்களில் கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு 68 ந.பை. என்றும் அதிலும் குறைந்தது 27 ந.பை. என்றும் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த வருமானம் எந்த அளவுக்கு உயரும் என்பதற்கான ரேஷியோ விவரம் இதில் காணவில்லை. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நாம் 815 கோடி ரூபாய் செலவு செய்யும் போது கிராமத்திலுள்ள மக்களுக்கு எந்த அளவுக்கு வாழ்க்கைத் தரம் உயரும் என்று தெரியவில்லை. குறிப்பாக இந்தியாவில் ஏறக் குறைய 80 சத விகிதம் கிராம மக்களாக இருப்பதால், அவர்களுடைய வருமானம் உயர்ந்தால்தான் நநம் ஜனநாயக சமதர்மத்தை ஏற்படுத்த முடியும். நாம் இவ்வளவு பணம் செலவு செய்தும், திட்டத்தினால் மக்களின் வாங்கும் சக்தி எந்த அளவுக்கு உயரும் என்கின்ற டார்ஜெட்-டை கணக்கிட்டு கொடுத்தால்தான் திட்டத்தின் பலனை எல்லோரும் உணரமுடியும். என்பது என் போன்றவர்களின் கருத்து. அவ்வாறு செய்யவேண்டும் என்பது என் வேண்டுகோள்: இப்போது 68 ந.பை. வருமானம் என்றிருப்பது தினசரி வருமானம் 2½ ரூபாய் என்று வந்தால் தான் இந்த நாட்டில் கிராம மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சரியாக நடத்த முடியும் என்பது என் போன்றவர்களின் அபிப்பிராயம். இவற்றையெல்லாம் அரசாங்கம். சீர் தூக்கிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராம மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு விவசாயத் தொழிலில் மூன்று நான்கு மாதங்கள் தான் ஒவ்வொரு ஆண்டிலும் வேலை இருந்து வருகிறது. மற்ற நேரங்களில் எல்லாம் அவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு எந்த விதமான வேலையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு 'மேன் பவர்' (மனித சக்தி) கிராமங்கள் சம்பந்தப்பட்டவரை பெருமளவு வீணாக்கப்படுகிறது. இவர்களுடைய சக்தியை (எனர்ஜியை) உபயோகப்படுத்திக்கொள்வதற்காக பல குடிசைத் தொழில்களைக் கிராமங்களில் கட்டாயமாகக் கொண்டு வந்தால் கூட நலமாக இருக்கும். அப்படிச் செய்தால் நேஷனல் இன்கம் (தேசீய வருமானம்) அதிகமாவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு முக்கியமாக கிராம மக்கள் அனாவசியமாக லக்சுவரிப் பொருள்களை உபயோகித்து வருவதை தடுக்க பிரசாரம் செய்து வலியுறுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும். அதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைச்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [6th August 1965

கூறுவதற்கு முன்பாக நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், எனக்கு முன்னால் பேசிய சுதந்திராக் கட்சியினுடைய அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்களுடைய கருத்தினை நாங்கள் ஏற்க முடியாத நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே திட்டத்தை எதிர்த்தது கிடையாது, எதிர்க்கப் போவதும் கிடையாது. எங்களுக்குள்ளே பல ஒற்றுமைகள் இருந்தாலும் இந்த ஒரு விஷயத்திலேயாகிலும் சுதந்திராக் கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பெருத்த கருத்து வேறுபாடு உடையவர்களாக இருக்கிறோம் என்பதனைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திட்டத்தை ஒத்திப் போடுவதை நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம். திட்டத்தைக் குறைப்பதையும் நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம். எவ்வளவு பெரிய திட்டமாக இருக்கவேண்டுமோ அவ்வளவு பெரிய திட்டமாக நம் அமைச்சர்கள் டில்லி மாநகரத்திற்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டுவருவார்களானால் அதைப் பாராட்டும் முகத்தான் இங்கே வார்த்தைகளைக் கூறுவோம்.

நம் தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள், 'நாம் நகரும் யந்திர நிலையில் இருக்கிறோம், டேக் ஆஃப் ஸ்டேஜ் வரப் போகிறது' என்று சொல்லுவார்கள். டேக்-ஆப் ஸ்டேஜ் வருகிற காலத்திற்குள் ஏழை மக்களுடைய, நடுத்தர மக்களுடைய உயிர் டேக்-ஆப் ஸ்டேஜுக்குப் போய்விடுமோ என்ற நிலை இருக்கிறது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 80 கோடி ரூபாய் செலவிட்டார்கள்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 187 கோடி செலவிட்டார்கள்; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 340 கோடி ரூபாய் செலவிடக் கூடிய நிலையில் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டுச் செலவு செய்தும், உணவு உற்பத்தியைப் பொருத்த வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 சத விகிதம் உற்பத்தி என்று சொன்னார்கள். இரண்டாவது திட்டத்திலே 20 சதவீதம் உற்பத்தி என்று சொன்னார்கள். மூன்றாவது திட்டத்திலேயும் அதே வீதத்தில் உற்பத்தி பெருகும் என்று சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் மக்கள் பெருக்கத்தைப் பொறுத்த வரையிலும் நம் மாநிலத்தில் 6 சதவீதத்தை விட அதிகமாக மக்கள் பெருக்கம் இல்லை. உணவு உற்பத்தி 15 சதவீதம், 20 சதவீதம், 25 சதவீதம் என்ற அளவில் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் 1950-லே இருந்த நிலையில் படி அரிசி 12 அணாவிற்கு விற்றது இன்றைக்கு 1¼ ரூபாய்க்கு விற்கிறது. அதுவும் ஆளுக்கு எட்டவுள்ள. 1950-லே பருப்பு ஒரு படி 12 அணாவிற்கு விற்றது இன்றைக்கு 2¾ ரூபாய்க்கு, 3 ரூபாய்க்குக் கூடக் கிடைக்கவில்லை. நம்முடைய தொழில் அமைச்சருக்குச் சொல்லுவேன், டேக்-ஆஃப் ஸ்டேஜுக்கு வருவதற்கு முன் ஏழை மக்களுடைய உயிர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் முறையில் திட்டத்தைப் போடுங்கள் என்று சொல்லுவேனே தவிர, திட்டத்தைக் குறை கூறவில்லை.



6th August 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இன்றைக்குக் கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் தயாரித்துக் கொடுத்திருக்கிற கணக்குகளை எந்த அளவு மத்திய அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமோ, இவர்கள் கொடுத்திருக்கிற மதிப்பீட்டினை எந்த அளவுக்கு மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமோ என்பது செப்டெம்பர் முடிவிலே தெரியும் என்று கருதுகிறேன். தனிப்பட்ட முதலாளிகள் இன்கம்டாக்ஸ் கணக்குக் கொடுப்பதைப் போல, விற்பனை வரி அதிகாரிகளுக்குத் தனிப்பட்ட வியாபாரிகள் கணக்குக் கொடுப்பதைப் போல மத்திய அரசாங்கத்திற்குக் காட்ட கணக்குத் தயாரித்திருக்கிறார்கள். பெரிய திட்டமாக இவர்கள் கொடுப்பதைப் போலத்தான் 749 கோடி ரூபாய் அளவுக்கு நான்காவது திட்டத்திலே ஏற்பாடு செய்து, அதே போல மத்திய அரசாங்க உதவித் திட்டமாக 65 கோடி ரூபாய் ஆகவும், பெரிய திட்டத்தை நிர்மாணிக்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு இவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதைப் பொறுத்து இருந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவர்கள் மத்திய அரசாங்கத்தோடு நல்ல முறையில் பேச்சு வார்த்தை நடத்திக் கேட்டிருப்பார்களானால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட அதிக நிதி வசதி பெற்றிருக்கலாம். மூன்றாவது திட்டத்திலே இவர்கள் சொன்னது 291 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டோம், மத்திய அரசாங்கத்தினுடைய உதவி 190 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால் 340 கோடி ரூபாய்க்குச் செலவினத்தை எட்டியிருக்கிறார்கள். 340 கோடி ரூபாய் அளவுக்குச் செலவினத்தை எட்டினார்களே, மத்திய அரசாங்கத்தினுடைய பங்காக, ப்ரோபோர்ஷனேட்டாகக் காண்ட்ரிப்யூஷன் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. ஏற்கனவே சொன்னபடி 65 சதவீதம் மத்திய அரசாங்கத்தின் உதவியாக இருக்கும் என்ற முறையில், இப்போது 340 கோடி இந்த மாநிலத்தில் செலவிடப் பெற்றும் கூட மத்திய அரசாங்கத்தின் ஈட்டு மானியம் 190 கோடி ரூபாய்க்கு மேல் போகவில்லை. அந்த அளவுக்கு நம் மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுப் பெறக் கூடிய உதவிகளைப் பெறத் தவறி இருக்கிறது என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பப்ளிக் செக்டாரிலே, அதாவது அரசாங்கத் துறையிலே மட்டும், இந்தியா பூராவிலும் 15,620 கோடி அளவுக்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் நேரடியாக அவர்கள் ஆட்சியில் இருக்கிற பகுதிகளுக்கும் சேர்த்து அவர்கள் செலவிடக் கூடிய தொகை 8,095 கோடி ரூபாய். 14 மாநிலங்களுக்கும் சேர்ந்து செலவிடப்படக்கூடிய தொகை 7,595 கோடி ரூபாய். உள்ளபடியே மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களைச் சரிவர நடத்தவில்லை என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநிலங்களுக்கு சுய ஆட்சி கொடுக்கும் நிலையில் மத்திய சர்க்கார் அதிக அளவில் நிதி ஒதுக்குவதன் மூலமாக நிறையப் பணம் ஒதுக்கவேண்டும். அதற்கு நம் மாநில சர்க்கார் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்று கருதுகிறேன். இன்றைய தினம் மாநிலங்களுக்கு என்னென்ன கொடுத்திருக்கிறார்கள்? மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிற திட்டங்கள், வேளாண்

மை, சிறு தொழில்கள், பாசனம், மின் சக்தி, சாலைகள், சாலைப் போக்குவரத்து, கல்வி, சமூகப் பணிகள்; இப்படியாக நமக்குத் தேவையான அத்தனை வேலைகளையும் மாநில சர்க்காரிடத்தில் கொடுத்து விட்டு, மத்திய சர்க்காரிடத்தில் பெரிய தொழில்கள் ஆரம்பிப்பதை வைத்துக்கொண்டு அவர்கள் கணக்கில் 7,095 கோடி ரூபாய் செலவிட வேண்டிய அவசியம் கிடையாது. நம் மாநில சர்க்காரும் மற்ற மாநில சர்க்கார்களும் சேர்ந்து இந்த விதாசாரத்தை மாற்ற முயற்சி எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

அதே போல, தனியார் துறை சாதனைகளைப் பற்றிச் சொல்லுகிறார்கள். 6½ சதவீதம் பர் காபிடா இன்கம் வளரும் என்று சொல்லுகிறார்கள். மக்களுக்கு வருகிற வருமானத்தில் 6½ சதவீதம் உயர்வு ஏற்படுகிறது என்றால், பொருளாதாரம் அந்த அளவுக்கு உயருகிறது என்றால், ரியல் இன்கம் எவ்வளவு இருக்கிறது? 120 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள், 120 ரூபாய் செலவு செய்து கன்சுமர் குட்ஸ் வாங்கிக்கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்றால், இன்னும் ஆறு மாத காலம் போனால் 180 ரூபாய் செலவிட்டாலும் இதே வாழ்க்கை நிலை இருக்காது. 1950-லே ஒரு ரூபாய் சம்பளம் பெற்ற விவசாயக் கூலி இன்றைக்கு அவனுக்கு 1¾ ரூபாய் வருகிறது; இல்லையென்று சொல்லவில்லை. அன்றைக்கு 12 அணாவிற்கு ஒரு படி அரிசி வாங்கினான். இன்றைக்கு 1¾ ரூபாய் பெற்றாலும் ஒரு படி அரிசியும், அதற்கு ஏற்ற சாமான்களையும் வாங்கும் நிலையில் அவன் இல்லை. காரணம் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பணப் புழக்கம் அதிகம். நோட்டை அச்சடித்து விநியோகிக்கிறார்கள்; கள்ள மார்க்கெட் பணம் வந்து சேருகிறது; ஐந்தாண்டுத் திட்டங்களுக்காகக் கடன் வாங்குகிறார்கள். அதிக வரி விதிப்புகள் இருக்கின்றன. உற்பத்தி ஆகிற பொருள்களை விட அதிக அளவில் நோட்டுப் புழக்கம் இருப்பதால்தான் இந்த நிலை. இதனால் விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறதே தவிர வேறு இல்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும்; அதே சமயத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். அதற்கு என்ன வழி என்று அரசாங்கம் கருதிப் பார்த்துச் செயலாற்றவேண்டும். நம் மாநில அரசாங்கம் போட்டிருக்கிற திட்டம் மட்டும் ஏறக்குறைய 749 கோடி ரூபாய் அளவு என்று சொல்லி, அவர்கள் அதற்கு என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லுகிற நேரத்தில் சொல்கிறார்கள், 90 கோடி கடன் வாங்கப் போகிறோம், சிறு சேமிப்பிலிருந்து 28 கோடி பெறலாம், ப்ராவிடெண்ட் பணத்திலிருந்து 6¼ கோடி பெறலாம், அதே போல பொது ஸ்தாபனங்கள், எலெக்ட்ரிசிட்டி போர்டு மாதிரியான நிறுவனங்களிலிருந்து திரும்பப் பெறக் கூடிய பணம் 48 கோடி இருக்கும், பல வகை மூலதன வரவுகளிலிருந்து வருகிற பணம் என்று சொல்லிக் கணக்குகள் காட்டும்போது மைனஸ் 105 கோடி என்று போட்டிருக்கிறார்கள். நான்காவது திட்டத்திற்கு அரசாங்கம் கொடுத்திருக்கிற கணக்குகளின்படி 68 கோடி ரூபாய் வருமானம் வரும். 749 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டுவிட்டு வரவினத்தை 68 கோடி ரூபாயாகப் போட்டிருப்பார்களானால், மீதிப் பணத்தை எவ்வாறு சரிக்கட்டப் போகிறார்கள்? ஒன்று மத்திய அரசாங்கத்தோடு





போராடி வாங்கப்போகிறீர்களா? அல்லது மாநில மக்களின் உயிரைப் பிடித்து நசுக்கி அவர்களுடைய வியர்வையை நீங்கள் எடுக்கப் போகிறீர்களா? இதிலே தான் நம்முடைய அரசாங்கம் போகக் கூடிய நிலைமை நாம் பார்க்கிறோம். 11-30 a.m.
தேர்தல் வருகின்ற ஒரு காரணத்தினால்தான் புதிய வரிகள் போடுவது பற்றி கோடிட்டுக் கூட நம்முடைய அரசாங்கம் காட்டவில்லை. இருக்கிற சட்டங்களே, இருக்கிற முறைகளே மக்களுக்குச் சிரமம் கொடுக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. வியாபாரிகளின் இல்லங்களில் புகுந்து கணக்குகளைச் சூறையாடுகிறார்கள் என்று பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதை விட இன்னும் மேலும் தீவிரமான முறையிலே துரிதப்படுத்தி நீங்கள் எத்தனை கோடி ரூபாய் நிதி திரட்ட முடியும்? ஆகையினால் அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன். நீங்கள் 600 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு, ஏறக்குறைய இதுவரையில் கிடைத்த சத விகிதம் 65 தான். 400 கோடி ரூபாயை மத்திய அரசினிடமிருந்து பெற்றே தீர வேண்டும். ரூ. 400 கோடி பெற்றாலும் கூட பாக்கி 200 கோடி ரூபாய்க்கு நீங்கள் காட்டிய கணக்குப்படி 68 கோடி ரூபாய் போக மீதித் தொகைக்கு வரி போட்டுத்தான் தீர வேண்டும். ரூ. 400 கோடி மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கமுடியுமா அல்லது ரூ. 300 கோடி தான் வாங்கப்போகிறீர்களா அல்லது ரூ. 250 கோடிக்கே 8 தடவை காவடி எடுக்கப் போகிறீர்களா என்பதெல்லாம் செப்டம்பர் மாதம் முடிந்த பிறகு பேசிக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

நீங்கள் போடுகின்ற திட்டத்தின் மூலம் இந்த நாட்டில் இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நீங்கள் தயவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைய தினம் நாட்டு மக்களில் 86 சதவிகிதத்தினர் விவசாயக் கூலி மக்கள்; ஏழை மக்கள். ஏழை மக்கள் ஐந்தாண்டுத் திட்டங்களினால் என்ன பலன் பெற்றிருக்கிறார்கள்? ஏதோ பலன் கிடைத்திருக்கிறது; இல்லை என்று சொல்லவில்லை. பத்து சதவிகித மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஆனால், விலைவாசிக் கொடுமையின் காரணமாக எத்தனை பேர்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்? எத்தனை பட்டம் பெற்ற வாலிபர்கள் ரயிலின் முன்னால் விழுந்திருக்கிறார்கள்? எத்தனை குமஸ்தாக்கள் தூக்கில் தொங்கியிருக்கிறார்கள்? இதற்கெல்லாம் ஆண்டவன் காரணமா? இதற்கெல்லாம் நீங்கள் போடுகின்ற திட்டத்திலுள்ள ஓட்டை, உடைசல் தான் காரணம். வேறு ஒன்றும் காரணம் சொல்ல முடியாது. நீங்கள் போடுகின்ற திட்டத்தைச் சரியான முறையில் போடுங்கள், செட்டையான முறையில் போடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். 'பிசிகல் டார்ஜெட்டை' வைத்து உங்களால் சொல்ல முடியுமா? சொல்லுங்கள், ஏற்றுக்கொள்கிறேன்.

1960-ல் ஆரம்பித்த பரம்பிக்குளம்-ஆளியார் திட்டம் இன்றைய தினம் 1965-ல் கூட முடிவடைந்தபாடில்லை. 1968-ல் திட்டம் முடியும் என்று சொல்லக்கூடிய அளவில்தான் இந்தத் திட்டம் இருக்கிறதே தவிர, வேறு என்ன இருக்கிறது? எப்படியோ போடுகிறீர்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [6th August 1965

கள். போட்ட எஸ்டிமேட்டை மூன்று வருஷங்களுக்குள் மூன்று தடவை திருத்தக்கூடிய காட்சியைத் தான் காண்கிறோம். ஒரே ஒரு உதாரணம் சொல்லுகிறேன். நிதி இலாகாவை நிர்வகிக்கக்கூடிய அதிகாரியும் இங்கே இருக்கிறார். அவர்களுக்கு உங்கள் மூலம் சொல்லுகிறேன். எங்கள் ஊரில் ஒரு ஆலை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ரோடு வேண்டுமென்று கேட்டோம். 1960-ல் எஸ்டிமேட் சாங்ஷன் செய்திருக்கிறார்கள், சென்னை அரசாங்கம் ரூ. 69,000-க்கு. நெல்லிக்குப்பம் ஆலைக்குப் பக்கத்தில் இருக்கிற ரோடுக்காக 1960-ல் ரூ. 69,000-க்கு எஸ்டிமேட் சாங்ஷன் செய்யப்பட்டது. பிறகு என்ஜினியர்கள் எஸ்டிமேட்டை ரிவைஸ் செய்திருக்கிறார்கள். 1963-ம் ஆண்டில் மே மாதம் 21-ம் தேதியன்று ரூ. [illegible]-க்கு அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் கொடுத்திருக்கிறார்கள். ரூ. 69,000-ல் போடக்கூடிய ரோடு அது. மீண்டும் அதைப் போடவில்லை. இன்னும் போடவில்லை. இப்பொழுது சென்ற மாதத்தில் அதற்கு அரசாங்கம் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள், ரூ. 2,52,000-க்கு. ஒரு ரோடு, 1960-ல் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அரசாங்கம் ரூ. 69,000 சாங்ஷன் செய்த ரோடு, 1965-ல் ரூ. 2,52,000-க்கு போடுவது என்று இப்பொழுது உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மறுபடியும் அது போட்டு முடிவதற்குள் ரூ. 5 லட்சம், 6 லட்சம்; 7 லட்சம் என்று எவ்வளவுக்குப் போகுமோ எனக்குத் தெரியாது. இந்த நிலைமையில்தான் திட்டங்கள் போடப்படுகின்றன. போட்ட திட்டம் சரிவர செயல் படுத்தப்படுகிறதா, எஸ்டிமேட்டுக்கு உள்ளாக செலவு செய்கிறோமா என்று கவனித்துப் பார்க்கவேண்டும். பத்து லட்சம் என்று கொடுப்பார்கள். ஆனால், முடிகின்ற தருவாயில் பார்த்தால், அது ரூ. 37 லட்சத்தை எட்டும். இது தான் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாக இருக்கிறது. சிலருக்கு உதவி செய்வதற்காக இன்றைய தினம் திட்டம் போடப்படுகிறதே தவிர, உள்ளபடியே வேலை வாய்ப்பை அதிகமாக மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காகத் திட்டம் போடப்படவில்லை. 12 தொழிற்சாலைகளுக்கு, நூற்பு ஆலைகளுக்கு லைசென்ஸ் கொடுத்தார்கள். 2, 3 வருஷங்களுக்கு முன்பு; என்ன ஆயிற்று? எத்தனை மில்கள் ஆரம்பிக்கப்பட்டன? ஆரம்பிக்கப்பட்டு எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது? உடனே ஆரம்பிக்கிறோம் என்று கேட்ட தொழிலதிபர்களுக்குக் கொடுத்திருந்தால், மில்கள் ஏற்படுத்தப்பட்டு, பல லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். இல்லையே? அரசாங்கத்திற்கு வேண்டியவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தார்கள். ஏன் இப்படிச் செய்யவேண்டும்? ஆகவே தான் இந்த ஐந்தாண்டுத் திட்டங்களிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறி நாங்கள் கண்டிக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டத்தைச் சரியான முறையில் தீட்டுவதற்கு, சீரான முறையில் மக்களுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய வகையில் நீங்கள் திட்டத்தை வகுப்பதற்குத் தவறிவிட்டீர்கள். சேலம் இரும்பு ஆலைத் திட்டத்தை மத்திய அரசாங்கத் திட்டமாக இருந்ததை, ஏன் மாநில அரசாங்கத் திட்டத்தில் சேர்ப்பதற்கு முயற்சிக்கிறீர்கள்? நீங்கள் தோற்றவர்களாக இருக்கிற காரணத்தினால்தான் இப்பேர்ப்பட்ட குறைகள் இருக்கின்றன. மந்திரிகள் இன்றைய தினம் எங்களுக்குச் சொல்கிறார்கள்,



6th August 1965] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கடலில் போய் வீணாக விழுவதற்கு விடமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். மந்திரி திரு. ராமையா அவர்கள் சொன்னார்கள். அப்படி நீங்கள் அணைகளைக் கட்டியிருக்கிறீர்களா? பெண்ணை ஆறு இருக்கிறது, கடிலம் நதி இருக்கிறது. கடலூர் டிராவலர்ஸ் பங்களாவிலிருந்து பார்த்தால் தெரியும், பல லட்சக்கணக்கான 'க்யூபிக் பீட்' தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அணை கட்டுவதில் கூட நீங்கள் தவறியிருக்கிறீர்கள். கேரள அரசாங்கத்தோடு உங்களால் பேச்சு வார்த்தை நடத்த முடியவில்லை. மேற்கே ஓடுகிற ஆறுகளைத் திருப்பி விடுவதில் நீங்கள் தோல்வி கண்டீர்கள். ஹொகநகல் ப்ராஜக்டிலும் நீங்கள் தோல்வி கண்டீர்கள். அக்கம் பக்கத்து மாநிலங்களோடு நீங்கள் சீரான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி, திட்டங்களை நிறைவேற்றுவதில் தவறிவிட்டீர்கள். இதனால் நாட்டில் விவசாயம் பாதிக்கப்படுகிறது. நல்ல முறையில், மக்களுக்குப் பயன்படத்தக்க முறையில் நீங்கள் திட்டங்கள் போட்டு நிறைவேற்ற முன்வந்தால் நாங்கள் அவைகளுக்கு ஆதரவு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், ஒரு சிலரது வாழ்க்கைத்தரத்தை மட்டும் உயர்த்துவதற்குத் திட்டம் போட்டீர்களானால், அதை நாடு ஏற்றுக்கொள்ளாது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*SRI R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I wish to say a few words regarding the Fourth Five-Year Plan, which is the subject-matter of dicussion before this House. It may be stated, without fear of contradiction, that the Fourth Five-Year Plan is socialistic in outlook and aspirations. If we just have a glimpse at the figures of amounts that are being allotted for expenditure in the Fourth Five-Year Plan, we can safely come to the conclusion that for the nation-building activities so much of money is being earmarked and that would be spent in that behalf.

So far as Plan finances are concerned, we are depending upon foreign capital and also the assistance that we are likely to get from friendly foreign countries. Public borrowing of some amount is contemplated along with the revenue which will have to be raised by way of fresh taxation. These are some of the principles which have been adumbrated in the Fourth Five-Year Plan for implementing the Plan and finding the wherewithal and the finances for the same. But suffice it for me to say that at the moment there is no proposal for any fresh taxation. Now we are base with so many difficulties in the matter of finances because our foreign resources are almost depleted and it has been urged on the floor of this House by one hon. Member that this Fourth Plan may be put off for another two years and he has been just vehement enough to say that his leader has been very particular in opposing the planned development and planned economy. We should realise that our State is not a Police State but a Socialistic State and even a Welfare State and so we should also think of our development not in the way in which it is done in the Police State but as it is done in a Socialistic State

[Sri R. Ponnappa Nadar] [6th August 1965

So far as the general features of the Plan are concerned, it is a welcome gesture that we are spending a sizable sum towards the Fourth Five-Year Plan. We are almost at the end of the Third Plan and our targets and achievements are very good. It may even be stated that our Fourth Plan is a very ambitious one and it needs pruning here and there. Even if there is some pruning here and there, I would say that our Plan would benefit the common masses. It has been stated that there is concentration of wealth and that the income of the common man has not increased. But it has been accepted that the national wealth has increased in spite of the fact that there is concentration of wealth in a few hands.

So far as plans are concerned, it is seen that there is a plethora of new industrialists and industrial magnates who have enriched themselves because of the Plans and we should just try to achieve something in their behalf also. Now we have just adopted ceiling on land holdings. We should have some ceiling in income as well. So far as ceiling on large income is concerned, there are people who are having very large incomes and yet there is no restriction on the amassing of their fortunes. The agriculturists are not able to hold more than 30 acres whereas industrial magnates could have so much of wealth that they could create difficulties for us. I think some provision will have to be made on their behalf so that these industrial magnates' amassing of wealth could be subjected to a ceiling limit and the resultant income could be utilised for financing the Fourth Plan. It may be said that by this arrangement industrial and capital formation may be hindered. But I think a ceiling on their income might be welcome and we could then get appropriate finances for our Fourth Plan.

I would like to say a few words with regard to Kanyakumari district and its local problems. It has been said that so far as Kanyakumari is concerned we did not have the railway link so far. We thought about this railway link in the Second and Third Five-Year Plan periods and we did not have it then and we are now at the threshold of the Fourth Plan. Inspite of best efforts we have not had the railway link so far. Inspite of the best efforts of this State Government for the railway link, nothing tangible has been done so far. Many assurances have been given both by State Government as well as by Central Government but nothing tangible has been done so far. I once again request that our Government should take concrete steps to see that the railway link is brought in the Fouth Plan period.

It is a welcome move that Tuticorin is being developed as a major harbour and there is going to be broad-guage link for Tuticorin. That is under contemplation. I think it is good and it would augur well if some connection is given to Tuticorin Harbour. Kanyakumari district which is a hinterland should be linked with rail so that industrial progress and other development programmes are ushered in.



6th August 1965] [Sri R. Ponnappa Nadar]

Another point which I wish to represent is with regard to industries. We have got a co-operative Spinning Mill in our district. Licence has been given to open another spinning mill at Kanyakumari. I think the gentleman who had been given the licence has surrendered it to Government. Efforts may be made to give a fresh licence. Capital is notoriously shy in our district because it has got an agricultural bias and people are inclined to development of agriculture there. That is the reason why there is no scope for new industries coming up there. Just to obviate this, I would venture to suggest that some public sector undertakings could very well be taken up for execution in Kanyakumari. Raw materials are available in plenty. A paper mill could very well be started, I think licence has been given to one to start a paper industry but that gentleman was not able to start it and the licence has been surrendered or cancelled. (I am not in a position to say correctly). There is also scope for starting a rubber factory in my district. Government had planted rubber in more than 5,000 acres and rubber is available in plenty and the quality and quantity of rubber available is sufficient for starting a rubber factory there. There are other industries also which have been made mention of by my friend representing Kolachal. He has catalogued some industries that could be started and I do not want to reiterate or repeat those points. Ours is a small district and the density of population is more than 2,000 per sq. mile. That is highest so far as Madras State is concerned. The educated unemployment situation is so great there. I would like to refer to one instance so far as this is concerned. We invited applications in the co-operative spinning mill, for recruitment of 400 workers and the number of applications that we received was of the order of 11,600. Imagine that. This is for a small co operative spinning mill. That will speak volumes. There is so much of educated unemployment there that we want some more industries to be started in that district. Another factor which I would like to bring to the notice of the House was that for 10 posts of clerks in that Co-operative Mill more than 3,000 applications from S.S.L.C. passed boys came in. There is so much educated unemployment there. Some more employment opportunities and vistas should be opened there during Fourth Plan period. It has been made mention of that under the Fourth Plan, employment opportunities and vistas would be augmented sufficiently. So far nothing tangible has been done and something more will have to be done. I would think Government would do well if they were to take some concerete measures in that behalf.

Another thing which I would like to mention is this. We are happy that we are going to have a new University at Madurai and things are moving briskly in that direction. I congratulate the Hon. Chief Minister for that. So far as Kanyakumari district is concerned, we have got some private colleges. We do not have facility for technological education. The hon. Member representing Kolachel stated that an agricultural college might be started at Tuckalay. I would venture to suggest that it would not be sufficient

and we should have an engineering and medical college for Kanyakumari district so that there may be more facilities for students hailing from that area. We spend too much money on education. That is a welcome move. So far as schools in Kanyakumari are concerned, everyone may be aware that most of our schools are housed in temporary sheds. Many of our elementary and primary schools are housed in sheds. Some constructions on a phased programme has been going on but nothing tangible has been done so far as construction of buildings for schools are concerned. I would speak of two instances. There is a Government High School at Karinkal constituency. For the construction of buildings for Karinkal and Kollemcode High Schools (costing Rs. 1,25,000 each) Government has given the sanction in 1962. We are in 1965 now. The building has not come up still. We have represented about this matter to the authorities and we have brought this matter to the notice of the Hon. Chief Minister also. In the Karinkal School there are more than 1,800 boys but there is no pucca building. It is housed in temporary sheds. Accommodation is a problem there The High School was started in 1959. I can multiply instances after instances like this but I do not want to waste my valuable time in multiplying instances like that. Government would do well if something is done in that behalf and construction of school buildings are attended to early. That should be expedited.

Another point which I want to emphasise is with regard to the grant for construction of roads. The grants are grossly inadequate for highways both national and district roads. So far as Plan works are concerned, we find that some Plan works included in Second Plan and Third Plan had been stopped because of emergency. I think Government would do well to see that some of the works included in Second Plan were executed at least in the Fourth Plan period. I think emergency has more or less ceased. Another matter also, I want to bring to the notice of Government. So far as major bridges are concerned, there is no major bridge work contemplated or included in the Fourth Plan for our district. There is a bridge called 'Ganapathiyankadalu' bridge across Kuzhuthurai river which connects our State with adjacent Kerala State. I think if that work is taken up for execution there would be more contact with coastal areas. That would be a welcome move. I would urge upon this Government to take up the work of 'Ganapathivankadalu bridge'. That is a major bridge. That has been included in the Second Five-Year Plan by the erstwhile Travancore-Cochin Government. Even during Third Plan nothing had been done. At least during Fourth Plan it might be taken up for execution.

So far as irrigation is concerned, major and medium irrigation works have been attended to in our district and we are thankful to the Government for taking up for execution the Chittar-Pattanamkal Scheme—that is our cherished dream and ambition—and our thanks are also due to our Congress President who was then the Chief Minister and who inaugurated that scheme. By that scheme 47,000 acres of land are to be benefited and 17,000 acres in the Tirunelveli





District are also to be benefited. But I would sound a note of caution that the Radhapuram Canal Scheme is being speedily executed, whereas the Chittar-Pattanamkal Scheme is not receiving the attention it deserves and I think sufficient attention would be bestowed on the Pattanamkal Scheme and water would be let in simulteneously both in the Radhapuram Canal and in the Pattanamkal Canal. Not that I have got anything to say against letting in water in the Radhapuram Canal but it should not impair or impede the growth that is already there in our district. That is the point which I just wanted to mention. With these words, I conclude my speech.

*திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்:* கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதல் குறிப்பை ஆமோதித்து சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது ஒரு நல்ல திட்டம். நல்ல திட்டத்தோடு மட்டுமல்ல; புரட்சிகரமான, இன்பகரமான, ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய, சோஷலிச பாணி சமுதாயத்தை உருவாக்கக் கூடிய ஒரு வளர்ச்சிகரமான திட்டம் இது. "திட்டம் இல்லாமலேயே நாம் வாழ முடியும்" என்றார் ஒரு கனம் உறுப்பினர். பின்பு, "திட்டம் சிறிது காலத்திற்கு ஒத்தி வைத்தால் சரி" என்று சொன்னார். "சீமைகளெல்லாம் சுற்றிப் பார்த்தாலும் திட்டம் இல்லை" என்று சொன்னார். ஆனால், மனிதனோ, நாடோ, குடும்பமோ திட்டம் இல்லாமல் யாரும் வாழ முடியாது, முன்னேற முடியாது என்பதை நான் மட்டும் சொல்லவில்லை; இந்த நாட்டிலுள்ள, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்களும் சொல்லிக்கொள்கிறார்கள். "என்னுடைய தலைவன் சிறந்த தலைவன், 'திட்டத்தினால் நாடு முன்னேற முடியாது, பொருளாதார வளர்ச்சி ஏற்பட முடியாது, திட்டம் என்று சொல்லி நாட்டை அடகு வைக்கிறார்கள், நாடு நசித்துக் கொண்டே போகிறது' என்று சொல்கிறாரே அவர் தான் என்னுடைய அருமையான தலைவன்" என்றும் கூறிக்கொண்டார். திட்டத்தைப் பற்றி நம்பிக்கை இல்லை, நாட்டினுடைய சோஷலிச பாணி சமுதாய வளர்ச்சியில் நம்பிக்கை இல்லை, ஏழை மக்களை முன்னேற்றவேண்டும் என்பதில் நம்பிக்கை இல்லை என்று சொல்கிற அந்தப் பெரியாரைத் தலைவராக வைத்துக்கொண்டு, இன்னும் தீர்க்கமாகச் சொல்லப்போனால், இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நான் அதே மாதிரி தான் கூடு கட்டிக்கொண்டு வாழப் பிரியப்படுகிறேன், அம்மாதிரி தான் வாழவேண்டும், அம்மாதிரி தான் இருக்கவேண்டும் என்பது கொங்கணத்தான் குரல் மாதிரி இருக்கிறது, இந்த இருபதாவது நூற்றாண்டில், கனம் உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் சொல்வது. திட்டத்தை வரவேற்கிறோம் என்றார்கள். திட்டத்திலே நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள் ஒரு சிலர். அந்தத் திட்டத்திலே குறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் பணக்காரர்களுக்குத்தான் பாணி பாடுகிறது, அவர்கள் வாழ்வை வளமாக்குவதற்காகத்தான் வந்துவிட்டது என்றும், அதற்கு அரசாங்கம்

உடந்தையாகிவிட்டது என்றும் சொல்லிக்கொண்டார்கள் சிலர். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்குறிப்பிலே பார்க்கும் போது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் வளர்ச்சி அடையவில்லை என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலேயே இந்தத் தமிழகத்தைப் பொறுத்த மட்டிலும், விவசாயத் துறையிலும் தொழிற் துறையிலும் பெரியதோர் புரட்சிகரமான மாறுதலை நாம் கண்டிருக்கிறோம். "அவ்வாறு மாறுதலைக் கண்டு கொண்டீர்களே, ஏன் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது?" என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். 1950-ல் பருப்பின் விலை, அரிசியின் விலை இப்படி இருந்தது, 1955-ல் இப்படி இருந்தது என்றெல்லாம் சொன்னார்கள். கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஐந்து வயதில் எவ்வளவு சாப்பிட்டார், பத்து வயதில் எவ்வளவு சாப்பிட்டார், இருபது வயதில் எவ்வளவு சாப்பிட்டார்? இந்த நாட்டிலே மக்கள் தொகை பெருகிக்கொண்டு போகும்போது, வளரும் சமுதாயத்தில் விலைவாசி உயர்வை நாம் தடுத்துவிட முடியாது. விலைவாசி உயர்கிறது என்று சொன்ன அதே சந்தர்ப்பத்தில் மக்களுக்கு வாங்கும் சக்தியிலும் உயர்வு இருக்கிறது என்பதையும் அதே திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். 12 அணா வாங்கினார்கள், 1½ ரூபாய் வாங்கினார்கள். இப்பொழுது 2 ரூபாய் வாங்குகிறார்கள். இனி 3 ரூபாய் வாங்குவார்கள், ஐந்து ரூபாய் கூட வாங்கக் கூடிய சக்தியையும் இந்த அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என்ற வகையில்தான் இந்தத் திட்டம் இருக்கிறது.

"உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல அணைக்கட்டுகளைக் கட்டி முடித்திருந்தாலும், வாய்க்கால்களை வெட்டிக் கொடுத்திருந்தாலும், எங்கே விளைந்திருக்கிறது? அரசாங்கம் கோடிக்கணக்காகப் பணத்தைக் கொட்டுகிறார்களே, பலன் இருக்கிறதா?" என்றெல்லாம் சொல்லப்பட்டது. அரசாங்கம் அதனுடைய கடமையைச் செய்கிறது. நல்ல திட்டங்களைத் தீட்டுகிறது. அரசாங்கம் அணையைக் கட்டலாம், நல்ல வாய்க்கால்களை வெட்டலாம். ஆனால், இயற்கையன்னையின் எண்ணம் வேறாக இருந்தால் என்ன செய்வது? மழை பெய்தால்தானே தண்ணீர் வரும்? வரக்கூடிய தண்ணீரைத் தேக்கி வைத்து, வாய்க்கால்கள் மூலம் வயல்களில் பாய்ச்சுவதற்கு வேண்டிய முறையில் திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். "ஐந்தாண்டுத் திட்டங்களில் முதலில் போட்ட தொகையை இடையிலே இரண்டாண்டுகளுக்குள் அதிகப்படுத்துகிறார்கள். இன்னும் அதிகமாக அதனுடைய மதிப்பீட்டுத் தொகையை உயர்த்துகிறார்கள்" என்று சொல்லப்பட்டது. ஆனால், ஒரு திட்டம் என்று போடும்போது, இடையிலே பொருள்களின் விலை உயர்வுக்குத் தகுந்தாற்போல் திட்டத்தின் மதிப்பீடும் உயரக்கூடிய நிலை ஏற்படுகிறது. தமிழகத்தில் நல்ல முறையில் விவசாயத்தைப் பெருக்குவதற்கு, கிராமப் பகுதிகளில் சிறு சிறு நவீன ட்ராக்டர்களைக் கொடுத்துதவ வேண்டும். பாதாளத்தில் இருக்கும் தண்ணீரை எடுத்து



விரைவிலே பயன்படுத்துவதற்கு வழி செய்ய வேண்டும். இன்னும் பல சிறிய திட்டங்கள் இருப்பதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். தொழில்கள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்து, கிராமப் புறங்களில் இருப்பவர்கள் நகர்ப்புறங்களுக்கு வர வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு பல சிறிய திட்டங்களை வகுத்து, நவீன தொழில்களைத் துவக்கவேண்டும். என்னுடைய தொகுதிக்குப் பரம்பிக்குளத் தண்ணீரை இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

*திரு. வி. எஸ். எஸ். மணி: கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத்திட்டக் குறிப்பின் பேரில் என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன் திட்டமிடுவது நல்லது. திட்டமிட்ட செயல்தான் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும். ஆனால், திட்டமிடும்போது ஆய்ந்து, ஆராய்ந்து செய்யவேண்டும். திட்டத்தைச் செயல்படுத்தும்போது நல்ல முறையில் கண்காணித்துச் செய்யவேண்டும். இது தான் முக்கியம். இதனால், திட்டமிட வேண்டாம் என்று யாரும் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. திட்டமிட வேண்டியதுதான். கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே பல கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்து, பார்த்தும், செலவிற்குத் தகுந்தாற்போல் அதனுடைய பயனை அடையவில்லை, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்று பெரும் தலைவர்களெல்லாம் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பெரியோர்கள் சிலர் சொல்கிறார்கள். ஏதோ அன்னிய நாட்டுச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில், பிறர் கையை எதிர் பார்த்திருக்கக்கூடிய நிலையில் இந்தத் திட்டம் ஏன் என்கிறார்கள் இந்தத் திட்டம் "இன்சால்வன்சி திட்டம்" என்று கூடக் குறிப்பிட்டுள்ளார்கள். மற்றவர்கள் அப்படிச் சொல்லியிருந்தபோதிலும் எல்லாத் திட்டங்களையும் விட இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மிகவும் மகத்தானது என்று நான் சொல்வேன். அப்படிச் சொல்வதற்குக் காரணம், இந்தியா பூராவிற்கும் சுமார் 22,000 கோடி ரூபாய் அளவில் திட்டமிடும்போது, அதில் நமது மாநிலத்தின் பங்கு 750 கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அந்த 750 கோடி ரூபாய்த் தொகையை நாம் எப்படிச் சேகரிக்க முடியும் என்பதற்கு ஆறு வழிகள் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வழிகளில் முதல் வழியானது, "தற்போதுள்ள வரி விதங்களின்படி, மாநில ரெவினியூவில் எஞ்சும் தொகையை ஒதுக்குவது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள வரி விகிதங்களே மிகமிக அதிகம். இன்னும் உயர்த்துவது என்றால் மக்கள் தாங்குவார்களா? வரிச்சுமையை மேலும் கூட்டாமல் 12.00 noon. இருக்க, திட்டத்தின் முதலீட்டையாவது ஓரளவு குறைத்தால் பரவாயில்லை. இல்லாவிட்டாலும்—திட்டமே வேண்டாம் என்று சொல்லவில்லை—இடையில் இரண்டாண்டுகள் நிறுத்தி வைக்கலாம்.

"திட்ட விடுமுறை" கொடுக்கலாம். நம்முடைய முதல் மூன்று திட்டங்களினால் ஏற்படுகின்ற பலனைக்கொண்டு நமது வருவாயை ஓரளவு ஸ்திரப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிடவேண்டுமென்று சொல்லவில்லை. இரண்டாண்டாவது நிறுத்தி வைத்துக் கொண்டு வரலாம்.

நம்முடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 750 கோடியில் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் நீர்ப்பாசனத்திற்கும், மின்சாரத்திற்குமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேளாண்மைக்காக ரூ. 89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகைச் செலவுக்கேற்ப உற்பத்தியையும் அதிகப் படுத்த வேண்டும். உற்பத்தி அதிகமானால் தான் செலவு செய்வதற்கு அர்த்தமுண்டு. இந்த அரசு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அவ்வப்போது நம்முடைய திட்டத்தின் செலவுகளைப் பற்றியும், உற்பத்தித் திறனைப் பற்றியும் அறிவிக்க வேண்டும். அப்போது தான் அரசாங்கம் நல்லமுறையில் செலவு செய்து வருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும்.

அடுத்தாற்போல நீர்ப்பாசனத் திட்டத்திலே என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டவரை மருதா நதி நீர்த்தேக்கத் திட்டம் இருக்கிறது. அதைப்பற்றி நானே பலமுறை இந்த மன்றத்தில் கூறி வந்துள்ளேன். ஆனால் அந்தத் திட்டம் இந்த நான்காவது திட்டத்தில் கூட இடம் பெறவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் அதைப் பரிசீலனை செய்து அந்த நீர்த் தேக்கத்தை உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அது நல்ல திட்டம். அதிகமான பரப்புள்ள நிலத்திற்கு நீர்ப்பாசனம் கொடுக்கின்ற திட்டம். செலவு குறைவான திட்டம். அரசியல் கண்ணோட்டமின்றி பார்த்தால் இந்தத் திட்டத்தைப்போல வேறு திட்டம் வராது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்வேன். இந்தத் திட்டத்தையும் மீண்டும் பரிசீலனை செய்து இந்த நான்காவது ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நலப் பணிகளுக்காகக் கிட்டத்தட்ட 229 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் மருத்துவம், பொதுச்சுகாதாரம் என்ற இனத்திற்காக கிட்டத்தட்ட 37 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் கிராமப்புரங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கப்படவில்லை. ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் கட்டிட வசதி, மருந்து வசதி இல்லாத காரணத்தினால் டாக்டர்கள் அங்கு போய் நிலைத்து இருந்து பணி ஆற்ற முன் வருவதில்லை. அதனால் பல ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்களே இல்லை. ஆகவே ப்ரைமரி ஹெல்த் சென்டர்களின் கட்டிடங்களுக்காக ஓரளவு பணம் ஒதுக்கி இருந்தால் நல்லமுறையில் அவை செயல்பட வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக ப்ரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில் டாக்டர்களை நியமிக்கக் கூடிய அதிகாரம் டி. எம் எஸ். ஸிடம் இருக்கிறது. ஆனால் அந்த டாக்டர்களுடைய வேலையைக் கண்காணிக்கும் அதிகாரம் டி.பி.எச். இடம் இருக்கிறது. டாக்டர்களை நியமிக்கின்ற அதிகாரமும், அவர்களுடைய வேலையை மேற்பார்வை செய்கின்ற அதிகாரமும் ஒரே ஒரு டைரக்டரிடம் இருப்பது தான் சிறந்ததாக இருக்கும். இப்போது எங்காவது மருத்துவமனை காலியாக இருந்து டாக்டரைப் போடவேண்டும் என்று டி.பி.எச். அபிப்பிராயம் சொன்னால், டி.எம்.எஸ். டாக்டரை நியமனம் செய்தால் தான் உண்டு. இல்லையென்றால் காலிதான். இவர்கள் இரண்டுபேர்களுக்கும் ஒரு கோ ஆர்டினேஷன் இல்லை. அதிகமான டாக்டர்கள் தேவை என்று டி.பி.எச். கேட்டால் டி.எம்.எஸ். கொடுப்பதில்லை. ப்ரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு பணிகளும் ஒரு டைரக்டரிடமே கொடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல நமது மக்கள் தொகைக்குத் தகுந்தாற்போல டாக்டர்கள் இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நமது நாட்டு ஜனத்தொகை 6,700 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்றும், மூன்றாவது திட்ட இறுதியில் 5,900 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்று தான் அபிவிருத்தி அடைந்தது என்றும், நான்காவது திட்ட இறுதியில் 4,600 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற முறையில்தான் டாக்டர்களின் எண்ணிக்கை இருக்கும் என்று சொல்லப்படுகிறது. 4,600 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்பது போதவே போதாது. 3,000 பேர்களுக்கு ஒரு டாக்டராவது இருக்கக் கூடிய வகையில் டாக்டர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். அதிக டாக்டர்கள் தேவை என்பதனால் அதிக மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்த வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூன்று மருத்துவக் கல்லூரிகள்தான் ஆரம்பிக்க இருப்பதாகக் கூறப்பட்டு இருக்கிறது. மூன்று மருத்துவ கல்லூரிகள் போதாது. அதிக மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க இயலாது என்றாலும் இருக்கக் கூடிய மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையையாவது அதிகப் படுத்த வேண்டும். அதற்கேற்றாற்போல இருக்கக்கூடிய கல்லூரிகளில் தளவாடங்களை அதிகப்படுத்த நிதி ஒதுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு பண வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காகத்தான் ஹாண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தினார்கள். ஆனால் நெசவாளர்களுக்கு கார்ப்பரேஷனிடம் இருந்து பணம் வாங்கும் முறை ரொம்பக் கடினமாக இருக்கிறது. காரணம், விதிமுறைகள் அவ்வளவு ரிஜிட் ஆக இருக்கின்றன. அந்த விதிமுறைகளை மாற்றி சுலபமான முறையில் நெசவாளர்கள் பண வசதி பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. வி. எஸ். எஸ். மணி] [6th August 1965

கடைசியாக ஒன்றே ஒன்று மிகவும் முக்கியமானது. 1944-லேயே **Dindigul–Gudalore railway line** திண்டுக்கல்-கூடலூர் ரயில் பாதை சர்வே செய்யப்பட்டது. ஆனால் நாம் விடுதலை அடைந்த பிறகு அதை அரசினர் கைவிட்டு விட்டார்கள். தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் அந்த ரயில்வே பாதை எல்லா பாதைகளையும் விட முக்கியமானது. பல வியாபார ஸ்தலங்களையும் இணைக்கக் கூடியதாக இருக்கிறது. அதற்கு முதலிடம் கொடுத்து நிறைவேற்ற மத்திய அரசுக்கு சிபார்சு செய்து இனியாகிலும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. சதாசிவம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற்குறிப்பை ஆதரித்து, அதன்பேரில் என்னுடைய ஒருசில கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, வரப்போகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல திட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் திட்டமிட்டபடி நம்முடைய லட்சியத்தை அடையவில்லை என்பதை கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எடுத்துரைத்தார்கள். அதைக்கேட்டு நான் வருந்துகிறேன். நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் பல திட்டங்களைத் தீட்டி நம்முடைய உணவு உற்பத்தியை 70 லட்சமாக உயர்த்த வேண்டுமென்று முயற்சி செய்தும் அந்த லட்சிய அளவை நாம் அடையவில்லை. காரணம் சென்ற பத்து வருஷங்களாகப் பார்த்தால் பருவ மழை தவறி வந்திருப்பதன் காரணமாக புஞ்சை விவசாயம் பெரும் அளவு பாதிக்கப்பட்டு உற்பத்தி குறைந்து விவசாய மக்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். இது விவசாய பெருங்குடிமக்களுக்குத்தான் தெரியும். அப்படி இருந்தும்கூட நாம் போடுகின்ற முன்னேற்றமான திட்டங்களின் மூலமாகத்தான் கணிசமான அளவு உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. பருவ மழை ஒத்து பெய்திருந்தால் நாம் தீட்டியிருந்த லட்சிய அளவுக்கு மேல் உற்பத்தியைப் பெருக்கி இருக்கமுடியும்.

அதோடு பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து ஒரு பாசனத் திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்றால் அந்த திட்டத்தினால் நல்ல பலன் கிடைக்க சில பல வருஷங்கள் ஆகும். காரணம் விவசாயிகள் அந்த பூமியைச் சரிப்படுத்தி வேளாண்மை செய்ய—அந்த நிலம் நல்லமுறையில் உரமிடப்பட்டு விளைவை அளிக்க சில ஆண்டுகளாவது ஆகும். இதையும் நாம் கவனிக்க வேண்டும். நம்முடைய விவசாயத் திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறுவது நம்முடைய விவசாய மக்களைத்தான் பொறுத்திருக்கிறது. அவர்களுக்கு மேலும் பல ஊக்கங்களைக் கொடுப்பதன்



6th August 1965] [திரு. செ. சதாசிவம்]

மூலம்தான் நம்முடைய திட்டங்கள் வெற்றி அடையும், நாம போட்டிருக்கிற இலக்கையும் அடைவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வர இருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விவசாயத்துறையைப் பொறுத்த வரையில் நல்ல பல திட்டங்கள் அமைந்திருக்கின்றன. இருந்தாலும் நான் சில திட்டங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நொய்யல் ஆற்றிலே லோயர் பவானியினுடைய கழிவு நீர் அதிகமாக வருவதன் காரணமாக உங்காம்பாளையம் என்ற இடத்தில் ஒரு அணையைக் கட்டுவதன் மூலம் 40,000 ஏக்கருக்கு ஒருபோகம் நஞ்சைப் பாசனத்திற்கு வசதி செய்யமுடியும் என்ற முறையில் இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உள்ள முதல் பட்டியலிலே முக்கியத்துவம் கொடுத்து சேர்த்திருந்தார்கள். ஆனால் பலவிதச் சிக்கல்களின் காரணமாக அந்தத் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டி இருந்தது. இருந்தாலும் அதைக் கைவிடாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேறு சில முயற்சிகள் எடுத்து வருவதாக நாங்கள் அறிந்தோம். அந்த முயற்சிகளின் பலனாக அதே அணைக்கட்டு திட்டத்தின் மூலம் 20,000 ஏக்கர் நிலத்தை இருபோக நஞ்சை பாசன வசதிக்குக் கொண்டுவர முடியும் என்ற அளவிலே பேச்சு வார்த்தைகள் முடிந்திருக்கிறது. இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நிறைவேற்றப்படும் என எதிர்பார்த்தோம். எடுத்துக்கொள்ளப்படவில்லை. பேச்சு வார்த்தைகள் முடிந்திருந்த காரணத்தால் நான்காவது திட்டத்தில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று நாங்கள் மிக்க நம்பிக்கையுடன் இருந்தோம். மிகவும் சுலபமாக சுமார் 20,000 ஏக்கர் நிலங்களைப் பாசன வசதிக்குக் கொண்டுவரக் கூடிய திட்டமாக இருப்பதால் இந்த உங்காம்பாளையத்தில் ஒரு அணையைக்கட்டுவதற்கான திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்து உடனடியாக நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக எல்லா விஷயங்களையும் அமைச்சர் அவர்கள் நன்கு புரிந்திருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் இது விஷயமாக மேல் அதிகாரிகளுடன் கலந்து பேசி உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டத்தின் மூலம் 2,40,000 ஏக்கர் நிலங்கள், வறண்ட பிரதேசங்களிலே உள்ள நிலங்கள், பாசன ஆதாரங்கள் பெறுகின்றன. அதே நேரத்திலே இந்தத் திட்டத்தை இன்னும் அபிவிருத்தி செய்வதற்குப் பல திட்டங்கள் போடவேண்டுமென்பதை உணர்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாற்றுடன் ஆனைமலை ஆற்றை இணைத்து—இதற்காக கேரளா அரசாங்கத்தினிடம் பேச்சுவார்தைகள் நடத்தி—பாசன வசதியைப் பெருக்குவதற்கு வசதியிருக்கிறது. இந்தத் திட்டத்துடன் இதை இணைப்பதனால் 80,000 அல்லது 1 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறமுடியும் என்ற கருத்து இருந்து

[திரு. செ. சதாசிவம்] [6th August 1965

வருகிறது. ஆகவே, இதுபற்றி கேரளா அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும். இந்தத் திட்டம் நிறைவேறினால், தற்சமயம் கோயம்புத்தூரில் வறண்ட பிரதேசங்களாக உள்ள நான்கு தாலுகாக்களும் பாசன வசதி பெறுவதுபோல் திருச்சியில் உள்ள கரூர் தாலுகாவில் உள்ள வறண்ட பிரதேசங்களும் பாசன வசதி அடைய வழிவகை செய்ய வேண்டும். ஆதலால் இதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அமராவதித் திட்டத்தை நாம் நிறைவேற்றி அதன் மூலம் நன்மைகள் அடைந்து வருகின்றோம். இந்த அமராவதி அணைக்கட்டு இருக்கின்ற இடத்திலே பார்த்தோமானால் இந்த அணைக்கட்டு ஒரே நாள் மழையில் நிரம்பி தண்ணீர் வழிந்து ஓடக்கூடிய நிலையில் இருக்கிறது. ஏராளமான மழைத் தண்ணீர் ஆற்றிலே அடித்துச் செல்லப்பட்டு கடலிலே வீணாகக் கலக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, இப்படி வீணாகக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்வதற்காக அந்த அணையை இன்னும் விரிவுபடுத்தியோ அல்லது இன்னொரு அணையைக் கட்டியோ நீரைத் தேக்கி இப்பொழுது பாசன வசதி பெறுகின்ற நிலத்தைப்போல் இரட்டிப்பு மடங்கு நிலங்களைப் பாசன வசதிக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக அமராவதி ஆற்றிலே உள்ள கால்வாய்களை ரீமாடலிங் செய்வதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு ரீமாடலிங் சப்-டிவிஷன் அமைக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு ஒரு திட்டம் உருவாகியிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வைகைக் கால்வாயைச் சீரமைப்பதற்கும், காவிரிக் கால்வாய்களைச் சீரமைப்பதற்கும்தான் வழிவகை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அமராவதி ரீமாடலிங் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டிலே ஒரு கால்வாயைச் சீரமைப்பதாகச் சொன்னார்கள். அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த ரீமாடலிங் சப்-டிவிஷன் தயாரித்த அமராவதி ஆற்றின் கால்வாய்களைச் சீரமைப்பதற்கான திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் இது வேறு பல திட்டங்களுக்கும் உபயோகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரீமாடலிங் திட்டத்தின்படி அமராவதியினுடைய டெயில் எண்ட் அதாவது காவிரியில் சேருகின்ற இடத்திலே இருந்து படிப்படியாக கால்வாய்களைச் சீரமைத்துக்கொண்டு வந்தால் கீழக்கணாயில் உள்ளவர்கள் நன்மை பெறமுடியும்.

அடுத்தபடியாக அமராவதியின் கடைக்கோடியில் கரூர் தாலுக்காவில் பம்புசெட்டுகள் அதிகமான அளவில் வைத்து பாசன வசதி செய்தால் விளைச்சலைப் பெருக்க முடியும். இதை அமைச்சர் அவர்களே நேரிலே வந்து கண்டிருக்கிறார்கள். அப்படி இன்னும்



6th August 1965] [திரு. செ. சதாசிவம்]

அதிகமான பம்புசெட்டுகளை ஏற்படுத்த வேண்டிய நிலை இருக்கும் பொழுது, 2—10—1961-க்குப் பிறகு ஏற்படுத்திய பம்புசெட்டுகளை ரெகுலரைஸ் பண்ணமுடியாது என்று சர்க்காரில் இருந்து உத்திரவு வந்திருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான தண்ணீர் அமராவதியில் இருக்கிறது. அதை உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமையும் இருக்கிறது. வாய்க்கால்கள் எல்லாம் சீர்கெட்டு இருக்கின்றன. ஆகவே, வாய்க்கால்களை தூர் எடுத்து, கரம்புகள் கட்டி, அதிகமான தண்ணீர் கொண்டு வருவதற்கு வழி செய்யவேண்டும். இந்தச் சட்டத்தையும் கொஞ்சம் தளர்த்தி அமராவதியின் கடைக்கோடியில் பம்புசெட்டுகள் தாராளமாக வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்ற அடிப்படையில் கலெக்டருக்கு உத்திரவிடவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதே நேரத்தில் அமராவதியில் இன்னும் கடைக் கோடியில் சில வாய்க்கால்களை வெட்டினால், அதாவது வெங்கக்கல்பட்டி என்ற இடத்தில் உள்ள அணையின் மறுபுறம் ஒரு வாய்க்கால் வெட்டினால் சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் பாசன ஆதாரம் பெறும். இத்திட்டம் முன்பே பரிசீலிக்கப்பட்டுள்ளது. இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும். இதைத் தவிர கோயம்புத்தூர், திருச்சி ஜில்லாக்களுக்கு இடையில் மயில்ரங்கம் என்ற இடத்தில் ஒரு வாய்க்கால் வெட்டினால் அது அந்தப் பகுதிகளிலுள்ள பெருவாரியான நிலங்களை வளம் உள்ளதாக ஆக்குவதற்குப் பயன்படும்.

அடுத்தாற்போல், பரப்பலாறு என்ற ஒரு திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். இது நல்காசியின் உற்பத்தி ஸ்தலத்தில் கட்டப்படுவது. இந்த ஆறு அமராவதி ஆற்றின் ஒரு கிளை நதி. இந்த ஆறு என்னுடைய தொகுதியிலே கடைக்கோடிலே வந்து சேருகிறது. இது சுமார் 2,000 ஏக்கர் புது நஞ்சையும், ஆயிரத்துச் சில்லரை ஏக்கர் பழைய நஞ்சையும் பாசன ஆதாரம் பெறக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. இதை என்னுடைய பகுதிக்கும் விஸ்தரித்து, இன்னும் புதிதாக பாசன ஆதாரங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பரப்பலாறுத் திட்டம் அமையும்பொழுது, இது இரண்டு ஜில்லாக்களுக்கிடையே செல்வதால், சம்பந்தப்பட்ட இரு ஜில்லாக்களுக்கும் சமமாகப் பாசன ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு என்னுடைய பகுதிகள் எல்லாம் மிகவும் வறண்ட பகுதிகள் என்பதையும் கூறிக்கொள்கிறேன். குழாய்க் கிணறுகள் 500 அடி அல்லது 600 அடி அல்லது 1,000 அடி என்று கீழே போனால்தான் தண்ணீர் கிடைக்கும் என கருதப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில் உள்ள இடங்களில் ஏராளமான குழாய்க் கிணறுகளைப்போட்டு பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏழை விவசாயிகள் தனியாகச் சொந்தமாகச் செய்யமுடியாத நிலைமை இருப்பதால், ஒரு சில இடங்களில் மட்டு

மாவது அரசாங்கம் இதை பரீட்சார்த்தமாக அமைத்து, பின்பு அது வெற்றிகரமாக அமையுமானால் அதன் மூலம் பலனடையக் கூடிய விவசாயிகளிடம் இருந்து நீர்தீர்வை போன்ற வரிவசூல் செய்தாலும்கூட நன்றாக இருக்கும். பெய்யக்கூடிய மழைத் தண்ணீர் மேடும் பள்ளமுமாக இருக்கின்ற பகுதிகளிலே தேங்காமல் ஓடைகள் மூலம், ஆறுகள் மூலம் ஓடி வீணாகின்றது. இப்படி ஓடிவிடுவதால் ஊற்று மட்டம் தாழ்ந்த நிலையிலே கீழே போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மட்டத்தை உயர்த்துவதற்காக செக் டாம்ஸ், தடுப்பு அணைகள், குளங்கள் இவைகளை ஏராளமாக அமைக்கலாம். இதை முக்கியமாகக் கவனித்து சமமில்லாத இடங்களிலேயெல்லாம் செக் டாம்ஸ், சிறு சிறு குட்டைகள் இவைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே ஒரு சில திட்டங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சாந்திப்பாடி என்னும் கிராமத்தில் சண்முகச் சித்தாறுக்கு குறுக்கே ஒரு குளம் அமைக்க எஸ்.எம்.ஐ.பி. டிபார்ட்மென்ட்டாரால் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு பரிசீலனை செய்யப்பட்டு அது சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளவேண்டும். இதுபோன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே இத்தகைய திட்டங்களை எடுத்துக் கொள்ள வழி வகைகள் செய்யவேண்டும். விவசாயத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் தொழில் துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தொழில்களை ஆரம்பிப்பதிலும் எங்கள் பகுதி போன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எங்களுடைய பகுதியில் வெங்கை கற்கள் என்கிற வெள்ளையான கற்கள் ஏராளமாக இருக்கிறது. கண்ணாடி செய்வதற்காக அதை வேறு பல இடங்களுக்கு எடுத்துச் செல்கிறார்கள். இன்னும் பல ஆண்டுகள் எடுத்தாலும் அந்தக் கற்கள் குறைவு இல்லாமல் இருக்கும் என்பதை உணர்ந்து சர்க்கார் தனியாகப் பரிசீலனை செய்து அங்கு ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை அமைக்க முடியுமா என்று கவனிக்க வேண்டும். இப்போது கரூருக்கு அருகில் புளியூர் என்ற இடத்தில் தனியார் துறையில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் பரிசீலித்து சர்க்கார் துறையிலும் இன்னும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்**: கனம் தலைவர் அவர்களே, இன்று விவாதத்திலே இருந்து கொண்டிருக்கின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை அறிமுகப்படுத்திய கனம் முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முடிவில் 600 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றும், நான்கா



வது திட்ட காலத்திலே 700 கோடி ரூபாய் செலவிட இருக்கிறோம் என்றும் கூறினார்கள். இந்த நேரத்திலே நாங்கள் ஒன்றை வருத்தத்தோடு சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இவர்களுக்கு எப்போதும் வருத்தத்தோடு சொல்லுகிற நிலைமைதான் இருக்கும், புகழுரை என்ற வார்த்தையையே சொல்வதில்லையே, இதற்கு என்ன காரணம் என்று நினைக்கலாம். உண்மையிலேயே இதுவரை செலவழிக்கப்பட்ட 600 கோடி ரூபாய் எங்கு செலவழிக்கப்பட்டது என்று பார்த்தால், தமிழகத்திலே பரவலாகச் செலவழிக்கப்பட்டதா என்று பார்த்தால் இல்லை. அந்தத் தொகை முழுவதும் ஏதோ வேண்டியவர்கள் உள்ள இடங்களில்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை தென்னாற்காடு மாவட்டத்திலே நெய்வேலி நிலக்கரித் திட்டம் அகப்பட்டுக் கொண்டு எங்களை மடக்குகிறது. அது வெற்றிகரமாகிக் கொண்டிருக்கிறதா அல்லது தோல்வி அடைந்துக் கொண்டிருக்கிறதா என்றுகூட எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. பல கோடி ரூபாய்களை நெய்வேலியிலே கொட்டிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நெய்வேலியிலே இதுவரை என்ன செய்திருக்கிறார்கள். முதல்திட்டம், இரண்டாவது திட்டம், மூன்றாவது திட்டம் முடிந்தும் தென்னாற்காடு ஜில்லாவைப் பொறுத்தமட்டில் வேறு எந்தத் திட்டத்தையும் நாங்கள் பார்க்க முடியவில்லை. 600 கோடி ரூபாய் தீர்ந்து போயிற்று; போகட்டும். வர இருக்கின்ற 700 கோடி ரூபாயிலாவது எங்களுக்கு ஒரு கோடியையாவது செலவழிக்க வழிவகை இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. ஆனால் தெருக்கோடியையும், ஏரிக் கோடியையும் தான் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும், அதற்கு முதலிடம் தரவேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. ராமசாமி ரெட்டியார் அவர்கள் கோதாவரி—கிருஷ்ணா நீரை அணைக்கட்டி தென்னகத்திற்குக் கொண்டு வர வேண்டும்; அப்போதுதான் வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் விவ்சாய உற்பத்தியைப் பெருக்கலாம் என்ற அபிப்பிராயத்தை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டு வரும்போதே குறிப்பிட்டார்கள். அது என்னவாயிற்று ? டில்லி மேலவையிலே எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் கடலிலே வீணாகின்ற கிருஷ்ணா—கோதாவரித் தண்ணீரை தமிழகத்திற்கு கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். அது என்ன ஆயிற்று ? இந்தத் திட்டத்தைக் காட்டுகிறார்கள்; யாரும் இதை வேண்டாமென்று சொல்லவில்லை. திட்டம் யாருக்கு பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டாமா ? திட்டம் யாருக்குப் பயன்படுகிறது என்று பார்க்கும்போது அது ஒரு சிலருக்குத்தான் பயன்படுகிறது. திட்டம் பரவலாக ஏழை எளிய மக்களுக்குப் பயன்படவில்லை என்ற கருத்தை நாங்கள் மட்டுமா சொல்லுகிறோம்; அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [6th August 1965

அவர்களை சொல்லிவிட்டார்கள். காலஞ் சென்ற நேரு அவர்கள் கூடச் சொல்லி விட்டுப் போய்விட்டார்கள். ஏழை எளிய மக்களுக்கு திட்டம் பயன்படவில்லை; பணக்காரர்களுக்குத்தான் திட்டம் பயன்படுகிறது. மூன்று திட்டங்கள் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படாத நிலைமையில் இருக்க வேண்டுமா என்று நாங்கள் கேட்கிறோம்.

நீங்கள் எந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும் அவைகளில் விவசாயம், மின்சாரம், நீர்ப்பாசனம், தொழில்கள், போக்குவரத்து ஆகிய தலைப்புகளிலேதான் வரும். இவற்றிலே விவசாயம், நீர்ப்பாசனம், தொழில்கள், மின்சாரம் ஆகிய நான்கும் முக்கியமானவை. இவற்றிலே எது எது நிறைவேறி இருக்கிறது? எதெதிலே வெற்றி கண்டிருக்கிறோம்? விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால் கிருஷ்ணா-கோதாவரி தண்ணீர் அவசியம், வந்தாக வேண்டும். நான்காவது திட்டத்திலும் அதைக் காணோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பித்த அந்தத் திட்டம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படும் இந்தச் சமயத்திலும் பேச்சு வார்த்தை நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அண்டை மாநில அரசாங்கத்தோடு பேசி ஒழுங்கு பண்ண வேண்டுமென்று அறிக்கையிலும் போட்டிருக்கிறார்கள். இந்தப் பதினைந்து வருஷ காலமாக என்ன பேசிக் கொண்டிருந்தார்கள்? எது எதிலோ ஒற்றுமை என்று கூறுகிறார்கள்; இதிலே ஒற்றுமை காட்ட வேண்டாமா? எதனால் ஆந்திர அரசாங்கம் கடலில் போய் விழுகிற தண்ணீரை தமிழகத்திற்குக் கொடுக்கும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை? இந்த 15 வருஷ காலமாக அதைப்பற்றி கிண்டலாக, வேடிக்கையாகப் பேசி விட்டுப் போய் விடுவதில் என்ன பயன்? இதுவரை நடந்த பேச்சுவார்த்தையின் முடிவு என்ன என்றாவது அமைச்சர் அவர்கள் விளக்கி விட்டால் நன்றாக இருக்கும்.

விவசாயத்தைப் பெருக்குவதற்காக கடன் கொடுக்கிறோம் அந்தக் கடனை காலத்தில் கொடுப்பதில்லை. அந்தக் கடனை எப்போது கொடுக்கிறார்கள் என்றால், சிறு சேமிப்புத் திட்டம், பிரைஸ் பாண்ட் ஆகியவற்றை ப்ளாக் லெவலில் கட்டாயப்படுத்தி வாங்குகின்ற வகையில், கிணற்றுக்காக 500 ரூபாய் கடன் கொடுக்கும்போது சிறு சேமிப்புத் திட்டத்திற்கோ அல்லது பிரைஸ் பாண்டுக்கோ 100 ரூபாய் தந்தால்தான் கடன் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். மோட்டார் பம்ப் செட்டுக்கு 1,500 ரூபாய் கடன் கொடுத்தால் 300 ரூபாயை அவற்றுக்காகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இப்படி, கொடுக்கின்ற கடன் குறைந்து விடுதால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் அவற்றைத் திருப்பிக் கொடுக்கும்போது அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கொடுக்கின்ற கடனை ஒழுங்காகக் கொடுக்க வேண்டும் இல்லையென்றால் கடனே கிடையாது என்றாவது சொல்லி விட வேண்டும். இந்தமாதிரி அவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.



6th August 1965] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

பயிர் வைக்கும்போது உரம் கேட்டால் நாற்று நட்டு, களை எடுத்து, அறுவடை செய்யும்போது உரம் வந்து சேருகிறது. அந்த உரத்தைக் கொண்டு போய் எங்கே போடுவது? இந்தமாதிரி பெரிய கொடுமையாக இருக்கிறது. டி.டி.சி. கூட்டத்தில் பூச்சி மருந்து கொடுக்க காலதாமதமாகிறது என்று எடுத்துச் சொன்னால் டைரக்டருக்கு எழுதியிருக்கிறோம் என்று பதில் சொல்லுகிறார்கள். இந்தக் காலதாமதங்கள் இல்லாமல் விவசாயத்திற்கு முதலிடம் தரும் வகையில் ஒழுங்காக காலாகாலத்தில் இவற்றைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நிலையில் விவசாய உற்பத்தி பெருகவில்லையென்று சொன்னால் எப்படி விவசாய உற்பத்தி பெருகும்? இதைத் தயவு செய்து சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிளாக் லெவலில் விவசாயக் கருவிகள் கொடுக்கிறார்கள். கொடுக்கப்படுகின்ற கருவிகள் பயன்படுத்தக் கூடிய முறையில் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. இதெல்லாம் அந்தப் பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர்களுக்கும் தெரியாமல் இல்லை. மேலூர் கலப்பை என்று தருகிறார்கள். அதை மணல் பகுதியில் இருப்பவர்கள் விரும்புகிறார்கள். எங்களுடைய பகுதி போன்ற களி மண் பகுதிகளிலும் அந்தக் கலப்பையை உபயோகிப்பதற்கு பத்துப் பதினைந்து ஆள் வைத்து அழுத்தினால் கூட அழுந்தவே அழுந்தாது. அப்படி போய்விட்டாலும் கட்டியாக பிடித்துக் 12-30 p.m.
கொள்ளும். மண்ணும் புரளாது மாடும் சிரமப்படவேண்டியிருக்கிறது, மனிதனும் மாடும் கஷ்டப்படவேண்டியதுதான். இதை எந்த இடத்தில் கொடுக்க வேண்டுமோ அங்கே கொண்டு போய் கொடுங்கள். வேண்டாதவர்களுக்கு இந்த மேலூர் கலப்பையை கொடுத்து திணிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை வாங்கினால்தான் கடன் கொடுப்பேன் என்று சொல்லாதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், மின்னல் வேகமாக போய் கொண்டிருந்தது, இப்போது ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது. மின்சார பட்ஜெட் வந்தபோது இதைப்பற்றி பேசியாகிவிட்டது. நான் சொன்னவைகளை எல்லாம் எந்த அளவுக்கு சீக்கிரமாக செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்தால் நல்லது.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் தென் ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக திண்டிவனம், வானூர் பகுதியில் எந்த விதமான பாசன வசதியும் பெருகவில்லை. வீடூர் நீர்தேக்கம், சாத்தனூர் நீர்தோக்கம், கிருஷ்ணா—கோதாவரி நீர்தேக்கம் இவைகளில் எல்லாமல் பாசன வசதி பெருகும் என்று சொல்லப்பட்டது. ஆனால் ஒன்றும் வரவில்லை. ஏதோ ஆய்வாளர் ஒருவர் சொல்லியிருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன், அதாவது மரக்காணத்திலிருந்து கடலூர் வரையிலும் பூமிக்கு அடியில் நீர் ஓட்டம் அதிகமாக இருக்கிறது, அதை எடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் என்று இருந்தது. சர்க்காருக்கு இந்த விவரம்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [6th August 1965

வந்ததோ என்னமோ தெரியவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்து, ஏரிகள், குளங்கள் இவற்றுக்கெல்லாம் பணம் செலவு செய்கிறோம், அதைப்போன்று இதற்கும் தனியாக கொஞ்சம் பணத்தை ஒதுக்கி இந்த ஊற்று நீர் தண்ணீரை எடுக்கமுடியுமா என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஊருக்கும் நாலைந்து கிணறுகளை ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு பிரயோசனமாய் இருக்கும் என்பது என் அபிப்பிராயம். அதை உங்களால் செய்ய முடியுமோ என்னவோ தெரியவில்லை, இதையாவது செய்து பாருங்கள் முடிந்தால் நல்லது.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில், போக்குவரத்து போக்குவரத்தாகவே இருக்கிறது. கடலூரில் ஹார்பர் கட்டுகிறார்கள். அதற்கு திருவக்கரை மலையிலிருந்து கல்லை எடுத்துச் செல்கிறார்கள். ஒவ்வொரு நாளும் லாரி லாரியாக எடுத்துச் செல்லுகிறார்கள். இதற்கு வீணாக 50 மைல் சுற்றிக்கொண்டு கடலூருக்கு லாரிகள் போய்க்கொண்டிருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கும் சங்கராபரணி என்ற ஆற்றில் ஒரு பாலம் உடனடியாக கட்டாவிட்டாலும், அதில் ஒரு 'பெட் டாம்' போட்டால் இதன் வழியாக 20, 25 மைல் லாபப்படும். இதன் மூலமாக நான்கு நடை அடித்துக் கொண்டிருக்கிற லாரிகள் எட்டு நடை அடிக்கலாம், வேலையும் சுருக்கமாக முடியும். இதைப்பற்றி நான் சொல்லிக்கொண்டேயிருக்கிறேன். இதுவரை யாரும் கேட்டதாக தெரியவில்லை. ஏதோ அமைச்சர் அவர்கள் காதிலும் இப்போதும் போட்டு வைக்கிறேன். இதற்கு செலவும் அதிகமாக ஆகாது. பாண்டிச்சேரி கிழக்கு எல்லை வரையிலும் சுற்றிக்கொண்டு போக வேண்டியதில்லை . . .

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்கள் 'அமைச்சர் அவர்களின் காதில் போட்டு வைக்கிறேன்' என்றெல்லாம் சொல்லாமல் இருப்பது நல்லது.

திரு. எ. கோ. **பாலகிருஷ்ணன்:** சரி. போக்குவரத்தில், முன்னால் டிஸ்ட்ரிக்ட் போர்ட் காலத்திய ரோடுகள் எல்லாம் இப்போது நிலமாக இருக்கிறதா அல்லது ரோடாக இருக்கிறதா என்பதே தெரியவில்லை. கந்தாடிலிருந்து நடுக்குப்பம் வரையில் ரோட் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் ரோட்டை காணவில்லை. அதேபோன்று, ஆலங்குப்பத்திலிருந்து ஆவணிப்பூர் வரை ரோடு இருப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் ரோட்டையே காணேம். கீழ்புத்தூர்புட்டிலிருந்து காட்டாராம்பாக்கம் வரையிலும் ரோடு இருப்பதாக சொல்லுகிறார்கள், ரோட்டை காண முடியவில்லை. இந்தமாதிரி எத்தனையோ இருக்கிறது. இப்போது அவையெல்லாம் ஞாபகத்திற்கு வரவில்லை. எங்களுக்கு உடனடியாக பதில் சொல்லுகின்றவர் கலெக்டர் அவர்கள்தான். அவர்களிடத்தில் இதைப்பற்றி கேட்டால் அதிகாரிகளிடத்தில் கேட்டிருக்கிறேன், இன்னும் பதில் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு



6th August 1965] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

வருடம் தான் இருக்கிறது. இந்த ஒரு வருடத்திற்குள் என்ன செய்யப்போகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நான் சொன்ன கருத்துக்களில் எதையாவது சேர்க்க முடியுமென்றால் அவைகளை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நேற்று கூட கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்னார்கள். நகரங்களில் தொழில் பெருகி வந்து அதன் மூலம் கிராமங்களுக்கு மெல்ல மெல்ல தொழில்களை கொண்டு போக முடியும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, கச்சாப்பொருட்கள் எந்தெந்த இடத்தில் கிடைக்கிறதோ அதையும் பார்த்து தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவே நான் சொல்லப்போவதையும் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். கடப்பேரிகுப்பம் பகுதியில் 74 லட்சம் டண் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது என்றும், ஆனால் அங்கு சிமிண்ட் தொழிற்சாலை கட்ட முடியாது என்றும் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது சொன்னார்கள். அதில் பெரிய சிமிண்ட் தொழிற்சாலை அமைக்க முடியாவிட்டாலும் கூட, அந்த சுண்ணாம்புக்கற்களை எடுத்து, சிறிய சிறிய அளவில், ஏதேனும் தொழிற்சாலை அமைத்து, இது ஒரு தினுசான சிமிண்ட் என்று சொல்லி இதை உபயோகியுங்கள் என்று சொல்லிவிட்டால் அந்தப் பகுதியிலிருக்கும் மக்களுக்கு ஓரளவுக்கு திருப்தியாக இருக்கும், அது மட்டுமல்ல, உப்புவேலூர் காட்டிலும், திருவக்கரையிலும் ஒருவித வெள்ளைக்களிமண் ஏராளமாக 4 மில்லியன் டன் அளவு கிடைக்கிறது. நான் சின்னக் குழந்தையாக இருந்த நேரத்திலிருந்து பார்த்திருக்கிறேன். அங்கிருந்து லாரி லாரியாக இந்த வெள்ளைக் களிமண்ணை எடுத்துக் கொண்டு போய் கொண்டிருக்கிறார்கள். எங்கே கொண்டு போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்த வெள்ளைக் களிமண்ணை உபயோகித்து, ஒரு பீங்கான் தொழிற்சாலையை திண்டிவனத்திலோ அல்லது அதிகாரிகளுக்கு வசதியாக இருக்கக்கூடிய இடத்தில் எங்காவது ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பீங்கான் மட்டுமல்ல, மின்சாரத்திற்கு வேண்டிய சில கருவிகளையும் இதில் செய்யலாம் என்று சொல்கிறார்கள். வேண்டிய அளவுக்கு இந்த வெள்ளைக் களிமண் இங்கே கிடைக்கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனித்து இந்த ஆள் ஏதோ வெள்ளைக்களிமண், வெள்ளைக்கணிமண் என்று தினசரி சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறாரே என்னவென்றுதான் பார்ப்போம் என்று நினைத்தாவது—இதைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு அதிகாரிகளிடத்தில் சொல்ல வேண்டும் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மரக்காணம் பகுதியில் கடற்கரை இருக்கிறது. அந்த கடற்கரைப் பகுதியிலிருந்து கோட்டக்குப்பம் வரையிலும், 30, 35 மைல் நீளம் ஊர் இருக்கிறது. இந்தப் பகுதியில் எந்த விதமான விவசாயமும் கிடையாது. இதுவரைக்கும் அந்த இடத்தில் எந்தவிதமான தொழிலும் கிடையாது. அந்தப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். திண்டிவனத்திலிருந்து ஏதாவது அரிசி போனால் தான் அவர்களுக்கு ஜீவனம். இவர்கள் வாழ்க்கையை நடத்திச் செல்கிற அளவுக்கு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இவர்களும் இந்த நாட்டில் மனிதர்களாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த காருண்ய சர்க்கார் பெரிய மனது வைத்து, அங்கு ஏதாவது ஒரு சிறிய தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீன் சம்பந்தமாக, மீன்பிடித்து, அதை கருவாடு ஆக்குவது, மீனை பதப்படுத்தி அதை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, இன்று காலையில் கூட அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி தெரிவித்தார்கள், இவ்விதம் மீனைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற ஒரு தொழிலை ஏற்படுத்தலாம். இதன் மூலம் அங்குள்ள மக்கள் ஓரளவுக்கு வாழ்க்கையை நடத்திக் கொள்ள முடியும். இதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நானும் இந்த சபையில் நான்கு வருடங்களாக பல கோரிக்கைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதில் எதையாவது நிறைவேற்றினால் ஏதோ சொன்னதை நிறைவேற்றினார்கள் என்று நானும் நினைக்க முடியும், அங்குள்ள மக்களும் ஏதோ செய்திருக்கிறார்கள் என்று திருப்தி அடைவார்கள். நான் சொன்னவற்றை அத்தனையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும் ஓரளவுக்காவது, மூன்றில் ஒரு பங்கு, அல்லது நான்கில் ஒரு பங்கு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்தால், அடுத்த ஆண்டிலாவது இந்த அமைச்சரவையைப் போற்றுவதற்குரிய வாய்ப்பும், வசதியும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதுவரை பேசுவதற்கு அனுமதி அளித்த துணைச் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான்காவது திட்டத்தினுடைய டிராஃப்ட் திட்டத்தை நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறார்கள். இதனுடைய நோக்கங்களை எல்லாம் பார்த்து எல்லோரும் பெருமைப்படக்கூடிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தால், இதிலுள்ள விஷயங்களை எல்லாம் பார்த்தால், மனதில் என்ன தோன்றுகிறது என்றால், ஏதோ இரவு 9 மணியிலிருந்து காலை 6 மணி வரை ராமாயணத்தைப் படித்தால், அதிலுள்ள



V211, 31 'N65
N65 · 31 · 3



என்னென்ன கட்டங்கள் எல்லாம் நம் கண்முன்னே வருகிறதோ, அது போன்று இந்தத் திட்டத்திலுள்ள விஷயங்கள் எல்லாம் பெரிய விஸ்வ ரூப தரிசனம் போன்று தோன்றுகிறது. நமது நாட்டில் ஒவ்வொரு துறையில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிகளைப் பார்க்கும் போது மனதிற்கு பெரும் சந்தோஷம் ஏற்படுகிறது, பெரிய பிரமையும் ஏற்படுகிறது. பிரமை எதற்காக ஏற்படும் என்று பின்னால் சொல்லுகிறேன். இந்த நான்காவது திட்டத்தை எப்படி அமலுக்குக் கொண்டுவருவது என்று பார்த்தால், சென்ற மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் எப்படி அமலுக்கு வந்ததோ அந்த மாதிரியே இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமலுக்கு வந்தால் நாட்டில் வளர்ச்சி ஏற்படுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. என்ன திட்டம் இருந்தாலும் கூட மக்கள் தான் அந்தத் திட்டத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். மக்கள் தான் அந்தத் திட்டத்தை நல்ல முறையில் அறிந்து கொண்டு, மக்கள் பங்கைக் கொடுத்து, மக்கள் ஒத்தாசை கொடுத்து நிறைவேற்றவேண்டும். ஆனால் பெரிய திட்டம் வருகிற போது, பெரிய மின்சாரத் திட்டமோ, அல்லது பெரிய தொழிலோ ஏற்படுகிற போது, மக்களுடைய முயற்சி ஜாஸ்தி இருக்காது. விஞ்ஞானிகளின், பெரிய நிபுணர்களின், முயற்சி தான் ஜாஸ்தி இருக்கும். கிராம அளவில், சின்ன வட்டாரத்தில் கூட திட்டம் என்று வரும்போது, மக்களுடைய ஒத்தாசை இல்லாமல், மக்களுடைய முழு ஊக்கமும் இல்லாமல் திட்டம் நல்ல முறையில் அமலுக்கு வராது. நாட்டிலே உணவு உற்பத்தி சரியான முறையில் இல்லை. அதே மாதிரி பல துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டுமென்று கிராமப் புறங்களில் திட்டமிடும்போது, மக்களுக்குத் திட்டம் என்றால் என்ன என்றே சரியான முறையில் தெரியாமல் இருந்து, மக்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க முடியாமல் சர்க்கார் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்களிடமிருந்து ஒத்துழைப்பைக் காணமுடியாமல், திட்டமே தோல்வி அடையும் அளவுக்குப் போய்விடும். சமுதாய நலத் திட்டத்தை எடுத்துப் பார்த்தால், விவசாயத்திலே, தொழிலிலே, மற்ற துறைகளிலே எந்த விதத்தில் ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்ற முறையில் அமைந்துள்ள நல்ல முறையில் இருக்கும் திட்டம், மக்களுடைய ஊக்கமும் ஒத்துழைப்பும் இல்லாமல் தோல்வி அடைந்த மாதிரித் தான் அந்தத் திட்டம். இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் கிராமப்புறங்களில் இருக்கிறது. பொதுவாகப் பார்த்தால் கிராமப்புறங்களில் முன்னேற்றம் இல்லாமல் இல்லை. நல்ல முறையில் முன்னேற்றம் இருக்கத் தான் செய்கிறது. விவசாயம் முன்பு இருந்த மாதிரி இல்லாமல் முன்னேற்றம் இருக்கிறது. மக்கள் உணர்ச்சி ஜாஸ்தி இல்லாமல் கிராமப் புறங்களில் இருக்கிற மக்களுக்கு முன்னேற்றம் வந்திருக்கிறதா என்று கூட சந்தேகம் ஏற்படும். கிராம மக்களுக்கு உணவு, உடை, வீடு, சுகாதாரம் இப்படிப்பட்ட நான்கு அல்லது ஐந்து விஷயங்கள் தான் முக்கியமானது. இந்த சென்னையில் உணவு

64917

[திரு. எஸ். நஞ்சுண்டராவ்] [6th August 1965

இல்லை என்று சொன்னால், ரேஷன் ஷாப்பிலோ அல்லது ஃபேர் ப்ரைஸ் ஷாப்பிலோ உணவு இல்லை என்று சொன்னால் உடனே சத்தியாக்கிரகம் செய்யும் அளவுக்கு அவர்கள் போகலாம். கிராமப்புறங்களில் உணவு இல்லை என்று சொன்னால் ஒன்றுமில்லாமல் பட்டினியாகப் படுக்கத் தான் போவார்கள். அவர்களுக்கு வேலை இருந்தால் தான் காசு கிடைக்கும். மழை பெய்தால் தான் வேலை கிடைக்கும். மழை பெய்யவில்லை என்றால் யாரை குறை சொல்வது என்று கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் ஒரு வேளை பட்டினியாகப் படுக்கும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை எல்லா கிராம மக்களுக்கும் தெரியும். அவர்கள் அரசாங்கத்தின் மீது குறை சொல்ல மாட்டார்கள். இப்படி மழை பெய்யாத பஞ்ச நிலைமையில் எப்படி நிவாரண வேலை செய்வது என்று ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை, இப்படிப்பட்ட விஷயங்களை, திட்டத்தைப் பற்றிப் பேசும்போது சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் கூட கிராமத்தில், கிராம சமூகம் நல்ல முறையில் எப்படி இருக்கவேண்டும், எப்படித் திட்டமிடவேண்டுமென்று யோசிக்கும்போது, 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு யார் எந்தத் தொழில் கேட்டாலும் கொடுக்கக் கூடிய முறையில் சமூக அமைப்பு இருக்கவேண்டும். இன்றைக்கு வேலை இல்லை, கூலி வேலை கூட இல்லை என்ற நிலை இல்லாமல் இருக்கக்கூடிய முறையில் அமைக்கவேண்டும். நான்காவது திட்டத்திலோ அல்லது அதற்குப் பிறகு வருகிற திட்டத்திலோ, எப்படியாவது 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்ற முறையில், வேலை இல்லை என்ற புகார் இல்லாமல், யார் யார் வேலை செய்யத் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கவேண்டும், அதற்கான திட்டம் இருக்கவேண்டும். யாராவது வேலை செய்யவேண்டாமென்று சொல்லியிருக்கிறார்களா என்று யாரும் கேட்கமாட்டார்கள். வேலை செய்வது என்றால், என்ன வேலை செய்வது? மழை பெய்கிறது வட்டாரத்தில் வருஷத்தில் மூன்று மாதம் வேலை இருக்கும், பாக்கி ஒன்பது மாதம் வேலை இருக்காது. தஞ்சை, சோமவந்தான் போன்ற பகுதிகளில் விவசாயம் செய்யப்படும் காலத்தில் ஆள் கிடைக்கவில்லையே என்ற நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய வேடசந்தூரிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே போய், அங்கு இருக்கிற நிலச்சுவாந்தார்களுக்கு வேலை செய்து, ரொம்பக் கஷ்டப்பட்டு, களை எடுக்கப் போய் குடியிருக்க இடம் இல்லாமல் ஏதோ சாப்பிட்டு காலரா நோயோடு எங்கள் பகுதிக்கு வந்து விடுகிறார்கள். யாருக்கோ உதவி செய்யப்போய் கஷ்டப்படுகிறவர்களை எப்படிச் சமாளிப்பது. எப்படி கூலி வேலை கொடுப்பது என்ற திட்டம் தான் என் தொகுதியில் உள்ளவர்கள் போன்ற மக்களுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. பெரிய நான்காவது திட்டத்தைப் பற்றி யோசிக்கும்போது என் தொகுதி பற்றி யோசிக்காமல் இருக்க முடியாது: என் தொகுதியில் பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. 1½ கோடி ரூபாய் செலவில் மின்சாரத் திட்டங்கள் நடந்திருந்தாலும் மழை பெய்யாமல் பஞ்ச நிலைமை



6th August 1965] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

இருக்கிறது. அதற்கு யார் பேரிலும் குறை சொல்லத் தயாராக இல்லை. அதற்கு சர்க்கார் பேரில் குறை சொல்ல மாட்டேன். இயற்கையின் பேரில் தான் குறை சொல்லவேண்டும். என் தொகுதி போன்ற பிற்போக்கு வட்டாரங்களை எப்படி முன்னேற்றலாம என்று யோசிக்கும்போது, அந்தப் பகுதியில் விவசாயம் கூட சரியாகச் செய்ய முடியாது என்ற முறையில், கால்நடை இலாகா அதிகாரிகள் வந்து மாடு வளர்ப்பு தான் அந்தப் பகுதிக்குச் சிறந்தது, காங்கேயத்தை விட நல்ல முறையில் அங்கே அமலுக்குக் கொண்டுவரலாம், மேய்ச்சல் தரைகள் நிறைய இருக்கின்றன, ஆகவே மாடு வளர்ப்பு அங்கே கொண்டு வரலாம், கோழி வளர்ப்பு செய்யலாம் என்று சொல்லுகிறார்களே தவிர கொண்டு வரவில்லை. நான்காவது திட்டத்தில் இந்தத் திட்டங்கள் வரும் என்று நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் நீர்ப்பாசன வாய்ப்புகள் அதிகம் இல்லை. குடவனாறுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. எப்படியாவது மராமத்து அமைச்சர் அவர்கள் கருணை காட்டி, அதை நான்காவது திட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களைப் பொறுத்த வரையில் கரூர் சிமெண்ட் ஃபாக்டரிக்கு வேடசந்தூர் வட்டாரத்திலிருந்து சுண்ணாம்புக்கல் போகிறது. அந்தப் பகுதியில் சுண்ணாம்புக்கல் இருக்கும் வட்டாரம் நிறைய இருக்கிறது. இன்னொரு ஃபாக்டரியை அந்தப் பகுதியில் ஆரம்பித்தால் அந்த வட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்ல முறையில் இருக்கும் என்று நம்புகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் பல வேலைகள் நல்ல முறையில் நடந்தாலும் கூட, என் தொகுதியைப் பொறுத்த வரையில் வீடு கட்டும் திட்டம், கூட்டுறவு முறையிலோ எப்படியோ, கிராமப்புறங்களில் எந்த விதத்திலும் முன்னேற்றத்தைக்காண முடியாது. கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில் வீடு கட்டும் திட்டம் என்பது பெரும் கனவாகத் தான் இருக்கிறது. எப்படியாவது கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லும்போது என்னால் கூட அதற்கு யோசனை சொல்ல முடியாது. வெறும் கையில் என்ன யோசனை சொல்வது? சென்னையில் வந்தால் இங்கே இருக்கும் மக்களுக்கே இந்தத் திட்டத்தை நடத்த முடியவில்லை. கிராம மக்களுக்கு நான்காவது திட்டத்தில் முடியுமோ, ஐந்தாவது திட்டத்தில் முடியுமோ, அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது, அரசாங்கம் எப்படி வழி காட்டுகிறதோ, எளிய மக்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு கிராமப்புறங்களில் இருக்கிற கல்வித் திட்டத்தைப் பற்றி ஒன்றிரண்டு அபிப்பிராயங்கள் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [6th August 1965

என் வட்டாரத்தில் முன்பு ஒரே ஒரு ஹைஸ்கூல் இருந்தது வேடசந்தூரில். இப்போது மேலும் ஆறு உயர்நிலை பள்ளிகள் ஏற்பட்டு கல்வி வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கல்வி வசதி ஏற்பட்ட பிறகு ஹைஸ்கூல்களில் படித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் எப்போதும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுக்குப் போகும் வாய்ப்பு இருக்கிறதே தவிர அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. படித்த பையன்கள் விவசாய வேலைக்கும் போக முடியாமல், மற்ற வேலைக்கும் போக முடியாமல் இருப்பதை எப்படித் தவிர்க்கவேண்டுமென்று அரசாங்கம் தான் வழி சொல்ல வேண்டும். இப்போது இருக்கிற முறையில் 10-வது படித்தவன் கூட நெய்வேலி எங்கு இருக்கிறது என்று கேட்டால் சொல்லத் தெரியாமல் இருக்கிறான். புத்தகத்தில் படித்த விஷயத்தைத் தான் சொல்ல முடிகிறதே தவிர வேறு ஏதும் தெரியாது இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் அய்யலூர் என்று ஒரு வட்டாரம் இருக்கிறது. அது ஒரு மலைப் பிரதேசம். அங்கே மரங்கள் மற்றவைகள் வளர்ச்சி எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால், அங்கு இருக்கிற மக்கள் எல்லாம் இதுவரையில் பழனி கோவிலைக் கூட பார்த்தது இல்லை. எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த பையன்களை "தமிழ் நாட்டில் கடலைப் பார்த்திருக்கிறாயா" என்று கேட்டால், "இல்லை" என்று தான் சொல்லுகிறார்கள். பழனி கோவிலைக் கூட பார்த்தது கிடையாது எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த பையன்கள். பாரத தரிசனம், உலக தரிசனம் என்றெல்லாம் சொல்லுகிறோம். நான் கூட பாரத தரிசனம் கண்டதில்லை. நான் கூட டெல்லிக்கு ஒரு தடவை தான் போயிருக்கிறேன். இந்தியாவில் மற்ற இடங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. பூகோள பாடத்தில் படித்தது தான். சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கூட இந்தியாவில் என்ன இருக்கிறது, இமயமலை எங்கே இருக்கிறது, எப்படி இருக்கிறது என்று கூடத் தெரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ரெவல்யூஷனரி திட்டமாக நான் ஒன்றும் சொல்லவில்லை. எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த பையன்களுக்கு எப்படியாவது தமிழ் நாட்டு தரிசனம் காண்பிக்கவேண்டும். 10-வது படித்த பையன்களுக்கு தமிழ் நாட்டு தரிசனம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்பேர்ப்பட்ட கல்வித் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காந்திஜி நினைத்த ராம ராஜ்யம் ஏற்படவேண்டும். வேறு ஏதோ சொப்பனத்தில் காண்பதை நான் சொல்லவில்லை. ராம ராஜ்யத்தில் சர்வ சுகங்களும் இருந்து எப்படி பாலும் தேனும் ஓடிக்கொண்டிருந்ததோ, அதேமாதிரி எல்லாவிதமான சுகம், எல்லாவிதமான செழிப்பு நாட்டிலே ஏற்படவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக



6th August 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

அமுல் நடத்தி, நான்காவது திட்டத்தைப்பற்றி நாம் இப்பொழுது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சென்னை மாநிலம் ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றுவதிலே அபார சாதனைகள் புரிந்திருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாநிலங்கள் நம்மைப் பார்த்து பொறாமை கொள்ளும் அளவிலே நாம் முன்னேறி வருகிறோம். 'அட்வான்ஸ்டு ஸ்டேட்'—முன்னேறியிருக்கிற மாகாணம் என்ற ஒரு பெருமையை நாம் அடைந்திருக்கிறோம். இதற்கு அடிப்படைக் காரணம் நமது மாநிலத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் திட்டமிட்ட அளவுக்கு மேலும் நிறைவேற்றிக் கொண்டுவருவதுதான் என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், நமது அமைச்சர் அவையை மாநில மக்கள் முதல் முதலில் பாராட்ட வேண்டும். சுறுசுறுப்பு மிக்க அமைச்சர்கள், மதிநுட்பம் மிக்க மந்திரிகள் இருப்பதினால் தான் இந்தத் திட்டங்களெல்லாம் மிகவும் நல்ல முறையில் நமது மகாணத்தில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு நாம் திட்டமிட்ட ரூ. 600 கோடியைவிட அதிகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 750 கோடிக்கு நாம் திட்டமிட்டிருக்கிறோம். இந்தத் திட்டம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட புத்தகத் ஒருவர் ராமாயணம் என்று சொன்னார். அது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு சாஸனம் என்று தான் நான் சொல்லுகிறேன். தமிழ் நாட்டு மக்களுக்கு மதிப்பு மிக்க அமைச்சர் அவை கொடுத்த பொன் ஏடு, நல்ல முன்னேற்றத்திற்கான வழிகாட்டி என்று தான் நான் கூறமுடியும்.

இது விஷயமாகச் சில கருத்துக்களை நான் இந்த சமயத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டங்கள், கடந்த மூன்று ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருப்பதும், இப்பொழுது தீட்டப்பட்டிருக்கிற திட்டமும், பெரும்பாலும் பார்த்தால், பெரும்பாலான தொகையானது நகரங்களுடைய முன்னேற்றத்திற்காகத்தான் இருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள் சொன்னது போல இந்தியா முன்னேறவேண்டுமென்று சொன்னால் கிராமங்கள் முன்னேறவேண்டும். அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தைப் பார்த்தால், கிராமங்களை எந்த அளவுக்கு கவனித்து வருகிறோம் என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஏறக்குறைய 10 சதவிகிதம்தான் இந்தத் திட்டங்களிலே கிராமப் புறங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் காணலாம். கிராம ஜனத்தொகை ஏறக்குறைய 80 சதவிகிதம். நமது மாநிலத்தில் 10 சதவிகித தொகை மாத்திரம் கிராமப்புற முன்னேற்றத்திற்கு ஒதுக்கி விட்டு, மீதித் தொகையெல்லாம் நகர்புற முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டும். இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வியைப்பற்றி நான் சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கல்வியானது நமது மாநிலத்தில் மிகவும் வியக்கத்தக்க அளவிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறது. தமிழ் நாட்டில் இன்று ஏறக்குறைய 30,000 ஆரம்பப் பாடசாலைகளும், 2,000 உயர்நிலைப் பள்ளிகளும், 120 கல்லூரிகளும் ஆரம்பிக்கப்பட்டு கல்வித் துறையில் நாம் வியக்கத்தக்க அளவில் முன்னேறிக் கொண்டுவருகிறோம். ஏறக்குறைய 30 லட்சம் மாணுக்கர்கள் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கிறார்கள், 5 லட்சம் மாணுக்கர்கள் செகண்டரி பள்ளிகளில் படிக்கிறார்கள், 2 லட்சம் மாணுக்கர்கள் கல்லூரிகளில் படிக்கிறார்கள் என்ற ஒரு நிலையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். உதாரணமாக நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் என்னுடைய மாவட்டத்தில் நீலகிரியில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இன்று 18 ஆண்டுகளுக்குப் பிறகு, சுதந்திரம் அடைந்த பிறகு ஐந்தாண்டுத் திட்டங்களைத் திட்டியதின் விளைவாக என்னுடைய மாவட்டத்தில் இன்று 40-க்கும் மேல் ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இந்த முன்னேற்றம் மெச்சத்தக்கது என்றாலும், ஆரம்பப் பள்ளிகளை நாம் எப்படி கவனித்து வருகிறோம் என்ற ஒரு நிலையைச் சற்று அமைச்சர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கல்வி அறிவு இல்லாத ஒரு நாடு எவ்வளவு தான் பொருளாதாரத்தில் முன்னேறினாலும், அதை முன்னேற்றம் அடைந்த நாடாகக் கருத முடியாது. ஆனதினாலே கல்வியைப் பொறுத்தவரையிலே நாம் இளம் குழந்தைகளுக்கு எவ்வித வசதிகளை அளித்துகொண்டு வருகிறோம் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பப் பள்ளிகள் ஹையர் எலிமெண்டரி பள்ளிகள் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 8.25 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகளின் கட்டடங்கள் குழந்தைகள் இருப்பதற்கே லாயக்கற்றதாக இருக்கின்றன. மாடுகளை அடைக்கும் கொட்டகைகள் போல பல இடங்களில் கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. அபாயகரமான கட்டங்களில் கூட ஆரம்பப் பள்ளிகள் இன்றைய தினம் இயங்கி வருகின்றன. இந்த நிலையை மாற்றி கல்விக்கு அடிப்படையாக இருக்கிற ஆரம்பக் கல்விப் பள்ளிகளை நல்ல சூழ்நிலை இருக்கும் இடங்களில் அமைத்துவிட்டால், பிற்கால குழந்தைகள், வருங்கால பிரஜைகள், இந்த நாட்டை ஆளக்கூடிய வருங்கால மன்னர்கள், நல்லவிதமாக உருவாக்கப்படுவார்கள். ஆகவே, ஆரம்பப்பள்ளிகளில் நாம் அதிகமாக அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உபாத்தியாயர்களைப்பற்றிச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று நம் நாட்டிலுள்ள நிலைமை என்ன? ஆரம்பப்பள்ளி ஆசிரியர் முதற்கொண்டு கல்லூரி ஆசிரியர் வரை 'தேர்டு கிளாஸில்' பாஸ் செய்தவர்கள் தான் வாத்தியார் தேர்ந்தெடுக்கிறார்கள். முதல் வகுப்பில் தேறியவர்கள் என்ஜினியரிங் அல்லது எம்.பி.பி. எஸ். கோர்ஸ் படித்துவிட்டு



என்ஜினியர், டாக்டர் தொழில்களுக்குப் போய்விடுகிறார்கள். யாரும், எங்கும் வேண்டாத நிலையிலே, தீண்டப்படாதவர்கள் போல் கடைசியாக வந்து ஆசிரியர் வேலையில் சேருகிறார்கள். இந்த ஒரு நிலைமையைத் தவிர்ப்பதற்கு இந்தத் திட்டத்தில் ஒன்றும் இல்லை. உபாத்தியாயர் தொழிலைக் கவர்ச்சி மிக்க தொழிலாக ஏற்படுத்தவேண்டும். கவர்ச்சி மிக்க தொழிலாக ஆசிரியர் தொழில் இருக்கவேண்டுமென்றால், அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளில் உபாத்தியாயர் தொழிலுக்குத் தான் பெரிய அறிவாளிகள் வருகிறார்கள். அந்த ஒரு நிலையை நாம் இங்கே ஏற்படுத்தவேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆசிரியர்களுடைய சம்பளத்தை இப்பொழுது இருப்பதைவிட 1½ மடங்காவது நாம் உயர்த்தாவிட்டால், கல்வியைப் பொறுத்தவரையில் தரத்தை உயர்த்த முடியாது என்ற ஒரு அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் சற்று கவனிக்கவேண்டும்.

இப்பொழுது நாம் செகண்டரி எஜுகேஷன் அளவிலே, அதாவது 11-வது வரையிலே இலவசமாகக் கல்வி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டிலும், வெளி நாடுகளிலிருந்தும் கூட இதைப் பாராட்டுகிறார்கள். யுனிவர்சிடி எஜுகேஷன் ரொம்ப குறைவான சதவிகித மாணவர்கள் தான் படிக்கிறார்கள். யுனிவர்சிடி எஜுகேஷன் அளவுக்கும் நாம் இலவசமாகக் கல்வி அளித்துவிட்டால், நம்முடைய மாநிலத்தில் கல்வியையே இலவசமாக அளித்திருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இதற்கு அதிகமாகக் கூட செலவாகாது என்பதையும் நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு சைனிக் ஸ்கூல் ஆரம்பிப்பதற்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய நீலகிரி மாவட்டத்தைப்பற்றி அடிக்கடி கேட்கிறோம். தொழில் அமைச்சரைக் கேட்கும் சமயத்தில் நீலகிரி தொழில் மயமாக முடியாது, அங்கு ஒன்றும் வசதி இல்லை என்று சொல்கிறார். அந்த ஒரு நிலையில் இந்த சைனிக் ஸ்கூலை நீலகிரி மாவட்டத்தில் ஏற்படுத்திக்கொடுத்தால் நாங்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்போம்.

தொழில் துறையில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றத்தை அடைந் 1 00 p.m.
திருக்கிறது. சென்னையிலே புறப்பட்டு, கன்னியாகுமரி வரை பார்க்கும்போது, எல்லா இடங்களிலும், பல பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் காண்கிறோம். அந்தப் பெருமை தமிழ் நாட்டு அமைச்சரவைக்கு, முக்கியமாக கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு, உரியதாகும். அவர்களைப் பெறுமைப் படுத்த நாடே கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைத் தொழில் மயம் ஆக்கிய கனம் தொழில் அமைச்சருக்கு தமிழ் மக்கள் என்றென்றும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [6th August 1965

புள்ளி விவரங்களைப் பற்றி கனம் உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரூ. 3,000 கோடி வரி போடுகிறோம் என்றால், தலைக்கு ரூ. 750 ஆகிறது என்று சொன்னார்கள். சாதாரண அரித்மெடிக் படித்தாலே போதும், விசேஷ அல்ஜீப்ரா எல்லாம் படிக்க வேண்டியதில்லை—சாதாரண அரித்மெடிக் பாடி, 3,000 கோடி என்றால், 40 கோடி மக்களுக்கு தலைக்கு ரூ. 75 தான் வரும் ஐந்து வருஷத்திற்கு. ஒரு வருஷத்திற்கு ரூ. 15 ஆகிறது. ஒரு மாதத்திற்கு 1¼ ரூபாய் ஆகிறது. ஆகவே, இப்படி புள்ளி விவரங்களைக் குழப்புவதில் ஒரு பிரயோசனமும் இல்லை.

விவசாயத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லிவிட்டு என் உரையை முடிக்கிறேன்.

"Any significant impact on living standards will therefore be possible only if production in Agriculture sector is considerably stepped up."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியை அதிகமாக்கினால் ஒழிய, வாழ்க்கைத்தரம் உயராது என்று கச்சிதமாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால், நாம் விவசாய உற்பத்தியை உயர்த்த என்ன செய்தோம்? அதில் நாம் தோல்விதான் அடைந்திருக்கிறோம். அதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இன்றைக்கு விவாசயம் பற்றி புள்ளிவிவரங்கள் சேகரிக்கவேண்டும் என்றால், சர்க்கார் யாரை நம்பியிருக்கிறார்கள்? கிராம மட்டத்திலேயிருந்து புள்ளிவிரங்கள் வந்தாக வேண்டும். அங்கே சேகரிப்பவர், கிராம கணக்கப் பிள்ளை. அவர்கள் கொடுக்கும் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு, சர்க்கார் கணக்குகளைத் தயாரிக்கிறார்கள். அது அவ்வளவு சரியானது அல்ல என்பதற்கு ஒரு உதாரணம் கொடுக்க முடியும். சென்ற செப்டெம்பர் மாதம் உணவுப் பிரச்சினை தலைதூக்கியபோது, தஞ்சாவூரில் இருக்கும் கணக்கப் பிள்ளைகள் என்ன கணக்குக் கொடுத்தார்கள்? குறுவை சாகுபடியில் 40 லட்சம் டன் விளையப் போகிறது. நிலைமையை சமாளித்துவிடலாம், என்று அவர்கள் சொன்னதன் காரணமாக உணவுப் பிரச்சினை மோசமாகியது. அதன் பிறகு கனம் உணவு அமைச்சரும், கனம் தொழில் அமைச்சரும் நேரடியாகச் சென்று உண்மைநிலையை அறிந்தார்கள். ஒவ்வொரு வட்டமாகக் கணக்கெடுத்துப் பார்த்து, மொத்தத்தில் ஏழு லட்சம் டன்கள்தான் கிடைக்கும் என்று கண்டறிந்து நடவடிக்கை எடுத்தார்கள். அந்த நிலையில், கணக்கப் பிள்ளைகளுடைய புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு நாம் நம்முடைய கணக்குகளைப் போட்டால், பின்னால் தோல்விதான் அடைவோம்.

அடுத்தபடியாக யாரை நம்புகிறோம் என்று பார்த்தால், பஞ்சாயத்து யூனியன்களை. பஞ்சாயத்து யூனியன்கள் எவ்வளவு தூரம் வேலை செய்கின்றன என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். பஞ்சாயத்து அளவிலோ அல்லது பஞ்சாயத்து யூனியன் அளவிலோ ஒன்றும் நடப்பதில்லை. தொகைகள் வேறு வகைகளில் செலவாகின்றன. ஆகவே, இந்த நிலையை அமைச்சர் அவர்கள்



6th August 1965] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

மறுபரிசீலனை செய்யவேண்டும். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவராவிட்டால், நாடு செழிக்காது. இதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும், இரண்டு பேர்களும் இருக்கிறார்கள். விவசாய அமைச்சரே ஹோம் மினிஸ்டராகவும் இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, நமது திட்டங்கள் விவசாயத்தில் வெற்றிபெற, தனியாக ஒரு அமைச்சர் விவசாயத் திட்டங்கள் வெற்றிபெற, தனியாக ஒரு அமைச்சர் இலாகா விஷயங்கள் பூராவையும் கவனித்துத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* புலவர் கா. கோவிந்தன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சபைமுன் வைக்கப்பட்டிருக்கிற நான்காவது திட்டத்தைப் பற்றி இப்பொழுது நடைபெறுகின்ற விவாதத்தில் நானும் கலந்துகொண்டு பேசுகின்ற இந்த நேரத்திலே, கடந்த மூன்று திட்டங்களிலும் நடந்திருக்கிற நிகழ்ச்சிகளைக் குறித்து மறு ஆய்வு செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த மூன்று திட்டங்களுக்காகவும் ஏறத்தாழ 600 கோடி ரூபாய் அளவுக்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செலவிடப் பட்டிருக்கிற காரணத்தினால், ஆளும் கட்சிக்காரர்கள், பாராட்டிப் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. கட்டியிருக்கிற அணைக்கட்டுகள், அதனால் விவசாயத்திற்கு வந்திருக்கிற புதிய ஆயக்கட்டுகள், மின்சார விஸ்தரிப்பு, ஏற்பட்டிருக்கிற தொழில் நிறுவனங்கள், கட்டப் பட்டிருக்கிற கல்விக் கூடங்கள் இவற்றைக் காட்டிப் பேசினார்கள். தான் பெற்ற பிள்ளைகளுக்கு உணவும் உடையும் கொடுப்பது பெற்றோரின் கடமை. ஆனால் கொடுத்திருக்கிற உடையும் உணவும் எப்படி இருக்கிறது என்று பார்க்கப் புகுந்தால், அரைவயிற்றுக்கும் பற்றாத உணவு, கிழிந்த கந்தல் உடை, இவை, தான் மூன்று திட்டங்களிலே நாடு பெற்றிருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் அத்தனை பேரும் உணருவார்கள், நாடு உணரும். செலவு செய்திருக்கிற அளவுக்குப் பலன் கிட்டியிருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பலன் கிடைத்திருக்கிறது என்று ஏட்டில் போடலாம், ஆனால் நாட்டில் இல்லை. இதை நாங்கள் மட்டும் சொல்லவில்லை. மறைந்த மாணிக்கம் ஜவஹர்லால் நேரு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 'ஆயிரம் ஆயிரம் என்று செலவு செய்கிறோம், ஆனால் திட்டத்தின் பலன் எல்லாம் எங்கே போகிறது என்று புரியவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். முன்னாள் முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள், 'நான் மண் குடிசைகளைப் பார்க்கிறேன்; பிய்த்து போன கூரையைப் பார்க்கிறேன்; கிழிந்த ஆடையையும், உடைந்து உருண்டு கிடக்கும் வெற்றுக் கலயங்களையும்தான் பார்க்கிறேன். குழி விழுந்த கண்ணும், கூண் விழுந்த முதுகும் இவற்றைத் தான் பார்க்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். திட்டத்தினால் பலன் ஏற்பட்டிருக்குமேயானால், காட்சி வேறுவிதமாக இருந்திருக்க முடியும். பெருமைக்குரிய சில நிகழ்ச்சிகளாக, மதிய

உணவுத் திட்டமும், இலவச உடைகொடுப்பதும் ஆளும் கட்சியாரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. மூன்று திட்டங்கள் போட்டு நிறைவேற்றிய பின்னும் மதிய உணவு கொடுக்கவும், இலவச உடை கொடுக்கவும் தான் நிலைமை ம்இருக்கிறது. உணவும், உடையு கிடைக்குமா? அது கிடைத்தால்தான் பள்ளிக்குப் போகமுடியும், கரும்பலகை இலவசமாகக்கிடைக்குமா என ஏங்கி நிற்கும் நிலையில்தான் மாணவர்கள் வாழ்கிறார்கள். இது நாடு மூன்று திட்டங்களால் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதற்கு அறிகுறியாகுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஈயென இரத்தல் இழிந்தன்று,
ஈயேன் என்றல் அதினினும் இழிந்தன்று,
கொள் எனக்கொடுத்தல், உயர்ந்தன்று,
கொள்ளேன் என்றல் அதினினும் உயர்ந்தன்று”

என்று பாடினார் ஒரு புலவர். ஆனால் எப்பொழுதும், ‘கொடு’, ‘கொடு’, ‘கொடு’ என்று கேட்கும் நிலையில்தான் நாட்டை வைத்திருக்கிறோம். இது நாட்டின் வளத்தைக் காட்டுமா? கொடுப்போர்க்குக் கொள்வார் இல்லாக் குறைதான் உளது என்கிற நிலைமையை நாட்டிலே உண்டாக்கியிருந்தால், வளத்திற்குச் சான்றாகும். இன்றைக்கு இருக்கும் நிலை வளத்திற்கு அறிகுறியாகாது.

இன்றைக்கு விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. அந்த அளவுக்குத் தனிப்பட்டவர்களுடைய வருவாய் உயரவில்லை இரண்டும் ஒரு சீராகப் போக வேண்டும். இரண்டும் சமமாக அமையும் நிலையில்தான் சரி கட்ட முடியும். விலைவாசி ஏற்றம் அளவு மீறி இருக்கிறது; வருவாய் மிகக் குறைவாக இருக்கிறது. விலைவாசி ஏற்றம் வாங்கும் ஆற்றலை உரிஞ்சுகிறது. ஏழை எளியவர்கள் ஊசலாடுகிறார்கள். அவ்வாறு உரிஞ்சப்பட்டது, இலாபம் என்ற பெயரால் தொழில் நிறுவனங்களை அடைகிறது; அவ்வாறு பெற்ற லாபத்தில், ஒரு சிறு பகுதி மட்டுமே கூலி உயர்வு என்ற பெயரால் தொழிலாளிகளை அடைய பெரும் பகுதி முதலாளிகளே அடைகிறார்கள். ஆகவே, ஒரு சில இடத்தில் பொருள்கள் குவிகின்றன. இல்லாத இடத்தில் இல்லாமை நின்று கொண்டே இருக்கிறது. ஆக இந்த ஏற்றத்தாழ்வு மாறவேண்டும்.

“இன்றைக்கு நம்முடைய மாநிலம் பாராட்டுக்குரிய வகையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இரண்டாவது திட்டத்தை 150 கோடி என்று போட்டு, 188 கோடி செலவிட்டு இருக்கிறோம்; மூன்றாவது திட்டத்திற்கு 291 கோடி என்று போட்டு, 340 கோடி செலவழித்திருக்கிறோம்” என்று ஆளும் கட்சியினர் சொல்லுகிறார்கள். பணம் செலவாகி விட்டிருக்கிறது. உண்மை. ஆனால், அதன் மறைமுகப் பொருள் என்ன? 150 கோடியில் அடைய வேண்டியதை, நாம் 185 கோடி செலவழித்தால்தான் அடைய முடிந்திருக்கிறது. அதே மாதிரி. 291 கோடி செலவிட்டு அடைய வேண்டியதை, 340 கோடி செலவில் தான் அடைந்திருக்கிறோம். இது பாராட்டுக்குரிய ஒன்றா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.



திட்டச் செலவு பெருகியிருக்கிறதே தவிர, திட்டத்தினால் சாதனை பெருகவில்லை. இதற்கு உதாரணம் பின்னர்க் காட்ட விரும்புகிறேன். நிதி ஆதாரம் பொருத்தவரை, செலவிட்டதற்குக் கடன் வாங்கினோமா என்றால் இல்லை. சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறோம் என்கிறார்கள். எந்த முறையில்? மத்திய சர்க்காரின் உதவியில்லாமலே, முடித்திருக்கிறோம் என்கிறார்கள். திட்டத்தின் அளவுக்கு ஏற்றபங்கை, மத்திய அரசிடம் பெறமுடியாததை மறைத்து சாமர்த்தியமாகச் செய்திருக்கிறோம் என்கிறார்கள். கூடுதல் வரி விதிப்பு; வரி ஏமாற்றத்தைத் தடுத்தல்; திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவினங்களில் கடுமையான சிக்கனம், இவற்றின் காரணமாகச் சமாளித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த முறைதானா நல்ல முறை? முதலாண்டுத் திட்டம் முடியும் தறுவாயில் வரி நிலை என்ன? 56 கோடி ரூபாய்; இன்றைக்கு மூன்றாவது திட்ட காலத்தில் வரி நிலை 164 கோடி, கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது. வரி மூன்று மடங்கு அதிகமாகப் போட்டுவிட்டு, அந்த அளவிற்குச் சாதனையைக் காட்டுகிறார்களா என்றால் இல்லை. வள்ளுவர்,

“செய்தக்க அல்ல செயக்கெடும்”

என்று சொல்லியிருக்கிறார். செய்யக் கூடாத காரியத்தைச் செய்வதனால் கேடு உண்டாகும். தாங்கமுடியாத அளவுக்கு வரி விதிக்கக் கூடாது. அதைச் செய்திருக்கிறார்கள்.

“செய்தக்க செய்யாமை யானுங் கெடும்”

என்றும் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். எப்படி எப்படிச் சிக்கனம் செய்தார்கள்? பள்ளிக்கூடம் கட்டுவதில், மருத்துவ மனை கட்டுவதில், வீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பதில், பாதைகள் அமைப்பதில், குடி தண்ணீர் வசதி செய்து தருவதில், கழுநீர்க் கால்வாய் கட்டுவதில் சிக்கனம் காட்டினார்கள். இது செய்யலாமா? இன்றியமையாத தேவைகளைக் கட்டுப்படுத்திவிட்டு, வரிகளைப் போட்டுவிட்டு, இன்ன இன்ன நிதி ஆதாரங்களைப் பெற்றுவிட்டோம் என்று சொல்வது பெருமைக்குரியது தானா என்று அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

புதிதாக 160 கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து கடன் வாங்கப் போகிறார்கள். மூன்றாவது திட்டத்தில் திருப்பித் தர வேண்டிய கடன் தொகை 16.58 கோடி ரூபாய். நான்காவது திட்டத்தில் திருப்பித்தர வேண்டிய கடன் 37.75 கோடி ரூபாய். பழைய கடனைக் கொடுத்துவிட்டு புதிதாகத் திரும்பி வாங்கப் போகிறார்கள். புதிய நோட்டைக் கொடுத்துவிட்டு பழைய நோட்டை வாங்குவது போல் இது இருக்கிறது. “வட்டிக்குக் கடன் வாங்கி அட்டிகை பின்னி, அட்டிகையை விற்று வட்டி கொடுத்தான்” என்று கிராமப் புறங்களில் சொல்வார்கள். அப்படி, மேலும் கடன் வாங்கிக் கொண்டிருப்பது நல்ல பொருளாதார முறை தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

வேளாண்மைத் துறையில் நம்முடைய சாதனை எந்த அளவில் இருக்கிறது என்று பார்த்தால், வள்ளுவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சொன்ன பொருளாதார அமைப்பு இன்னும் அப்படியே இருக்கிறது. இந்த நாட்டினுடைய நிலைமை உழவை நம்பி வாழ வேண்டியதாக இருக்கிறது. "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்", உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து" என்றபடி, உழுதொழிலையே பெரும் பகுதியினர் நம்பி வாழ வேண்டிய நிலைதான் இன்றும் இருக்கிறது. தொழில்களைத் தாங்குவது உழவுத் தொழில் தான் என்ற அதே நிலைதான் இப்போதும் இருக்கிறது.

நம்முடைய தேசிய வருமானத்தில் 45 சத விகிதம் வேளாண்மைத் துறையிலிருந்து வர வேண்டியிருக்கிறது. அப்படிபட்ட வேளாண்மைத் துறையில் இவர்கள் சாதனை காட்டியிருக்கிறார்களா என்று பார்த்தால், முதல் திட்டத் துவக்கத்தில் உற்பத்தித் திறன் 38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. முதல் திட்டத்தின் இறுதியில் 44 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. இரண்டாம் திட்டத்தின் இறுதியில் 53 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்தது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில் நாம் எதிர்பார்த்தது 69.50 லட்சம் மெட்ரிக் டன். ஆனால், அடைந்த சாதனை 65 லட்சம் மெட்ரிக் டன் தான். இப்படி இருக்கும்போது எப்படி நான்காம் திட்டத்தில் 70 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்வோம் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் புத்தகத்தில் ஒரு ஏக்கருக்கு நெல் விளையக்கூடிய ஆற்றல் எந்த அளவிற்குப் பெருகியிருக்கிறது என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். திட்டக் குறிப்பின் 17-ம் பக்கத்தில் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏக்கர் ஒன்றுக்கு சராசரி மகசூல் 1950-51-ம் ஆண்டில் 1,016 இராத்தல் கிடைத்தது என்றால், 1955-56-ம் ஆண்டில் 1,213 இராத்தல் உயர்ந்திருக்கிறது. 1960-61-ம் ஆண்டில் 1,261 இராத்தல் தான் உயர்ந்திருக்கிறது. 1955-56-இல் 19.4 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. 1960-61-இல் 4 சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது. ஆக, நிலத்தினுடைய தரம் அந்த அளவோடு நின்றுவிட்டது, இனி உயர்வதற்கு வழி இல்லை என்ற நிலை உண்டாகியிருக்கிறது.

அடுத்து, பாசன வசதி பெறும் புதிய நிலப்பரப்பின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். முதல் ஆண்டுத் துவக்கத்தில் 21.95 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றிருந்தன. முதல் திட்டத்தில் 3.46 லட்சம் ஏக்கர் புதிய பாசனத்தின் கீழ் வந்திருக்கின்றன. இரண்டாவது திட்டத்தில் 2.11 லட்சம் ஏக்கர் புதிய பாசனத்தின் கீழ் வந்திருக்கின்றன. மூன்றாவது திட்டத்தில் 0.64 லட்சம் ஏக்கர் புதிய பாசனத்தின்கீழ் வந்திருக்கின்றன. புதிய பாசனத்தின் கீழ் வரக்கூடிய ஆயக்கட்டின் எண்ணிக்கை வர வரக் குறைந்து கொண்டிருக்கிறது. ஏக்கரின் உற்பத்தித் திறன் 19.4 சதவிகிதம் உயர்ந்திருக்கும்போது, புதிய ஆயக்கட்டு வாய்ப்பு இருந்த திட்ட காலத்தில் 9 லட்சம் மெட்ரிக் டன்னை உற்பத்தி





பண்ணக்கூடிய நிலையில் இருக்கும் சர்க்கார் உற்பத்தித் திறன் 4 சதவிகிதம் ஆகி, புதிய ஆயக்கட்டுக்கு வாய்ப்பற்றுப் போன நிலையில் 17 லட்சம் மெட்ரிக் டன் இலக்கை எப்படி அடைய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலும் ஒரு தவறு இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பின் தமிழ் மொழிபெயர்ப்பில் "9 லட்சம் மெட்ரிக் டன்" என்று போட வேண்டிய இடத்தில் "19 லட்சம் மெட்ரிக் டன்" என்று போட்டுவிட்டிருக்கிறார்கள். '19 லட்சம்' என்றால், தனியாக ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டால்கூட எட்ட முடியாத அளவிற்கு இருக்கிறது. ஆங்கிலத்தில் "9 லட்சம்" என்று போட்டிருக்கிறார்கள்; தமிழில் "19 லட்சம்" என்று போட்டிருக்கிறார்கள். இந்தப் பிழையையும் அமைச்சர் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். மற்றுமோர் இடத்தில் "விலைவாசி அடிப்படையில்" என்று போட வேண்டிய இடத்தில் "அடிப்பாடையில்" என்று போடப்பட்டிருக்கிறது. இப்படிப் பிழையில்லாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். பதினேழு லட்சம் மெட்ரிக் டன் நான்காவது திட்டத்தில் உற்பத்தி செய்தால் 18 அவுன்ஸ் கொடுக்க முடியும். ஆனால், இவர்களுடைய போக்கு, கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இவர்களுடைய சாதனை இவற்றைப் பார்க்கும்போது, நிச்சயமாக இவர்களால் 12 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேல் உற்பத்தி செய்ய முடியாது. ஆக, நாம் 12 அவுன்ஸைத்தான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எதிர்பார்க்க முடியும் என்ற வருத்தமான செய்தியை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பாசன வசதியைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய நாட்டிலே இனிப் புதிய பாசன வசதியை நாம் பார்க்க முடியாது. பருவ மழை இயல்பாகத் தவறுகிற நிலை வந்திருக்கிறது. அதிலும் கோடை காலத்தில் பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் போய் விட்டது. தென்மேற்கு பருவக் காற்றும் சிறு தூரலோடு நின்று விடுவது இயல்பாகிவிட்டது. ஆகவே, நிலத்தின் அடித்தளத்தில் இருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவரவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கிணற்றுப் பாசனத்தைத்தான் அது பெரும்பாலும் நம்பியிருக்கிறது. கிணறு எடுக்க ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம், மோட்டார் வாங்க இரண்டாயிரம் கொடுக்கிறோம் என்று சொல்வதெல்லாம் பயன்படாது. பாறைக் கிணறு ஒரு கன கஜம் எடுப்பதாக இருந்தால் ரூ. 12 முதல் ரூ. 15 வரை கொடுக்க வேண்டும். ஆயிரம் சதுர கஜம் உள்ள கிணற்றை எடுக்க ஒரு கஜத்திற்கு 1,500 ரூபாய் கொடுத்தால்தான் வெட்ட முடியும். அப்படி வெட்டினாலும் நீர் வராது. அதற்குப் பாறையைப் பிளக்க வேண்டும். பாறைகளைப் பிளக்கக்கூடிய பொறிகளை வடாற்காடு மாவட்டத்திற்குத் தந்து உதவினால் அங்கே அதிக மகசூலை எதிர்பார்க்க முடியும்.

[புலவர் கா. கோவிந்தன்] [6th August 1965

பாலாற்றுப் பாசனத்தை நம்பித்தான் வடாற்காடு மாவட்டம் வாழ்கிறது. பாலாற்றில் தண்ணீர் இல்லை. மைசூர் அரசாங்கத்தோடு பேசி அங்குள்ள அணையிலிருந்து பாலாற்றுக்குத் தண்ணீர் விட வழி வகை செய்ய வேண்டும் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செய்யாற்றுக்குத் தண்டரையிலே அணை கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாளாக இருந்து வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிந்திருக்க வேண்டிய திட்டம் இன்னும் எடுக்கப்படாமலேயே இருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் பார்த்து, நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசீய வருமானத்தில் விவசாயத் துறையின் பங்கு 45 சதவிகிதம் என்றால், தொழில் துறையின் பங்கு 19 சதவிகிதம் ஆகத்தான் இருக்கிறது. விவசாயத் துறையில் இருக்கிறவர்கள் மெல்ல மெல்லத் தொழிற்துறைக்கு வரும் வாய்ப்பு இருக்க வேண்டும். விவசாயத் துறை குறைந்து தொழிற்துறை பெருக வேண்டும். அதற்கான வழிவகை செய்யக்கூடிய வகையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமைய வேண்டும். தொழில் துறையில் முதலீடு செய்யும்போது, தனியார்த் துறை பொதுத் துறையைக் காட்டிலும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்த நிலை கூடாது என்பதை இங்கே தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பூர்வாங்க அறிக்கையை நான் வரவேற்கின்றேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவு வரையிலும், நம்முடைய இலக்கைப் பொறுத்த மட்டில், விவசாயத்தைத் தவிர எல்லா இனங்களிலுமே பூர்த்தி செய்தது மட்டுமல்லாமல், அதை மிஞ்சியும் வந்திருக்கிறோம். அரைகுறையாக இருக்கக்கூடிய விவசாய இனத்தைக்கூடச் சேர்த்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக சற்றேறக்குறைய 82 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நபர் ஒருவருக்கு 18 அவுன்ஸ் உணவுத் தானியம் கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையும் இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய அறிக்கையில் இருந்து இந்த ராஜ்யம் முழுவதிலும் உள்ள நீர் நிலைகள் கட்டுப்படுத்தப்பட்டு அவைகள் எல்லாம் முறையாக உபயோகப்படுத்தப்படுகின்ற செய்தி இங்கே கிடைக்கிறது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்த வரையில் திருநெல்வேலி ஜில்லா வாசிகளுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய சில வார்த்தைகளாவது இருக்கும். கேரளப் பகுதி வழியாக அரபிக் கடலில் கலக்கின்ற ஆறுகளின் தண்ணீரைத் தேக்கி, கிழ் பகுதிக்குத் திருப்பிவிடப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்த மத்திய அரசாங்கத்தின் மூலமாகக் கேரள மாநில அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன, அதற்குரிய பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதாக



6th August 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

வாவது சில வார்த்தைகள் முன்பு வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்பில் அதைப் பற்றிய பேச்சே இல்லை. பம்பையாறு திட்டம், கீரியாறுத் திட்டம் போன்றவை எந்த நிலையில் இருக்கின்றன, முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே பேசப்பட்ட அவற்றின் கதி என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நமக்குப் பக்கத்தில் உள்ள மாநில அரசாங்கம் நம்மிடத்தில் பல உதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் பகுதியில் இன்றைக்கு வீணாகப் போகின்ற ஆறுகளின் தண்ணீரைத் தேக்கி நம் பக்கம் திருப்பி விட்டுப் பயன்படுத்திக் கொள்ள அவர்களோடு வெற்றிகரமாகப் பேசி உடன்பாடு காண முடியாதா என்று கேட்க விரும்புகிறேன். அவற்றைச் செய்வதன் மூலமாக சங்கரன்கோயில், கோவில்பட்டி போன்ற இடங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான எக்கர் நிலப் பரப்பை நாம் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும்.

அதுபோல தாம்பிரபாணியில் இப்போது வறட்சி இருக்கிறது என்றாலும் அதில் ஏராளமான தண்ணீர் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் தென்பகுதி, நாங்குநேரி தென்பகுதி ஆகிய இடங்களுக்குக் கொடுத்து உதவ முடியும் என்று சொல்லப்பட்டது. அதைப் பற்றிய விவரம் இந்த அறிக்கையில் இல்லை. அதைப் பற்றியும் விவரம் வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் தேவை. அது பல காலமாகத் தயாரிக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்ட திட்டம். அது மிகவும் உபயோககரமானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல் திருநெல்வேலி தாம்பிரபரணி ஆற்றுப் பிரதேசங்களுக்கு அதிகப் பலன் அளிக்கக்கூடிய வகையில் "ரீ மாடலிங் ஆப் அப்பர் சானல்" திட்டம் பரிசீலனையில் இருந்து சில திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. தாம்பிரபரணியில் உள்ள கன்னடியன் அணைக்கட்டிற்கு 4½ லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டத்திற்கு இன்னும் அங்கீகாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக அந்தக் கால்வாய் புனர் அமைப்பு வேலை நடைபெறாமல் இருப்பதோடு கிட்டத்தட்ட 11 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு மேல் இன்றைய தினம் தண்டத் தீர்வைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. அதற்கு விமோசனம் கிடைப்பது தாமதமாகிறது. அதையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும். கடந்த சில மாதங்களுக்கு முன்பு மத்திய அமைச்சரோடு சேர்ந்து நமது மாநில அமைச்சர் எங்கள் மாவட்டத்திற்கு வந்து அங்குள்ள நீர்ப்பாசன ஆதாரங்களைப் பரிசீலனை செய்தார்கள். தாம்பிரபரணி அணைக்கட்டின் மேல் பகுதியில் உள்ள நீரைப் பயன்படுத்திக் கொள்வதோடு, பூமிக்கடியில் உள்ள நீரை அதிக அளவு கிணறுகளின் மூலம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகவும் சொல்லப்பட்டது. அதுபோல அங்கு குழாய்க் கிணறுகள் எடுப்பதற்கும் வசதி செய்து, மின்சாரத்தைப் பயன்படுத்த வழி செய்து கொடுத்தால் நல்லமுறையில் விவசாயம் செய்ய முடியும். தஞ்சை ஜில்லா, அதற்கு அருகாமையில் உள்ள இடத்தில் 25 ஆயிரம் குழாய்க்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [6th August 1965

கிணறுகள் எடுக்க ஏற்பாடாகி வருவதாகத் தெரிகிறது. இந்தத் திட்டம் மிகவும் வறண்ட பகுதியாக இருக்கும் நாங்குநேரி, திருச்செந்தூர், கோயில்பட்டி, சங்கரன்கோயில், ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமானால், அந்தப் பகுதியில் உள்ள சப்சாயில் வாட்டரை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும். இன்றுள்ள கஷ்ட நிலைமையை ஓரளவுக்கு அகற்ற முடியும். இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்குள்ள கஷ்டம் இப்போது போதுமான பவர் டிரில்கள் கிடைக்கவில்லை, வெளி நாட்டில் இருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது, இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் நம் அரசாங்கம் பல வருஷங்களாக வற்புறுத்தி முயற்சி செய்து வந்தும் கூட நல்ல பலனைப் பெறவில்லை என்பதை அறிந்து வருத்தமடைகிறேன். இந்த நிலைமையை மாற்ற நம் அரசாங்கம் என்ன என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். சில மெம்பர்கள் வேறு சில இடங்களைக் குறிப்பிட்டது போல் திருச்செந்தூர் கடலோரம், ஸ்ரீவைகுண்டம் கடலோரம் 90 அடிக்கு மேல் 100 அடிக்கு உட்பட்டு நீர் ஊற்றுகள்—ஆர்டீஷியன் வெல்ஸ்—அமைய வசதி இருப்பதாக அறிகிறேன். தோண்டப் பட்டால் பூமிக்கு ஐந்தாறு அடி மேல் வரை தண்ணீர் கொப்புளிக்கும் வேகமுடைய நீர் ஓட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்குரிய வழிவகைகளைக் காணலாம்.

மேலும், சமீபத்தில் அந்த மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஜியலாஜிகல் சர்வே மூலமாக அந்தப் பகுதியில் செம்பு கிடைக்கிறது, தாம்பரம் கிடைக்கிறது என்ற செய்தி வெளிப்பட்டு இருக்கிறது. அது ஒரு பெரிய ரெக்கார்டு. பழைய முறைப்படி இல்லாமல் புதிய முறையில் அந்தச் செய்திக்கு ஆதாரத்தை நல்ல முறையில் சேகரித்து அங்குள்ள கனிவளத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் அங்கே குதிரைமொழி ரிசர்வ் பாரஸ்ட் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏதாவது கனிவளம் கிடைக்கக் கூடுமா என்பது பற்றி நல்ல நிபுணர்களைக் கொண்டு ஜியலாஜிகல் சர்வே செய்யப்பட வேண்டும். இன்றைக்கு மழை காலத்தில் அங்கே தேங்கப்படுகிற தண்ணீர், அதையொட்டியுள்ள நஞ்சை நிலங்களையும் பாழ்படுத்தி ஊர் ஓரத்தில் உள்ள குளத்தையும் பாழ்படுத்தி வருகிறது. அதற்கு காண்டூர் பண்டு வேண்டுமென்று பல நாட்களாகக் கோரப்பட்டு வருகிறது. இதையும் நான்காவது திட்டத்தில் சேர்க்க வழி வகை செய்யப்படும் என்று நம்புகிறேன்.

அரசாங்கத்தினிடத்தில் நெல் மாத்திரம் அல்ல, மற்ற எல்லாப் பொருள்களும் கணிசமான அளவிற்கு ஸ்டாக் இருப்பதாகச் செய்தி கிடைக்கிறது. ஏக்கருக்கு சராசரி விளைவு அதிகரித்தே வந்திருக்கிறது. அப்படியானால் ஒரு பக்கத்தில் ஏன் விலையேற்றமும், இன்னொரு பக்கத்தில் பொருள் கிடைக்காத திண்டாட்டமும், ஒரு பக்கத்தில் ஒரு விலை, இன்னொரு பக்கத்தில் இன்னொரு விலை என்பதாக இருக்கிறது என்று தெரியவில்லை. இன்றைக்கு சென்னை



6th August 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

போன்ற நகர்ப்புறங்களில் உள்ள விலையையும், எங்கள் பகுதியில் உணவு தானியங்களுக்கு இருக்கக் கூடிய விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது—இங்கே ஒரு படி அரிசி 1¼ ரூபாய் என்றால் எங்கள் பகுதியில் 2¼ ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இருக்கும் நிலையைப் பார்க்கிறபோது இது விநியோக முறையில் ஏற்படுகின்ற தவறு, அல்லது அந்த மாவட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அதிகமான கட்டுப்பாடு காரணமா என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும்.

அடுத்து, கல்வி அடிப்படையில் ஒரு இலக்கைக் கொண்டு வந்தோம். ஆறு முதல் பதினொறு வயது வரை உள்ள எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகக் கல்வி கொடுக்க முடியும் என்று வைத்துக் கொண்ட இலக்கில் 92 சதவிகிதம்தான் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று கூறப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் நமக்கு இருக்கக் கூடிய வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு 6 முதல் 14 வயது வரை உள்ள தொகுதியினரில் 80 சதவிகிதம் பேர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டப்படி 15 வருஷத்திற்குள்ளாக, அதாவது 1965-ம் ஆண்டிற்குள்ளாக 6 முதல் 14 வயது வரை உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பது நோக்கம். இருந்தும் நம்முடைய நான்காவது திட்ட இறுதிக்குள் 6 முதல் 11 வயதுத் தொகுதி மாணவர்கள் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க முடியும் என்ற நம்பிக்கை—இப்போது 92 சதவிகிதம்தான் கொடுக்கப்படுகிறது—தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து வரக் கூடிய 11 முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களில் 80 சதவிகிதம் அல்லது நூற்றுக்கு நூறு ஆண்-பெண் இருபாலருக்கும் இலவசக் கல்வி அளிக்க முடியுமா என்பதையும் பரிசிலனை செய்ய வேண்டும்.

அடுத்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிற்பாடும் கூட நம்முடைய மாநிலத்தில் குடிதண்ணீர் வசதி இல்லாத ஊர் இருக்குமானால் அதற்கு நாம் அவமானப்பட வேண்டும். எனக்குத் தெரியும், அதுமாதிரி ஊர்கள் இருக்கின்றன. காரணம் அந்தக் கிராமத்தில் ஒரு குடிதண்ணீர்க் கிணறு வெட்ட வேண்டுமென்றால் கூட ஒரு சென்ட் நிலம் கிடைப்பதில்லை. நில ஆர்ஜிதம் செய்வதிலே தாமதம், பல தடங்கல்கள் எல்லாம் இருக்கின்றன. இதை வெறும் சாதாரண விஷயமாகக் கருதாமல் அவசரமானதாகக் கருதி—துரிதமாக வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு—ரெவின்யூ கிராமம் மட்டும் அல்ல—குடிதண்ணீர் வசதி இல்லாத ஒரு குக்கிராமம் கூட இல்லாதவாறு செய்ய நம் அரசாங்கம் முன்வர வேண்டும். எனக்குத் தெரியும், பெரிய கிணறுகள் உள்ள கிராமம். அதன் தண்ணீரை எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பினால் குடிப்பதற்கு அது லாயக்கற்றது என்று சொல்லப்படுகிறது. இன்னும் தொற்றுநோய்கள் பரவக்கூடிய இடங்கள் இருக்கின்றன. இங்கெல்லாம் உடனடியாகக் குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க 1-30 p.m.
வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [6th August 1965

அடுத்து, கடலோரப் பகுதிகளுக்கு நன்மைகள் செய்ய இந்த அரசாங்கம் கீழ்கடற்கரை ரோட்டிற்கு 9¼ கோடி ரூபாய் ஒதுக்கி வழி செய்திருக்கிறார்கள். அதைப்போல் குலசேகரப்பட்டினம், புன்னைக்காயல், வேப்பலோடை துறைமுகங்களின் அபிவிருத்திக்கு வழி செய்திருப்பது குறித்து மகிழ்ச்சி. புன்னைக்காயல் துறைமுகத்தை நடுத்தரத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய இருப்பது வரவேற்கத்தக்கது.

(The Deputy Speaker sounded the gong.)

SRI M. S. SELVARAJAN: I have spoken for ten minutes. If the Hon. Deputy Speaker were to desire that I should stop now, I shall stop and continue my speech tomorrow.

MR. DEPUTY SPEAKER: The hon. Member might speak for two or three minutes more and finish his speech. The time allotted for him is already over.

திரு. எம். எஸ். செல்வராஜன்: நான் நிச்சயமாக நம்புகிறேன், அங்கேயுள்ள சப் சாயில் எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது அங்கே எண்ணெய் வளம் அதிகமாக இருக்குமென்று. காவிரிக் கரையில் நடைபெறும் ஆராய்ச்சியைக் கடலோரமாக கன்னியாகுமரி வரையில் நீடித்தால் எண்ணெய் வளம் எவ்வளவு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். புன்னைக்காயல் துறைமுகம் எண்ணெய் ஏற்றுமதிக்காக மட்டும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று சொல்லவில்லை. அங்கே அதிகமான அளவிலே மீன் பிடிக்கப்படுகின்றது. ஆகவே, அந்த வகையில் அது ஒரு மீன்பிடி துறைமுகமாகவும் விளங்கும். சிறிய போட்கள் எல்லாம் அங்கே வந்து தங்கி நங்கூரம் பாய்ச்சி பந்தோபஸ்தாக இருப்பதற்கும் அது உதவிகரமான துறைமுகமாக இருக்கும். ஆகவே, அதற்குரிய பரிசீலனைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமங்களில் டாக்டர்கள் தொகை குறைவு. அவர்களுடைய சம்பளம் குறைவு. இவைகள் எல்லாம் ஒரு புறம் இருந்தாலும் கிராமங்களிலே உள்ள சிறிய சிறிய ஆஸ்பத்திரிகளில், பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் உள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு வீடும் கட்டித்தர வேண்டும். இதைப் போன்று பெண்கள் பள்ளிகளில் இருக்கின்ற பெண் ஆசிரியர்களுக்கும் பக்கத்திலேயே வீடுகள் அமைத்துத் தருவதை நாம் ஒரு இலக்காக வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக நான் முன்பே சுட்டிக்காட்டியதுபோல் கிராமங்களிலே ஆரம்பக் கல்வி 92 சதவிகிதம்தான் வெற்றிகரமாக வந்திருக்கிறது. நாம் இன்றைய தினம் ஒவ்வொரு கிராமத்திலேயும், 300 பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒரு பள்ளியை நிறுவிவிட்டோம் என்பதில் பெருமைப்படுகிறோம்.



6th August 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

அதேமாதிரி 200 பேர்கள், 250 பேர்கள் கொண்ட கிராமத்திலேயும், குக்கிராமங்களிலும்கூட ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தக்கூடிய அளவில் நாம் திட்டம் போட வேண்டும்.

அடுத்தபடியாக திருச்செந்தூர் போன்ற இடங்களுக்கு வெகு தூரத்திலிருந்து பிரயாணிகள் வருகிறார்கள். தேசமெங்கிலும் இருந்து வருகிறார்கள். இங்கே போதிய இடவசதி இருக்கிற காரணத்தால் தேசிய முக்கியத்துவமுள்ள ஒரு சுற்றுலா மாளிகையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேசத்தின் முக்கியமான இடங்களில் திருச்செந்தூர் ஒன்றாக இருந்தாலும்கூட இதற்கு ராஜ்ய நிதியிலிருந்துதான் நிதி ஒதுக்கீடு செய்து திட்டமிடுகிறோம். இங்குள்ள ஆஸ்பத்திரியை நல்ல வசதியுள்ள ஒரு ஆஸ்பத்திரியாக, பல இடங்களிலிருந்து வெகு தூரத்திலிருந்து பயணிகள் அடிக்கடி வருவதால், பல் சிகிச்சை, சிசு சிகிச்சை போன்ற வசதியுடன், ஆம்புலன்ஸ் வசதியுடன் வசதியுள்ள ஒரு ஆஸ்பத்திரியாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8–30 a.m. tomorrow. 1–32 p.m.

The House then adjourned.

## VII.—PAPER PLACED ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

189. *Notification issued with G.O. Ms. No. 1015, Education, dated the 14th June 1965 approving the list of all the parks and play-fields set out in the Schedule of the notification in the area within the jurisdiction of the Walajapet Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959.* [*Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).*]

190. *Notification issued with G.O. Ms. No. 2994, Industries, Labour and Co-operation, dated the 11th June 1965 amending the Madras Co-operative Societies Rules, 1963, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-865 of 1963, dated the 30th August 1963, at pages 1 to 50 of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 14th September 1963.* [*Laid on the Table of the House under section 119 (4) of the Madras Co-operative Societies Act, 1961 (Madras Act 53 of 1961).*]

[6th August 1965

191. *Notification issued with G.O. Ms. No. 919, Education, dated the 1st June 1965, approving the list of all the parks and play-fields set out in the Schedule of the notification in the area within the jurisdiction of the Kuzithurai Municipal Council, the same having been previously published as required by sub-section 2 of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959.)]*

## B. Reports, Notifications and other papers.

* 51. *The Madras Agricultural Produce Markets (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 19 of 1965) with annexure.*

* 52. *The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965 (L.A. Bill No. 20 of 1965).*

53. *Committee on Public Accounts (1964–65)—Report on the Accounts of the State of Madras for the year 1962–63.*

Y211, 31 N65
N65·31·3
64917